ஆகஸ்ட் 03 - 09, 2008 August 03 - 09, 2008 பக்கங்கள் - 28

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்


பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

SAARC
















# 'சார்க்' சாதிக்குமா?





வன்னித் தொலைபேசி இணைப்பு 'அவுட்'!
'சார்க்' முன்னேற்பாட்டு ஒழுங்காம்!

மனித உரிமைகளுக்கான
ஐ.நா.ஆணையாளராக
தமிழ்ப் பெண்மணி

கிழக்கு மாகாணத்தை மீட்டது போன்று வடக்கையும் மீட்கத் துடியாய்த் துடித்துக்கொண்டு போர்வெறி கொண்டு அலையும் அரசுத் தலைமை- சர்வதேச மட்டத்தில் விடு

இவர்களுக்கு எல்லாம் மேலாக கிளிநொச்சி, முல்லைத் தீவு ஆகிய இடங்களில் உள்ள விடுதலைப்புலிகளின் படை முகாம்கள் மீது தாக்குதல்களை ஆரம்பிக்கப் போகிறோம் என்கிறார்

மாநாட்டை ஒட்டி அறிவித்துள்ள பத்துநாள் போர்நிறுத்தம் முடிவுக்கு வந்தபின்தான் பெரும் மோதல் வெடிக்கப்போகின்றது.

மாவீரர் தின நிகழ்வை நடத்த வன்னியில் விடுதலைப் புலிகள்

நாடுகளில் பணம் வசூலிக்கிறார்கள். அந்த நிதி மூலம் ஆயுதங்களை வாங்கிக் குவித்து பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.எனவே அவர்களின் நிதிச் சேகரிப்பை

மீறல்களுக்கான குற்றச்சாட்டைச் சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தெற்கில் ஆடைத் தொழிற்சாலைகளின் ஏற்றுமதிக்கு வழங்கி வந்த ஜி.பி.எஸ்.+ என்ற வரி

# போர் நிறுத்தத்தின் பின்னர் அதிரப்போகும் வன்னிக்களம்

தலைப் புலிகளின் ராஜதந்திர காய்நகர்த்தல் மூலம் அரசுக்கு எதிராகக் கிளப்பப்படும் குற்றச்சாட்டுகளுக்குப் பதில்கூற முடியாது திணறிக் கொண்டிருக்கின்றது.

இலங்கையின் பொருளாதாரத்தை நாசமாக்கி, வளங்கள் யாவற்றையும் பயன்படுத்தி ஆயுததளபாடம் வாங்கிக் குவித்து, விடுதலைப்புலி



களுக்கு எதிரான போரைத் தீவிரமாக்கியுள்ளது அரசுத் தலைமை.

பொருள்களின் விலை உயர்வால் அல்லாடும் மக்களுக்காகப் போராட்டம் நடத்தும் சக்திகளை இரும்புக் கரத்தால் துவம்சம் செய்து-

அடுத்த பதவிக் காலத்துக்கும் தானே இந்நாட்டு ஜனாதிபதி என்பதை உறுதிப்படுத்துவதற்கு சிங்களமக்களின் முழு ஆதரவையும் பெறும் நோக்கில், வடக்கு- கிழக்கை மீட்கக் கங்கணம்கட்டி நிற்கிறார் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

மாவிலாறில் ஆரம்பித்த 'மனிதாபிமான நடவடிக்கை' என்ற இராணுவ நடவடிக்கை கிழக்கை மீட்டு இன்று வன்னியைச் சுற்றி மையம் கொண்டு நிற்கின்றது.

வன்னியை மீட்கும் போர் மூலம் விடுதலைப் புலிகளை முழுமையாக அழித்துவிடலாம் என்று இராணுவத் தளபதி

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அரச தரப்பில் இருந்து நிமிடத்துக்கு நிமிடம் வெளிவந்துகொண்டிருக்கும் தகவல்கள் எந்த நேரத்திலும் வடக்கு அரசின் கைகளில் விழும் என்பதுதான்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுற்ற சிங்கள மக்களின் எரிச்சலை இருந்து சமாளிக்க - தனக்கு ஏற்படும் அரசியல் நெருக்கடிகளைச் சமாளிக்க - அரச தரப்பில் இருந்து இப்படியான தகவல்கள் வெளியாகலாம். அவை நடைமுறையில் யதார்த்தமாகுமா என்பதே தற்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

வன்னியில் மன்னாரில் -

முல்லைத்தீவில் வெலிஓயாவில் -

யாழ்ப்பாணத்தில் முகமாலையில் -

என மூன்று முனைகளை திறந்து வைத்து, தனது சகல வளங்களையும் பயன்படுத்தி வன்னியை மீட்க அரசு வியூகம் வகுத்துள்ளது.

மன்னாரில், முல்லைத்தீவில் படையினரின் முன்னேற்றத்தை புலிகள் பெரிதும் கவனத்தில் எடுப்பதாகத் தோன்றவில்லை. முன்னேறி வரும் படையினரை வழிமறித்துத் தாக்கி, விரட்டியடிக்கும் தற்காப்பு யுத்தம் ஒன்றிலேயே அங்கெல்லாம் விடுதலைப் புலிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

கிழக்கில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கை போன்று இலேசாக வன்னியை மீட்க முடியாது. வன்னியை விட்டுக் கொடுக்கவும் புலிகள் தயாராகமாட்டார்கள். தமது முழு வளங்களையும் பயன்படுத்திப் படையினரின் நடவடிக்கையை அவர்கள் முறியடிக்கத்தான் வேண்டும். முறியடிக்கத்தான் போகிறார்கள்.

முன்னேறி வந்து எம் மீது தொடுக்கும் வலிந்த தாக்கு தலை முறியடித்து வருகின்றோம். சரியான பதிலடியை விரைவில் கொடுப்போம் என்று விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப்

இருக்கப் போவதில்லை என்று மார்தட்டும் இராணுவத் தளபதியின் கூற்றுக்குப் பதிலடி கொடுத்து வன்னியை மீட்டு சிங்களப் படைகளை விரட்டிவிடுவோம் எனப் புலிகளின் தளபதி அமுதாப் கூறுகின்றார்.

போர்நிறுத்த முடிவோடு வெடிக்கப் போகும் வன்னிச்சமர் விடுதலைப் புலிகளின் தலைவிதியை மட்டுமல்ல, முழுநாட்



டின் தலைவிதியையும் நிர்ணயிக்கப் போகின்றது.

அதுவே நாலாம் கட்ட ஈழப் போரின் இறுதியின் ஆரம்பமாகவும் அமையப் போகின்றது.



இவால்ஸ்



ரோஹி[illegible]லாகம

* * *

இலங்கையின் பெரும்போர் வெடிக்கக் காரணமாக இருந்த

முடக்க பயங்கரவாத அமைப்பாக பிரகடனம் செய்ய வேண்டும்.' இப்படி ஐரோப்பிய ஒன்றியத்தை இலங்கை வற்புறுத்தி வந்தது.

இலங்கையின் கோரிக்கையை ஏற்று ஐரோப்பிய ஒன்றியமும் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக பிரகடனம் செய்தது.

அதன் எதிரொலியாக, இலங்கையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட - ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம் பெறும் நாடுகளின் - கண்காணிப்பாளர்கள் வெளியேற வேண்டி ஏற்பட்டது.

எமது இயக்கத்தைத் தடை செய்த நாடுகளின் பிரதிநிதிகள் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டால், அவர்களின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாக இருக்கும் என விடுதலைப் புலிகள் அனுசரணையாளர்களான நோர்வேயிடம் தெரிவித்தனர்.

அந்தக் கோரிக்கையை ஏற்ற நோர்வே அந்த நாடுகளின் கண்காணிப்பாளர்களின் சேவையை முடிவுக்கு கொண்டு வந்தது.

இதன் காரணமாக போதிய பலம் இன்றி கண்காணிப்புக் குழு இலங்கையில் செயற்பட வேண்டிய இக்கட்டு நிலை

தோற்றுவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளை ஐரோப்பிய நாடுகளில் தடை

விலக்குச் சலுகையை நிறுத்தப் போவதாக ஐரோப்பிய ஒன்றியம் இப்போது இலங்கை அரசை மிரட்டத் தொடங் கியுள்ளது.

இந்த வரிச்சலுகையை இலங்கை அரசு தொடர்ந்து பெற வேண்டுமானால், மனித உரிமை பாதுகாப்பு விடயத்தைச் சீராக்க வேண்டும் ; அதிக முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும் என்று இலங்கைக்கு நிபந்தனைகள்



போடுகின்றது. ஐரோப்பிய ஒன்றியம்.

இலங்கை நிலைவரங்களை ஆராயும் நோக்கில் தமது பிரதிநிதிகளை அடிக்கடி இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் அனுப்பிக் கொண்டிருக்கிறது.

இந்த வகையில் கடைசியாக இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் நாடாளுமன்ற உறுப்பினர் றொபேட் இவான்ஸ் தலைமையில் குழு ஒன்று கடந்த வாரம் வந்திருந்தது.

அந்தக் குழு பலதரப்பட்டவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்ட தகவல் இலங்கைக்கு ஆத்திரத்தை ஊட்டியுள்ளது.

''பயங்கரவாதத்துக்கு எதிராகப் போரிடுவதாகக் கூறிக் கொண்டு இலங்கை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அப்பாவிப் பொது மக்களை கடுமையாகப் பாதித்துள்ளன.

''பொதுமக்கள் மத்தியில் பாரதூரமான பீதியை ஏற்படுத்தியிருக்கும் ஆள்கடத்தல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இலங்கை அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

''சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய அரச படைகளின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளால் அப்பாவி

## விடுதலைப் புலிகளைத் தடைசெய்வித்த அரசு இன்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் மாட்டியுள்ளது

லெப்டினன்ட்.ஜெனரல் சரத் பொன் சேகா சூளுரைக்கிறார்.

அதற்கு இரண்டு வருடங்கள் தேவை என அவர் கால அவகாசமும் கோருகிறார்.

வன்னியை மீட்டு விரைவில் வடக்கில் தேர்தல் நடத்தப் போவதாக ஜனாதிபதியின் ஆலோசகரும் அவரது சகோதரருமான பஸில் ராஜபக்ஷ கூறுகிறார்.

வன்னியை மீட்கும் காலம் தொலைவில் இல்லை. அந்தக் காலம் நெருங்கிவிட்டது என்கிறார் அவரது மற்றொரு சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷ.

பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் களமுனைத் தளபதிகள் கூறிவருகின்றார்கள்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு படை முகாம்கள் மீது பெரு மெடுப்பில் தாக்குதலை ஆரம்பிக்கப் போவதான ஜனாதிபதியின் அறிவிப்புப்படி-

படையினர் பெரும் தாக்குதலை ஆரம்பித்து அகலக்கால் வைக்கும் போதுதான் வன்னி அதிரப்போகிறது. பெரும் தாக்குதல் இடம்பெறப்போகின்றது. அப்போதுதான் புதிய செய்திகள் வெளிவரும்.

விடுதலைப் புலிகள் 'சார்க்'

ஐரோப்பிய ஒன்றியம் இன்று தனது குழுக்களை அடிக்கடி கொழும்புக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றது.

கடத்தல்கள், கொலைகள், ஊடகவியலாளர் மீதான தாக்குதல்கள், கைதுகள் என மலிந்து போய் கிடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது.

சமாதான காலத்தில் 'விடுதலைப் புலிகள் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். அந்தப் பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக ஐரோப்பிய

செய்வித்த இமாலய சாதனையின் மூலம் இலங்கை அரசு புரிந்து மோதல்கள், வன்செயல்கள் தீவிரமாக கால்கோளிட்டது.

அப்போது ஆரம்ப மான வன்செயல்கள், மோதல்கள்தான் இன்று நாட்டை உலுக்கிக்கொண்டிருக்கின்றன. மேலும் உலுக்கப் போகின்றன.

விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்பு எனக் கூறி சர்வதேசத்தை நம்பவைத்த அரசு, இன்று தனது அரச பயங்கரவாதம் மூலம் புரிந்து கொண்டிருக்கும் மனித உரிமை

**யாழவன்**

மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்''

- இப்படி அந்தக் குழுவின் தலைவர் றொபேட் இவான்ஸ் தனது கருத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஜி.பி.எஸ்+ வரிச்சலுகையை தொடர்ந்து பெறுவது குறித்த பிரச்சினைகளுக்கான தீர்வு இலங்கை அரசாங்கத்திடமே உள்ளது என்று தெரிவித்துள்ள அவர், வரிச்சலுகையைத் தொடருவது என்பது சந்தேகத்துக்

(27ஆம் பக்கம் பார்க்க)

# வன்னித் தொலைபேசி இணைப்பு 'அவுட்'! 'சார்க்' முன்னேற்பாட்டு ஒழுங்காம்!

**வி.சிவராம்**



யுத்தபூமியில் செய்மதித் தொலைபேசி

'சார்க்' மாநாட்டை ஒட்டி அதிரடியாகப் புலிகள் மேற்கொண்ட காய்நகர்த்தல் இலங்கை அரசுத் தரப்புக்கு நல்லதொரு இராஜதந்திரப் பூட்டாகப் போய் விழுந்திருக்கின்றது.

இதனால் குழம்பிப்போய் இருக்கும் அரசுத் தரப்பு என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறுவதும் வெளிப்படையாக தோற்றவே செய்கின்றது.

தென்னாசிய பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பின் தலைவர் என்று கிரீடத்தை நாட்டின் அதிபர் மஹிந்த ராஜபக்ஷவுக்குச் சூட்டும் ஒரே இலக்கை அடைவதற்காகப் பெரிய கோளாறுகளைத் தரும் மாநாட்டை நடத்துகின்ற பொறுப்பை வலிந்து, வேண்டிப் பெற்றுக் கொண்டது இலங்கை.

பலநூறு கோடி ரூபா செலவு, பாதுகாப்பு உட்பட பல விடயங்களில் ஏகக்கெடுபிடி என்று 'சார்க்' ஏற்படுத்தியுள்ள குழப்பங்களும், தொல்லைகளும் நீண்ட பட்டியலிடக்கூடிய விவகாரங்கள். அவற்றை விட்டுவிடுவோம்.

விடுதலைப் புலிகளோடு வடக்கில் பல முனைகளில் கொடூர யுத்தத்தை முன்னெடுத்தபடி தலைநகரில் ஒரு சர்வதேச மாநாட்டை இலங்கை நடத்தத் தீர்மானித்தபோதே, யுத்தத்தின் தாக்கம் மாநாட்டைப் பாதிக்குமா என்பது குறித்து இலங்கை அரச உயர்பீடம் சிந்திக்காமல் இல்லை.

தமிழர் தாயகம் மீது கொடூரப் போரைத் திறந்தால் அது தென்னிலங்கையிலும் ஒவ்வொரு வீட்டு வாசல்படியையும் தட்டும் என்று புலிகள் ஏற்கனவே எச்சரித்து வந்ததால் - அதைத் தொடர்ந்து செயலிலும் புலிகள் நிரூபித்து வந்தமையால் - இந்த விவகாரத்தைக் கவனத்தில் எடுக்காமல் 'சார்க்' மாநாட்டை அரசுத் தரப்பு ஆயத்தப்படுத்தவில்லை.

அப்படி 'சார்க்' சமயத்தில் புலிகள் தாக்கினால் - போரின் அதிர்ச்சி அலைகளைத் தென்னிலங்கையில் பரவவிட்டால் - அது புலிகளுக்கு பயங்கரவாதப் பட்டத்தை மேலும் இறுக்கமாகக் குத்தி, சர்வதேச சமூகத்தை அவர்களுக்கு எதிராக மேலும் இலகுவாகத் திருப்பக்கூடிய வாய்ப்பைத் தரும் என்றே கொழும்பு கணக்கிட்டது.

எனவே, புலிகளுக்கு எதிரான சர்வதேச பிரசார செயற்பாட்டில் புலிகளாகவே வந்து விழக்கூடியதாக அவர்களைச் சிக்கவைக்கும் வலைவிரிப்பாகவும் - பொறியாகவும் - இந்த 'சார்க்' மாநாட்டைக் கொழும்பில் நடத்தும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆனால், பொறிக்கே பொறி வைத்தால் போல - 'செக்மேட்' பண்ணியது புலிகளின் இராஜதந்திரம்.

கொடூரப் போர் நிகழும் ஒரு தேசத்தில் - மரணங்கள் மலிந்த பூமியில் - நடக்கும் சர்வதேச மாநாட்டுக்கு, தமது நாட்டின் தலைவர்களையும், உயரதிகாரிகளையும், ஊடகவியலாளர்களையும் அனுப்புவதா என்று குழம்பிக் கொண்டிருந்த சார்க் நாடுகளின் தலைமைகளின் வயிற்றில் பால் வார்த்ததுபோல கடைசி நேரத்தில் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை அறிவித்தது புலிகளின் தலைமை.



காட்டுக்குள் செய்மதித் தொலைபேசி

யுத்தநிறுத்தத்தை அறிவித்தமை மட்டுமல்லாமல் 'சார்க்' மாநாடு வெற்றிபெற வாழ்த்தி, 'சார்க்' நாடுகளுக்கான நல்லாதரவையும் புலிகள் வெளிப்படுத்தித் தங்களை ஒரேநாளில் உயர்த்திக்கொண்டார்கள்.

சார்க்கை ஒட்டிய களநிலைமையும், சர்வதேச நிலைப்பாடும் ஒரே நாளில் ஊசல் போல புலிகள் பக்கம் சாய்ந்து விட்டதால் அதிர்ந்து போன கொழும்புத் தலைமை அதனால் குழம்பியும் கூடப் போனது.

'சார்க்' சமயத்தில் கொழும்பில் சர்வதேச சமூகப் பிரதிநிதிகளும், ஊடகவியலாளர்களும் திரண்டிருக்கும்வேளையில் பலரின் கண்களும் கொழும்பைவிட கிளிநொச்சியின் மீதே அதிகம் பதிந்திருக்கும் என்பதை உணர்ந்து கொண்ட கொழும்பு, அந்த வாய்ப்பை - சந்தர்ப்பத்தை - புலிகள் சாதுரியமாக தமக்குச் சார்பாகப் பயன்படுத்துவார்களாயின் - அது 'குளிக்கப் போய் சேறைப் பூசிக்கொண்டது போல' சார்க் மாநாட்டை நடத்தப்போய் புலிகளுக்கு மேலும் பிரசார வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டதாகப் போய்விடும் என்பதையும் புரிந்து கொண்டுவிட்டது.

புலிகளின் மையத்தளமான வன்னிக்குச் செல்வதற்குரிய தரைப் பாதையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்து நுணுக்கமாக அவதானித்துவரும் கொழும்பால், மற்றைய தொடர்பாடல் முறைகளை அப்படிக் கவனித்துக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துவது இயலாத காரியமாகும்.

எனவே, அந்தத் தொடர்பாடல் வாய்ப்புகளையே முற்றாகத் துண்டிப்பதன் மூலம் வன்னிக்கும் சர்வதேசத்துக்கும் - குறிப்பாக 'சார்க்' சமயத்தில் கொழும்பில் வந்திருக்கும் 'சார்க்' தரப்புகளுக்கும் வன்னிக்கும் - இடையிலான தொடர்பாடல் வாய்ப்புகளை முற்றாக வெட்டிவிட கொழும்பு தீர்மானித்தது.

புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்பு வந்த அடுத்த ஓரிரு தினங்களில் கிளிநொச்சிக்கான தொலைபேசி இணைப்புகள் யாவும் துண்டிக்கப்பட்டன. கடந்த ஒருவார காலமாக கிளிநொச்சிக்கான தொலைபேசிகள் துண்டிக்கப்பட்டதால் அங்கிருந்து இணையத்தள வலை அமைப்புகள் ஊடான தொடர்பாடல்களும் 'அவுட்' ஆகிவிட்டன.

இந்தத் துண்டிப்பு மூலம் மூன்று விடயங்களை எட்டமுடியும் எனக் கொழும்பு கருதியிருக்கும்.

ஒன்று - 'சார்க்' சமயத்தில் வன்னியிலிருந்தபடி புலிகளின் தலைமை மேற்கொள்ளக்கூடிய சர்வதேசப் பிரசாரங்களுக்கு இடமளிக்காமல் பண்ணுவது.

அடுத்தது - வன்னியில் தமிழர் தாயக மண்மீது கொழும்பு அரசு தொடுத்திருக்கும் கொடூர கோரப் போரின் விளைவால் அங்கு ஏற்பட்டிருக்கும் மனிதப் பேரவலம் பற்றிய செய்திகள் தத்ரூபமாக 'சார்க்' பிரதிநிதிகளுக்கு மாநாட்டு சமயத்தில் எட்டுவதைத் தடுப்பது.

மூன்றாவது - 'சார்க்' மாநாட்டுக்கு வரும் பலநாடுகளினதும் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோருடன் புலிகளுக்கு ஏதேனும் தொடர்பாடல் ஏற்படாமல் தடைசெய்வது.

கிளிநொச்சிக்கான சுமார் ஐந்நூறு தொலைபேசி இணைப்புகளைத் துண்டித்துள்ள பாதுகாப்புத் தரப்பு அதன்மூலம் மேற்படி தனது இலக்குகளை எட்டியதா என்பதைப் பொறுத்திருந்து மாநாடு முடிந்து, பிரதிநிதிகளும் ஊடகவியலாளர்களும் தத்தமது நாட்டுக்குத்திரும்பிய பின்னரே ஓரளவுக்கு அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறு வன்னிக்கான தொலைபேசிச் சேவை துண்டிக்கப்பட்டு, தொடர்பாடல் தொடர்பாகக் கொழும்பு விரிக்கும் இருளில் சிக்குவது புலிகளுக்கு ஒன்றும் புதிய விடயமல்ல. பல தசாப்தங்களாக நீடித்த விவகாரமே அது.

அந்த இருளை அகற்றும் விதத்தில் 'சுய ஒளி' பரப்பும் வசதிகளைப் புலிகள் தம்வசம் கொண்டிருக்காமல் இல்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

இலங்கை அரசின் தொலைத் தொடர்பு பிரிவுடன் தொடர்புபடாமலேயே செய்மதிமூலமான தொலைபேசி தொடர்புகளையும், இணையத்தள வலைப்பின்னல் வசதிகளையும் புலிகள் தாராளமாக பேணியே வருகின்றார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்த விவகாரம்.

அரசின் தொலைபேசிச் சேவைத் துண்டிப்பின் பின்னரும் களமுனை யுத்தம் தொடர்பான அன்றாடத் தகவல்கள் புலிகள் சார்பு இணையத்தளங்களுக்கு வழமைபோல - தாராளமாக - காலம் பிந்தாமல் - கிடைத்தே வருகின்றன. அதில் எந்தப் பாதிப்பும் இல்லை.

அதைக் கருத்தில் எடுக்கும்போது இவ்வாறு தொலைபேசிச் சேவையைத் துண்டிக்கும் கொழும்பின் எத்தனம் புலிகளுக்கு பெரும் பாதிப்பு எதையும் ஏற்படுத்தவில்லை என்பது தெளிவு.

இதேசமயத்தில் 2001 ஜூலையில் கொழும்பில் கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீது 14பேர் கொண்ட விடுதலைப் புலிகளின் கொமாண்டோ அணி ஒன்று அதிரடித் தாக்குதல் நடத்திய சமயம் அந்த அணி வன்னியிலிருந்த தமது கட்டளைப்பீடத்துடன் கைத்தொலைபேசி மூலமே உரையாடியபடி, கட்டளைகளைப் பெற்றுத் தாக்குதல் நடத்தியமை பற்றிய செய்திகள் அப்போது வெளிவந்தமையும் கவனிக்கத்தக்கது.

அவ்வேளையில் வன்னியில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - இலங்கை அரசின் தொலைபேசி வலையமைப்பே செயற்படவில்லை.

அப்படியிருந்தும், அச்சமயத்தில் வவுனியாவில் உள்ள தொலைபேசி வலையமைப்புடன் வன்னிக்காட்டில் தமது மையத்துக்கு திருட்டுத்தனமாக இணைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் கட்டுநாயக்கா தளம் மீதான தாக்குதல் நடத்திய கொமாண்டோ அணியுடன் புலிகளின் தலைமை கடைசிநேரம்வரை தொடர்பாடலை சுமுக மாக - இலகுவாக - பேணி வந்தது என்று அப்போதே செய்திகள் வெளியாகியமை கவனிக்கத்தக்கது.

யாழ்.குடாநாட்டுக்கான சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புகளைத் துண்டித்து, அதனைத் தீவிர கண்காணிப்புக்குள் அரசுத்தலைமை கொண்டுவந்ததும் கூட இந்தப் பின்னணியில் தான் எனக் கருதப்படுகின்றது.

எனவே, இப்போதும் கூட செய்மதிகள் ஊடான தொலைபேசி வசதிகளை புலிகள் கொண்டிருந்தாலும் -

கொழும்பு சார்க் மாநாட்டுக்காக வந்திருக்கும் தரப்புகள் மற்றும் ஊடக வியலாளர்கள் இந்தச் செய்மதித் தொலைபேசி இணைப்புப் பற்றிய தகவல்களைப் பெற்று, அதனைப் பயன்படுத்தி புலிகளுடன் தொடர்பாடலை மேற்கொள்ள அவர்களுக்கு வாய்ப்பும், நேரமும் சந்தர்ப்பமும் கிட்டுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

'சார்க்' மாநாட்டை ஒட்டி கொழும்புக்கு வரவிருந்த - வந்த - சர்வதேச ஊடகவியலாளர்கள் பலர், முற்கூட்டியே இங்குள்ள தமது சக ஊடகவியலாளர்களுடன் தொடர்புகொண்டு அவர்கள் மூலம் ஆகக் குறைந்தது புலிகளின் மூத்த தலைவர்களுடன் ஒரு தொலைபேசிப் பேட்டியையாவது பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தமையை அறியமுடிந்தது.

அத்தகைய ஊடகவியலாளர்களின் எத்தனத்தில் மேற்படி தொலைபேசிச் சேவையைத் துண்டிப்பு மண்விழுத்திவிட்டது என்பது உண்மையே.

ஆனாலும், இதுவரை ஒழுங்காக இருந்த வன்னிக்கான தொலைபேசிச் சேவையை இப்படித் திடீரென இலங்கை அரசு வெட்டியது, தமிழரின் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் ஒரு தரப்பின் கருத்தை மட்டுமே உலகுக்கு எட்டவிட்டு, மறுதரப்பின் நியாயத்தை மூடி மறைப்பதில் கொழும்பு கண்ணும் கருத்துமாக இருக்கின்றது என்ற உண்மையை 'சார்க்' மாநாட்டுக்கு வரும் சர்வதேச தரப்புகளுக்கு இலகுவாக உணர்த்தாமலில்லை என்பதும், நாம் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

'சார்க்' மாநாடு முடிந்த பின்னரும் மேற்படி வெட்டப்பட்ட இந்தத் தொலைப்பேசிச் சேவையை மீள வழங்கும் எண்ணம் அரசுத் தலைமைக்கு இல்லை என விடயமறிந்த தரப்புகள் கூறுகின்றன. ★

# 2000இல் புலிகள் அறிவித்த ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தம்!



**இரண்டாயிரமாம் ஆண்டு பிற்பகுதியில் அப்போதைய சந்திரிகா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மனிதாபிமானப் 'புரிந் துணர்வு உடன்படிக்கை' ஒன்றை உரு வாக்க நோர்வே அனுசரணைத் தரப்பினர் முயன்றிருந்த வேளை அது.**

**அச்சமயத்தில் கட்டவிழ்ந்த நிகழ்வுகளை புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் பின்வரு மாறு கூறுகின்றார்:-**

புரிந்துணர்வு உடன்படிக்கைத் திட்ட வரைவின் யோசனைகளைத் தாங்கள் முழுமனதோடு பரிசீலித்து வருவதாக புலிகள் இயக்கம் நோர்வே அரசிற்கு அறிவித்தது. 2000ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி தனது வருடாந்த மாவீரர் நாள் உரையில் இதுபற்றிக் குறிப்பிட்ட தலைவர் திரு.பிரபாகரன், "போர் நெருக்கடி தளர்ந்து இயல்புநிலை தோன்றுவதற்கு இரு தரப்பிலிருந்தும் நம்பிக்கையை வளர்க்கும் நல்லெண்ண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென நோர்வே அரசாங்கம் யோசனைகளைத் தெரிவித்திருக்கின்றது. இதனை நாம் ஆர்வமாகப் பரிசீலித்து வருகின்றோம். எமது மக்கள் அனுபவிக்கும் துன்பச் சுமை குறைந்து, பரஸ்பர நல்லெண்ணம் நிலவும் சமாதானச்சூழல் தோன்றுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை நாம் வரவேற்கிறோம். அதற்கான முன்முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமானால், நாமும் நல்முடிவுகளை எடுப்போம்" என்று தெளிவாகக் குறிப்பிட்டார்.

ஆனால், நோர்வேயின் முயற்சிகளுக்குப் பதிலளிப்பதைச் சந்திரிகா அரசாங்கம் தாமதப்படுத்தியது. அதேவேளை, நோர்வே அரசாங்கத்



திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு காண்பதில் தமக்கிருக்கும் நேர்மையான ஈடுபாட்டையும், மனப்பூர்வமான விருப்பத்தையும் காட்டுவதற்காக, விடுதலைப் புலிகள் இயக்கம், ஓர் ஆச்சரியமூட்டும் நகர்வாக, ஒருதலைப்பட்சமான ஒருமாதகாலப் போர்நிறுத்தம் ஒன்றை 2000ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் திகதி நள்ளிரவிலிருந்து அறிவித்தது. சமாதான முயற்சிகளுக்குத் துணையாகப் புலிகள் இயக்கம் எடுத்த ஒரு நல்லெண்ண நடவடிக்கை அது. இது பற்றிப் புலிகளின் செய்திக்குறிப்பு இவ்வாறு தெரிவிக்கின்றது:

*"2000 ஆம் ஆண்டு, டிசம்பர் 24ஆம் நாளிலிருந்து, 2001 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் நாள் வரை ஸ்ரீலங்கா ஆயுதப் படைகளுக்கு எதிரான அனைத்துப் பகை நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும் பிரதம இராணுவத் தளபதியுமான திரு.வே.பிரபாகரன் தமிழ்த் தேசிய இராணுவத்தின் சகல படையணிகளுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.*

*நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் ஆகிய திருநாட்கள் நிகழப்போகும் பண்டிகைக் காலத்தில் அமைதிபேணுமாறு சிறீலங்கா அரசாங்கம் தனது ஆயுதப்படைகளுக்கு உத்தரவு பிறப்பிக்கும் என்ற நம்பிக்கையுடன் நாம் ஒரு தலைப்பட்சமாக இப்போர் நிறுத்தத்தை அறிவிக்கிறோம். சமாதானத்திலும், பேச்சுகள் மூலமான அரசியல் தீர்விலும் எமக்குள்ள நேர்மையான, ஆழமான அபிலாசையைக் குறிக்கும் நல்லெண்ண வெளிப்பாடாகவே எமது போர் நிறுத்த முடிவைக் கருதவேண்டும். யுத்த நெருக்கடியைத் தணித்து, இயல்பான நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்க இடமளிக்கும் நோக்குடனேயே நாம் அமைதிபேணத் தீர்மானித்தோம்.*

*எமது படையணிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளை நிறுத்தி, பரஸ்பர நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கையாக நோர்வேயின் புரிந்துணர்வுத் திட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்த சிறீலங்கா அரசு முன்வருமானால், நிலையான போர்நிறுத்தத்திற்கும் நேரடிப் பேச்சுகளுக்கும் வழிகோலும். நல்லெண்ணப் புறநிலையை உருவாக்கும் பொருட்டு அமைதி பேணும் காலத்தை மேலும் நீடிக்க விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது."*

விடுதலைப் புலிகளின் நல்லெண்ணச் சமிக்கையை சிறீலங்கா அரசாங்கம் நிராகரித்தது. 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 23ஆம் நாள், ஜனாதிபதியின் செயலகம் வெளியிட்ட அறிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசபடைகளின் தாக்குதல் நடவடிக்கைகள் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது. போர் ஒய்வுக்கான புலிகளின் பிரகடனத்தை நிராகரித்ததுடன், சமரசப் பேச்சுகளுக்கு முன்னதாக நல்லெண்ண சமிக்ஞைகள் அவசியமில்லை எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாகப் போருக்கு ஓய்வுகொடுத்து, அமைதிபேணுவது அவசியமில்லை என்பதே சந்திரிகா அரசாங்கத்தின் கண்டிப்பான நிலைப்பாடாக இருந்தது. பேச்சுகள் ஆரம்பமாகி, ஒரு திருப்திகரமான முன்னேற்றத்தை எட்டிய நிலையிலேயே பகை நிறுத்தம் பற்றி பரிசீலனை செய்யலாமென அரசாங்கத்தின் அறிக்கை தெளிவுபடுத்தியது. இன்னொருவகையில், சொல்வதாயின் சந்திரிகாவின் அரசாங்கம் இராணுவ அணுகுமுறையைக் கைவிடத் தயாராக இல்லை. ஒருபுறம் சமரசப் பேச்சுகளை நடத்திக்கொண்டு, மறுபுறம் புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளைத் தொடர்வதையே சந்திரிகா விரும்பினார். ஜனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் ஏற்கமறுத்தனர். சண்டையையும் செய்துகொண்டு சமரசத்திலும் ஈடுபட விடுதலைப் புலிகள் தயாராக இல்லை. இருதரப்பினருக்கும் மத்தியில் நிலவிய இந்த முரண்பாடு நோர்வேயின் சமாதான முன்முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டது.

அந்த வரலாற்றுக் காலகட்டத்தில், சிறீலங்காவின் படைத்துறை ஒரு பாரதூரமான நெருக்கடியை எதிர்கொண்டு நின்றது. பல ஆயிரக் கணக்கான படையினரின் உயிர்களைப் பலி கொடுத்து, "வன்னிப் பெரும் சமர்களில் பாரிய பின்னடைவுகளை இராணுவம் சந்திக்கநேர்ந்தது.

'ஓயாத அலைகள்' என்ற குறியீட்டுப் பெயருடன், விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக ஏவிவிட்ட வலிந்து தாக்குதல் படை நடவடிக்கைகள், 'வெற்றிகொள்ளமுடியாத இரும்புக் கோட்டைகள்' என இராணுவத்தால் கருதப்பட்ட படைத்தளங்கள் எல்லாவற்றையுமே தகர்த்தெறிந்தன. வன்னிப்படை எடுப்பில் தொடர்ச்சியாக விளைந்த நாசகரமான தோல்விகளும், ஈற்றில் ஆனையிறவுப் படைத்தளத்தின் வீழ்ச்சியும், சிறீலங்கா தரைப்படையின் போரிடும் வல்லமையை மோசமாகச் சீரழித்திருந்தன. ஆனால், மறுபுறத்தில் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், சிங்களத்தின் வன்னிப் படையெடுப்பை முறியடித்தமையும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த படைத்தளங்களையும் பட்டினங்களையும் கைப்பற்றியமையும் தமிழீழ போரரங்கின் இராணுவச் சமநிலையில் புலிகளை மேலோங்க வைத்த அபாரமான போரியல் சாதனைகளாகும்.

இந்தத் தொடர்ச்சியான போர்க்கள வெற்றிகளை அடிக்கற்களாக இட்டுக் கட்டியெழுப் பப்பட்ட மிக உறுதியான இராணுவப் பலத்தில்

**'சார்க்' உச்சி மாநாட்டை ஒட்டி விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தம் ஒன்றை அறிவித்திருக்கும் இச்சமயத்தில், முன்பொரு தடவையும் 2000 ஆம் ஆண்டு டிசெம்பரில் இப்படிப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தை அறிவித்த சூழ்நிலையை மீட்டுப்பார்ப்பது பொருத்தமானதாக இருக்கும்.**

**அது குறித்து புலிகளின் மதியுரைஞர் 'தேசத்தின் குரல்' அன்டன் பாலசிங்கம் வரைந்த குறிப்பு இங்கு மறுபிரசுரமாகின்றது.**

**அப்போது, தங்களின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்புக்கு, அப்போதைய கொழும்பு அரசிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் என்று விடுதலைப் புலிகள் எதிர்பார்த்தனர் என்பது அந்த அறிவிப்பிலேயே பிரதிபலித்தது.**

**ஆனால், இப்போதைய ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்பில், தமது நல்லெண்ண அறிவிப்புக்குக் கொழும்பு அரசின் சாதகமான பதில் கிடைக்கும் எனப் புலிகள் எதிர்பார்க்கவே இல்லை என்பதும் தெளிவு. புலிகளின் இந்த யுத்தநிறுத்த அறிவிப்பில் அதுவும்கூட பிரதிபலிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.**

இருந்தவண்ணமே, 2000 ஆம் ஆண்டு டிசம்பரில் - நத்தார் பண்டிகையை முன்னிட்டு - ஒரு தலைப்பட்சமான போர்நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் பிரகடனம் செய்தனர். அத்தோடு, யாழ். குடாவையும், மன்னார் தீவுப்பகுதியையும் தவிர, வடபிராந்தியத்தின் முழு நிலப்பரப்பிலும், கிழக்குப் பிராந்தியத்தின் மிகப்பெரும் நிலப் பரப்பிலும் விடுதலைப் புலிகள் தங்கள் நிர்வாகக் கட்டமைப்பை நிறுவியிருந்தனர். இவ்வாறாக, ஒரு பலமான இராணுவ மேலாதிக்க நிலையில் இருந்தவாறும் தமிழர் தாயகத்தின் பெரும் பரப்பில் ஒரு நிழல் அரசாங்கத்தை நிர்வகித்த வண்ணமுமே சமரச அரசியல் பேச்சு மேசையில் அமர்வதில் தமக்கிருக்கும் ஆர்வத்தைப் புலிகள் குறிப்புணர்த்தினர். ஆனால், சமாதானத்துக்கான பிரபாகரனின் அழைப்பை சந்திரிகா அம்மையார் நிராகரித்தார். சந்திரிகா அம்மையாரிடம் கபடமான உள்நோக்கங்கள் இருப்பதாகப் புலிகளை அது கருதவைத்தது. புலிகளின் போரிடும் வல்லமையைத் தகர்த்த பின்னரே அவர்களை பேச்சுவார்த்தை மேசையில் சந்திப்பது என்ற தனது 'சமாதானத்திற்கான போர்' மூலோபாயத் திட்டத்தைக் கைவிட அவர் தயாராக இல்லை. ஏற்கனவே, சந்தித்திருந்த அவமானகரமான இராணுவத் தோல்வியிலிருந்து பாடங்களைக் கற்காமல் சந்திரிகா அம்மையாரும், அவரது போர்த்துறை அதிபதிகளும், ஆனையிறவை மீளக் கைப்பற்றும் ஒரு பாரிய அதிரடிப் படையெடுப்பிற்கு திட்டம் தீட்டினர்.

ஆனால், புலிகளின் தலைமையோ, சந்திரிகா அம்மையார் சாதகமாகப் பதிலளிப்பார் என்ற நம்பிக்கையுடன், சிங்களப் படையினரின் அதி தீவிரமான ஆத்திரமூட்டும் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் - தமது ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை நான்கு தடவைகளாக நீடித்து, நான்கு மாதங்கள் கடைப்பிடித்தது. ஆனால், சமாதானத்திற்கான வழியைத் தேர்வுசெய்வதற்கு மாறாக, சிறீலங்கா அரசு ஒரு கடும் போக்கு நிலைப்பாட்டையே எடுக்கின்றது என்பது ஐயமறத் தெளிவாகியபோது, தங்களது ஒருதலைப்பட்சமான போர்ஓய்வுப் பிரகடனத்தை 2001 ஏப்ரல் 24ஆம் நாள் நள்ளிரவில் இருந்து மீளப்பெற புலிகள் இயக்கம் தீர்மானித்தது. வன்னியில் - தமது தலைமைச் செயலகத்தில் இருந்து வெளியிட்ட அதிகாரபூர்வமான அறிக்கையில் அவர்கள் பின்வருமாறு விளக்கினர்:-

*"சிறீலங்கா அரசாங்கமானது எமது சமாதான முயற்சிக்கு ஆக்கபூர்வமான பதில்தர மறுப்பதுடன், தரையாலும் கடலாலும் ஆகாயத்திலிருந்தும் தாக்குதலைத் தீவிரப்படுத்தி, எமது தரப்பில் பெரும் உயிர்ச்சேதத்தை விளைவித்துக் கடும்போக்கை கடைப்பிடித்ததால், நாம் இந்த வேதனைக்குரிய முடிவை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டோம். பதில் தாக்குதல் நடவடிக்கைகளை எடுக்காது, சுயமானமுறையில் நாம் அமைதியைப் பேணியதால் எதிரியின் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது இயலாத காரியமாயிற்று. எமது ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்தை எதிரிப் படைகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திவரும் ஆபத்தான சூழ்நிலையில் நாம் தொடர்ந்து அமைதிபேணி வருவது சாத்தியமற்றது.*

*கடந்த நான்குமாத காலமாக, சுயமாக நாம் செய்துகொண்ட போர்நிறுத்தத்தின்போது, யாழ்ப்பாணக் குடாநாட்டில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களை இழந்து இராணுவரீதியான பின்னடைவுகளை நாம் சந்தித்ததுடன் கணிசமான உயிரிழப்பும் எமக்கு ஏற்பட்டது. 160 போராளிகளை நாம் பலிகொடுத்ததுடன் 400பேருக்கு காயம் ஏற்பட்டது. முல்லைத்தீவிலும் திருகோணமலையிலும் உள்ள கரையோரக் கிராமங்கள் தொடர்ச்சியான, தீவிரமான விமானக் குண்டுவீச்சுகளுக்கு இலக்காகியதால் பெருமளவு உயிரிழப்புகளும் சொத்துகளுக்குப் பெரும் சேதமும் ஏற்பட்டன. நாம் போர்நிறுத்தத்தை கண்டிப்பான முறையில் இறுக்கமாகப் பேணிவந்ததால் எமது போராளிகளுக்கு ஆத்திரமூட்டி அவர்களை விரக்திகொள்ளச் செய்யும் நோக்கத்துடன் அரச ஆயுதப்படைகள் தொடர்ச்சியான பகை நடவடிக்கைகளில் ஈடுபட்டன. அத்தோடு இக்காலகட்டத்தில், சிறீலங்கா அரசானது நாசகார ஆயுதங்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ததுடன், ஒரு பாரிய போர் நடவடிக்கையை மேற்கொள்ளும் நோக்கத்துடன் தனது ஆயுதப்படைகளை நவீனமயப்படுத்தி பலப்படுத்தி வந்துள்ளது. ஆனால், எம்மைப் பொறுத்த வரை நோர்வே அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்கிவருகிறோம். சமாதானப் பேச்சுகளுக்கான ஒரு நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்கும் நோக்குடனேயே கடந்த நான்குமாதங்களாக நாம் அமைதிபேணினோம்.*

*சிறீலங்கா அரசாங்கமானது எமது ஆக்க பூர்வமான நல்லெண்ண நோக்கத்தின் அர்த்தத்தைப்*

(26ஆம் பக்கம் பார்க்க)

# புதுடில்லியில் நம்பிக்கை வாக்கை வென்றுமுடித்ததும் தமிழகத்தில் மீண்டும் பா.ம.க. - தி.மு.க. மோதல்!



மன்மோகன்சிங் அரசு நம்பிக்கை வாக்கை வென்றாலும் வென்றது, எல்லாத் தொல்லையும் ஓய்ந்தது என காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி நிம்மதிப் பெருமூச்சுவிட முடியாதபடி தமிழகக் கட்சிகளின் மோதல் மீண்டும் உக்கிர மடைந்திருக்கிறது.

நம்பிக்கை வாக்கெடுப்புக்கு ஓரிரு வாரங்கள் முன்னர் பாட்டாளி மக்கள் கட்சி - தி.மு.க. மோதல் உச்சக்கட்டமாக நீடித்தமை நினைவிருக்கலாம். வாக்கெடுப்பில் அரசு வெல்வதற்காக பா.ம.க., தி.மு.க. இரண்டுமே தற்காலிக மௌனம் காத்தன. பா.ம.க. தலைவர் ராமதாஸின் மகன் அன்புமணி சுகாதார அமைச்சர் பதவியில் நீடிப்பது முக்கியமாகத்தெரிந்தது அக்கட்சிக்கு. 'ஆறு கடக்கும் வரை அண்ணன் - தம்பி உறவு' என்பது போல்தான் தி.மு.க. - பா.ம.க. கட்சிகளின் நடத்தை நம்பிக்கை வாக்கெடுப்பு சமயம் அமைந்திருந்தது.

பா.ம.க. - தி.மு.க. மோதலுக்குக் காரணமாக இருந்தவர் என தி.மு.கவால் பெயர் குறிப்பிடப்பட்ட பா.ம.க. தலைவர் காடுவெட்டி குரு. வன்முறையைத் தூண்டும் வகையில் பேசிய குற்றத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

நம்பிக்கை வாக்கெடுப்பு முடிந்த கையோடு அவசர அவசரமாக இதற்கு எதிர்ப்புக் காட்டும் படலம் தொடங்கியது. ராமதாஸின் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவரான குருவுக்கு ஆதரவான பேரணிகள் முடுக்கிவிடப்பட்டன. பா.ம.கவினரில் வன்னியர் சமூகத்தினர் மட்டும் இந்தப் பேரணிகளில் கலந்துகொண்டனர். ஏனைய சமூகத்தினர் இதில் அவ்வளவாக அக்கறை காட்டாதமையால் பேரணிகள் எழுச்சியாக நடைபெறவில்லை. இதனால், தி.மு.க.வினர் திருப்திப்பட்டுக்கொண்டனர். பேரணிகளைக் குழப்பும் விதமாக எதுவும் தி.மு.க. தரப்பால் செய்யப்படவில்லை. மொத்தத்தில் ஒருவகை ஓசையாக பேரணிகள் முடிந்தன.

எனினும், ராமதாஸ் கலைஞரை விட்டபாடில்லை. காங்கிரஸார் கலைஞரைக் கண்டிப்பதில்லை என காங்கிரஸார் மீதும் ராமதாஸ் முதல் முறையாக அம்பை எறிந்துள்ளார். இது காங்கிரஸாரிடம் எத்தகைய உணர்வலைகளை ஏற்படுத்தும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஆக, ராமதாஸ் தனது தாக்குதலை தீவிரப்படுத்தப்போகிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இது சோனியாகாந்திக்கு நல்ல செய்தியல்ல.

இதற்கிடையில் விஜயகாந்தின் தே.தி.மு.க., பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி சேரலாம் என பரபரப்பாகசெய்திகள் அடிபடத்தொடங்கியுள்ளன. அவர் காங்கிரஸுடன் சேர தி.மு.க.

தடையாக இருப்பதால் பாரதீய ஜனதா பக்கம் அவரது பார்வை திரும்பியுள்ளதாக கூறப்படுகிறது. ஆனால், பாரதீய ஜனதா அணியில் அ.தி.மு.க. இருப்பதால் விஜயகாந்தின் திட்டம் சாத்தியப்படாது என்றே கருதப்படுகின்றது.

எனவே, அ.தி.மு.க. இல்லாத பாரதீய ஜனதா கூட்டணி பற்றியே பாரதீய ஜனதாவுடன் விஜயகாந்த் பேசியுள்ளார். அவரது கட்சித் தலைவர்களில் ஒருவரான பண்ருட்டி ராமச்சந்திரன் இவ்வாரம் டெல்லியில் பாரதீய ஜனதாவின் செயலர் அருண் ஜேட்லியைச் சந்தித்தமை தமிழக அரசியல் வட்டாரத்தில் முக்கிய செய்தியாகும். ஆனால், பாரதீய ஜனதா அணியில் பா.ம.க இடம்பெற்றால் அதுவும் விஜயகாந்துக்கு பொருந்தாத கூட்டணியாகிவிடும். மேலும் பாரதீய ஜனதாவுடன் இரகசியப் பேச்சு நடத்திக்கொண்டே 'தனித்தே போட்டி' என விஜயகாந்தின் கோஷமும் தொடர்ந்து ஒலிப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் தி.மு.கவின் உறவு வலுவாகவே உள்ளது என கலைஞர் சமீபத்தில் கூறியுள்ளார். கம்யூனிஸ்ட்கள் சோனியாகாந்தியின் காலை வாரினாலும் அதுகுறித்து கலைஞர் ஆத்திரமடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காரணம் இருகட்சி

களுமே நாத்திகக் கொள்கையுடையவை. தவிரவும் தி.மு.க. - கம்யூனிஸ்ட் நட்பு வலுவான பழைய உறவாகும். தி.மு.க. வாஜ்பாய் அரசில் பங்கேற்ற 5ஆண்டுகள் மட்டுமே கம்யூனிஸ்ட்கள் தி.மு.க. அணியை விட்டு வெளியேறி ஜெயலலிதா அம்மாவை ஆதரித்திருந்தனர். மற்றப்படி இரு கட்சிகளும் எப்போதும் ஒரே அணியில்தான்







இருந்துள்ளன.

கலைஞர் இவ்வாறு கூறுவது நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் காங்கிரஸ் - தி.மு.க அணியில் கம்யூனிஸ்ட்கள் மீண்டும் இடம்பெறுவதைக் கலைஞர் விரும்புகிறார் என்பதையே காட்டுகிறது.

சோனியாகாந்தி கூட இடதுசாரிகள் மீது ஆத்திரமடையவில்லை என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும். தங்களை உச்சிவிட்டு அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்ற சோனியா முற்படுவதால் இடதுசாரிகள்தான் அவர் மீது ஆத்திரத்திலுள்ளனர்.

நம்பிக்கை வாக்கெடுப்புக்கு சில வாரங்கள் முன்னர் தமிழகக் காங்கிரஸின் தலைமைப் பதவியில் மாற்றம் செய்யப்பட்டது. புதிய தலைவராக முன்னாள் மத்திய அமைச்சர் தங்கபாலு நியமிக்கப்பட்டார். ஒருகாலத்தில் ஜெயலலிதாவின் அடிவருடியாக இருந்த இவரை தி.மு.க வட்டாரம் பெரிதாக விரும்பாது. எனினும், ஜெயலலிதா விசுவாசத்தைத் தாம் கைவிட்டுவிட்டார் என தங்கபாலு தன்னை நிரூபிக்க முயன்று வருகிறார். தி.மு.க., அ.தி.மு.க. இரண்டும் சொந்தமாக தொலைக்

காட்சி அலைவரிசை வைத்திருப்பதால் காங்கிரஸுக்கு என ஒரு எந்த அலைவரிசையை உருவாக்க விரும்பி காங்கிரஸ் தலைமை இவரை நியமித்திருப்பதாக தெரிகிறது.

மேலும் அமைச்சர் பதவி கிடையாத காலத்திலும் கட்சியை விட்டுப் போகாத காங்கிரஸ்காரர் என்ற பெருமையும் தங்கபாலுவுக்கு உண்டு. எனினும், இவரது நியமனத்தால் வாசன் குழுவினர் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளனர். வாசன் ஆதரவாளரான ஞானதேசிகனுக்கே காங்கிரஸ் தலைமைப் பதவி கிடைக்குமென வாசன் அணியினர் எதிர்பார்த்திருந்தனர்.

இந்த ஏமாற்றத்தின் விரக்தியால் தமது பழைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியை மீண்டும் புதிதாகத் தொடங்கவேண்டும் என வாசன் விசுவாசிகள் கோரியுள்ளனர்.

முன்னர் தங்கபாலு 1996 இல் தமிழக காங்கிரஸ் தலைவராக இருந்தபோதுதான் வாசனின் தந்தை கருப்பையா மூப்பனார் பிரிந்து சென்று தமிழ் மாநில காங்கிரஸை துவக்கினார் என்பது மனங்கொள்ளத்தக்கது. எனவே, ஏற்கனவே குழம்பிய குட்டையாகவுள்ள தமிழக காங்கிரஸை தங்கபாலுவின் நியமனம் மேலும் குளறுபடிக்குள் ஆழ்த்தியுள்ளது எனலாம்.

காங்கிரஸ் கட்சி நம்பிக்கை வாக்கை வெல்ல உதவிய முலாயம் சிங், சிபு சோரன் ஆகியோரின் கட்சிகளுக்கு வெகுமதி வழங்கும் விதமாக அவர்களுக்கு மத்திய அமைச்சர் பதவிகள் வழங்கப்படலாமெனத்தெரிகிறது. இதன் பொருட்டு விரைவில் மத்திய அமைச்சரவையில் மாறுதல் ஏற்படுமென்றும் ஊகங்கள் நிலவுகின்றன.

சோனியாவுடன் முரண்பட்ட காங்கிரஸ் மூத்த தலைவர் அர்ஜுன்சிங் அமைச்சரவையிலிருந்து தூக்கப்படலாம். மற்றொரு மாற்றமாகக் கருணாநிதியின் மகள் கனிமொழி அமைச்சராவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நம்பிக்கை வாக்கெடுப்



பில் வெல்ல உதவிய சுயேச்சைகளுக்கும் பாரதீய ஜனதாவின் அதிருப்தியாளருக்கும்கூட அமைச்சுப் பதவி வழங்கும் கட்டாயம் காங்கிரஸுக்கு உள்ளது. இலங்கையைப்போல இந்தியாவில் ஆளும்கட்சி எம்.பிக்கள் அனைவரையும் அமைச்சராக்கி அழகு பார்க்க இந்தியாவின் அரசியல் சூழ்நிலையில் இடமில்லை. அது ஜனநாயகத்தை அகில உலகுக்கும் போதிக்கும் தகுதியுடைய நாடாகும். நாடாளுமன்ற எம்.பிக்களில் குறிப்பிட்ட சதவீதத்தினர் மட்டுமே அமைச்சர்களாக நியமிக்கப்படலாம் என்ற பொதுவிதி - ஏற்பாடு - அங்கு உள்ளது.

**எஸ்.சுரேந்திரஜித்**




இதனால் நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசுக்கு உதவிய சகலரையும் திருப்திப்படுத்துவதாயின் காங்கிரஸ் தனது கட்சியினரின் சில அமைச்சுப்பதவிகளை தியாகம்செய்ய நேரிடும். அப்படி பதவியிழப்போர் சும்மா இருப்பார்களா என்பது கேள்வியே.

வெகுவிரைவில் இன்னொரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசு எதிர்கொள்ள அது வழிவகுக்கும்.

சுருங்கச் சொன்னால் எதிர்வரும் ஒரு வருட காலம் 'நித்தியகண்டம் பூரண ஆயுசு' என்பது போலவே மன்மோகன் அரசு ஆட்சியைக் கொண்டிழுக்கப்போகின்றது. ◆


IELTS | TOEFL




- 10-15% கழிவு - குழுவாகப்பதிவு செய்வோர்க்கு.
- 25% கழிவு தெரிவு செய்யப்பட்ட IT நிகழ்ச்சித்திட்டங்களுக்கு
- 10% பழைய மாணவர்களுக்கு.
- 5% கழிவு நிகழ்ச்சித்திட்ட ஆரம்பத்திற்கு 10 நாட்களுக்கு முன்பே முழுமையான கொடுப்பனவிற்கு
- பரீட்சைகளுக்கான துப்புகள்.
- பல்லூடக CD-ROM தழுவிய வளங்கள்.
- தலை ஒலிவாங்கிகளுடனான தனிப்பட்ட கட்டுப்பாட்டான செவிமடுப்பு பாடக்குறிப்புகள்
- வலையமைப்புடனான கணனித் தொகுதி மூலம் mock பரீட்சைகளுக்கான வழி.

100%

பெறுபேறுகளுக்கு உத்தரவாதம்

வியாழக்கிழமைகளில் DVD தொழில்நுட்ப வழுவுடனான அறிமுகப் போதனைகள்

IELTS @ 5pm | TOEFL @ 4pm

- இலவச இறுதி மீட்டல் பத்திரங்கள், CD, சிறுவண்டிகள்
- தவறவிட்ட இருவகுப்புகளுக்கான இலவச மேலதிக வகுப்புகள்
- 25க்கு மேற்படாத மாணவர்கள் அடங்கிய அணிக்கென மாணவ-ஆசிரிய இடையே வரும் செயற்பாடு தொடர்பான வகுப்புக்கள்
- வேலையமைப்பிலுடான வரையறையற்ற மூலவள தேடல்
- ஒவ்வொரு பாடத்திற்கும் இலவச ஒருங்கிணைந்த பாடப்பொதிகளுக்கும் பத்திரங்கள்
- பிரிட்டிஷ் கவுன்சில் பரீட்சகர்களின் ஆலோசனைகளும் விரிவுரைகளும்.
- பயிற்சி நெறி காலம் ஒருநாள் மீட்டல், 5நாள், கடுகதி ஒருமாதம் 6மாதம் எனும் வியாபகம்

TOEFL | IELTS Exam centre for Sri Lanka & Maldives Accredited with ETS IBT - USA

PATHE ACADEMY

PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

37, School Lane (Entrance from Duplication Rd), Colombo - 03.
Tel : 5377752, 2502012, 2591271 www.patheacademy.org

சுடர் ஒளி

ஒகஸ்ட் 03 - ஒகஸ்ட் 09, 2008

85, ஜெயந்தமல் விமாரன்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0114734401—6
பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

## ஊடகங்கள் குறித்து குறைகூறும் அமைச்சர்

தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் (சப்மா) நான்காவது மாநாட்டை கடந்த புதன் கிழமை கொழும்பில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய இலங்கை ஊடக, தகவல்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா, ஊடகங்கள் தொடர்பாக முக்கிய குறைபாடொன்றைச் சுட்டிக்காட்டி குறைபட்டுக் கொண்டார்.

ஊடகங்கள் இன்று அரசியலிலேயே அதிகளவு கவனத்தைச் செலுத்துகின்றன என்பதும் அபிவிருத்தி சம்பந்தமான விடயங்கள் பாரதூரமான முறையில் புறக்கணிக்கப்படுகின்றன என்பதுவுமே அவரது குறைபாடாகும்.

மேலோட்டமாகப் பார்த்தால் அவர் குறைபட்டுக் கொள்ளும் விடயத்தில் அர்த்தம் இருப்பது போல தொனித்தாலும் உண்மையில் ஊன்றிப் பார்த்தால் அவர் போன்ற அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் தாம் இத்தகைய நிலைமை தோன்றியமைக்கான காரணம் என்பதையும் நாம் புரிந்து - உணர்ந்து - கொள்ளமுடியும்.

நாட்டின் அபிவிருத்தி எத்தகையதாக இருந்தாலும் அதை தீர்மானித்து முன்னெடுக்கும் அதிகாரமும் வலுவும் செல்வாக்கும் அரசியல் தலைமைகளிடமே - அவற்றிடம் மட்டுமே - இருக்கின்றன.

அவற்றின் தீர்மானங்களே அபிவிருத்தியா, அழிவா என்பதை முடிவுகட்டுகின்றன என்பது வெளிப்படையான உண்மை.

நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்த வேண்டுமானால் அந்த அபிவிருத்திக் கட்டமைப்புகளைத் தீர்மானித்து, வழிப்படுத்தி, முன்னெடுத்து, நெறிப்படுத்துகின்ற அரசியல் தலைமைகள் முதலில் நேரிய, சீரிய நெறியில் செல்வனவாக இருக்க வேண்டியது அவசியம். தீர்க்கதரிசனமான பார்வையும், தெளிவான - உருப்படியான - நேரிய கொள்கைத்திட்டமும், நியாயப்போக்கும் கொண்டவையாக அவை அமைதல் அவசியம்.

அத்தகைய அரசியல் தலைமைகளை அவ்வாறான நேரிய பாதையில் நெறிப்படுத்துகின்ற தலையாய பொறுப்பு ஊடகங்களுக்கும் உரியது.

அந்தப் பொறுப்பை ஊடகங்கள் செவ்வனே நிறைவேற்றி, அரசுத் தலைமைகளும், அரசியல் அதிகார வர்க்கங்களும் சரியான வழியில் செயற்படும் சூழ்நிலை உருவாகுமானால், நாட்டின் அபிவிருத்தியும் தன்பாட்டிலேயே மேம்பட்டு உயர்ந்து செல்லும்.

ஆனால், அதுதான் இந்தத் தேசத்தில் இல்லவே இல்லையே.

சாக்கடையைச் சுத்தம் செய்ய வேண்டுமானால் சாக்கடையில் இறங்கத்தானே வேண்டும்? அசுத்தத்தை அளைந்துதானாக வேண்டும்.

அதுபோல அரசியல் தலைமைத்துவங்களையும், அதிகார வர்க்கங்களையும் நேர்வழிப்படுத்தி, சரியான தடத்தில் ஏற்றுவதாயின் அந்தத் தரப்புகள் தொடர்பான அரசியல் சாக்கடையில் ஊடகங்கள் இறங்கி அச்செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது தவிர்க்க முடியாததாகின்றது.

இன்று இலங்கைத் தீவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முக்கிய தரப்பாக அரசியலும், முக்கிய தரப்பினராக அரசியல்வாதிகளும் உள்ளனர். அதனால் இவ்விடயத்தில் இருந்து ஊடகங்கள் தள்ளி - விலகி - நிற்கவே முடியாது என்பது தான் யதார்த்தம்.

அது மட்டுமல்ல, இன்று இலங்கையில் ஊடகங்களின் சுதந்திர, சுயாதீன செயற்பாடு பெரும் கேள்விக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியிருக்கின்றது. ஊடக சுதந்திரம் பெரும் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது.

அரசியல் தரப்புகளின் சுயரூபங்களை அம்பலப்படுத்தும் தலையாய கடமையை நிறைவு செய்தமைக்கான பரிசை ஊடகங்கள் இவ்வாறு அடக்குமுறை வடிவில் பெற்று நிற்கின்றன.

ஊடகங்களின் இருப்பையே அரசியல் தலைமைத்துவங்கள் இன்று கேள்விக்குள்ளாக்கி மிரட்டி நிற்பதால், அந்தத் தரப்புகளின் உண்மைப் போக்கைத் தோலுரித்துக்காட்டி நியாயத்தை நிலைநிறுத்துவதே ஊடகங்களின் தலையாய பணியாகின்றது - அபிவிருத்தி பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் விட.

அந்தக் கடமையைத்தான் இலங்கை ஊடகங்கள் இப்போது செய்து நிற்கின்றன.

ஊடக அச்சுறுத்தலுக்கு இடமளித்து, வாய்ப்புக் கொடுத்து, சந்தர்ப்பம் வழங்கி, நிற்கும் ஓர் ஆட்சிப் பீடத்துக்கு முண்டு கொடுத்துத் தாங்கி நிற்கும் அமைச்சர் அநுர பிரிய தர்சன யாப்பா போன்றோர் இப்படி ஊடகங்களைக் குறைபட்டுக் கொள்வது அபத்தத்திலும் அபத்தம்.

# 'சார்க்' சாதிக்குமா?

பதினைந்தாவது 'சார்க்' மாநாடு இப்போது கொழும்பில் அரங்கேறுகின்றது.

இந்தச் 'சார்க்' மாநாட்டுக்கும் ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கும் இடையில் உள்ள நெருங்கிய தொடர்புகளை இச்சமயத்தில் மேலோட்டமாக நோக்குவது பொருத்தமானதாக இருக்கும்.

1985இல் முதலாவது 'சார்க்' மாநாடு பங்களாதேஷில் நடைபெற்ற சமயம் அதில் பங்குபற்றிய முக்கிய - பிரதான - தரப்புகளில் இலங்கையும் இந்தியாவும் ஈழத்தமிழரின் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் கீரியும் பாம்பும் போன்ற அணுகு முறையுடனேயே அங்கு சந்திக்க வேண்டியிருந்தன.




இலங்கையில் அரசுக்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போராடும் தமிழ்க் கிளர்ச்சியாளர்களுக்கு இந்தியா ஆயுதப் பயிற்சியளித்து, ஒத்துழைத்து, ஊக்குவித்துத் தூண்டிவருகின்றது என்ற குற்றச்சாட்டை இந்தியா மீது சுமத்தியபடி இலங்கையும் -

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக ஓர் இனப்படுகொலைக் கொடூரத்தை கொழும்பு அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை இலங்கை மீது சுமத்தியபடி இந்தியாவும் -

அந்த முதலாவது மாநாட்டில் கலந்துகொண்டன.

ஆனால், அடுத்த வருடம் 1986 நவம்பரில் இரண்டாவது 'சார்க்' மாநாடு பெங்களூரில் நடைபெற்ற சமயம் நிலைமை சற்று மாறியிருந்தது.

ஈழத்தமிழ்ப் போராளிகள் மூலம் இந்தியா மேற்கொண்ட அழுத்தத்துக்கு - காய் நகர்த்தலுக்கு - கொழும்பு நசிந்து கொடுத்து, புதுடில்லியுடன் இணங்கிப் போகும் கட்டாயத்துக்கு வந்திருந்தது.

அந்த வாய்ப்பான நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதற்கு வியூகம் வகுத்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, அச்சமயத்தில் பெங்களூருக்கு வந்த இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடன், தமிழர் தரப்புப் பிரதிநிதிகளாக புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனையும் அவரின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கத்தையும் நேரடியாகச் சந்திக்கவைத்து, தீர்வு ஒன்றை எட்டும் நோக்கத்துடன் முயற்சி ஒன்றில் ஈடுபட்டார்.

இதற்காக சென்னையிலிருந்து விசேட விமானம் ஒன்றில் பிரபாகரனும் பாலசிங்கமும் பெங்களூருக்குக் கூட்டி வரப்பட்டனர். தமிழக முதல்வர் எம்.ஜி. இராமசந்திரனும் அங்கு உதவிக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

ஆனால், ஈழத்தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றை வெளிப்படையாக ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா முன்வைக்காத வரை அவரைச் சந்திப்பதில் அர்த்தமில்லை என்று பிரபாகரன் பிடிவாதம் பிடித்தமையால் அந்தச் சந்திப்பு இடம்பெறாமலேயே போய்விட்டது.

அதன்பின் ராஜீவும் ஜே.ஆரும் தமக்குள் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைச் செய்துகொண்டமையும் -

அந்த ஒப்பந்தம் தம் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டமையை எதிர்த்துப் புலிகள் செயற்பட ஆரம்பித்ததும், இந்தியப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் ஈழத் தாயக மண்ணில் கொடூரப்போர் வெடித்தமையும் - தொடர்ந்து இடம்பெற்ற சரிதங்கள்.

பின்னர் 1988 டிசம்பரில் இலங்கையில் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி பிரேமதாஸ இலங்கையில் இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பை முற்றாக எதிர்த்துடன் இந்தியப்படை வெளியேற்றத்துக்கு வாய்ப்பான துரும்பாக 'சார்க்' மாநாட்டைப் பயன்படுத்த எத்தனித் தமையும் கவனிக்கத்தக்க விடயமாகும்.

### அதிரடி அரங்கு

1989 ஜூன் முதலாம் திகதி கொழும்பில் பௌத்த சமயவிழா ஒன்றில் பேசிய ஜனாதிபதி பிரேமதாஸ, இலங்கையை ஆக்கிரமித்திருக்கும் இந்தியப்படைகள் அனைத்தும் 1989 ஜூலை முடிவில் இலங்கையை விட்டு வெளியேறவேண்டும் என இந்தியப் பிரதமரைத் தாம் கேட்கப்போகின்றார் என அறிவித்தார்.

**( பெரும் ஆரவார எடுப்புகளுடன் கூடிக் கலைவதாக அது முடியுமா? )**

அந்த ஆண்டு நவம்பரில் 'சார்க்' தலைவர்களின் மாநாட்டை கொழும்பில் இலங்கை கூட்டவேண்டியிருப்பதைச் சுட்டிக்காட்டிய பிரேமதாஸ, தமது நாட்டை அந்நிய இராணுவம் ஒன்று ஆக்கிரமித்திருக்கையில் தம்மால் அத்தகைய மாநாட்டை சுயாதீனமாகக் கூட்ட முடியாது என்றும் பிரகடனப்படுத்தினார்.

அடுத்தநாள் - அதாவது 1989 ஜூன் 2ஆம் திகதி - இது தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸ, இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு இவ்விடயத்தைக் கடிதம் மூலம் அறிவித்தார்.

ஜூலை 31 இற்கு முன்னர் இந்தியப் படைகளைத் திரும்ப அழைக்குமாறும் அப்படிச் செய்தால் அந்த ஆண்டு நவம்பரில் அமைதியான சூழலில் 'சார்க்' மாநாட்டை நடத்துவதற்கு அது வாய்ப்பளிக்கும் என்றும் அந்தக் கடிதத்தில் பிரேமதாஸ குறிப்பிட்டிருந்தார்.

ஆக, அமைதிப்படை என்ற பெயரில் இலங்கையை ஆக்கிரமித்த இந்தியப் படைகளை இங்கிருந்து தெண்டிக் கிளப்பி, வெளியேற்றுவதற்கும் 'சார்க்'கையே சாக்காகக் காட்ட வேண்டியதாக கொழும்பு அரசுத் தலைமை அப்போது இருந்தது.

1987 இல் - இலங்கை இனப்பிரச்சினைக்குள் நேரடியாகத் தலையிட எத்தனித்த இந்தியா, அந்நடவடிக்கையின் ஒருகட்டமாக இலங்கையின் வடபகுதிக்குள் தனது விமானங்களில் அத்துமீறிப் புகுந்து உணவுப் பொதிகளைப் போட்டது. 'ஒப்பரேஷன் பூமாலை' என்ற இந்த பலவந்த நடவடிக்கை தொடர்பாக வலுமிக்க இந்தியாவுக்கு எதிராக எந்தப் பதிலடி செயற்பாடும் மேற்கொள்ள முடியாத நிலையில் வெறுமனே பார்த்திருந்தது இலங்கை.

ஏதும்செய்ய இயலாத கட்டத்தில் இந்த விவகாரத்தை 'சார்க்' வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்தில் கிளப்ப இலங்கை முயன்றது. ஆனால், பரஸ்பரம் இருநாடுகளுக்கு இடைப்பட்ட விடயங்களை 'சார்க்'கில் பொதுவாகக் கிளப்பமுடியாது என்ற காரணத்தினால் அதை இலங்கையினால் செய்யமுடியவில்லை.

இந்த ஆதங்கத்தில் என்னவோ "சார்க் என்பது செவிட்டு, குருட்டு, ஊமை அமைப்பு" என்று இலங்கையின் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீத் குறைபட்டுக்கொண்டார்.

இப்படி இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கும் 'சார்க்'கிற்கும் இடையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல தொடர்புகள் உண்டு.

எது, எப்படியென்றாலும் சார்க்கைப் பொறுத்தவரை 'பயங்கரவாதத்தை' நசுக்குதல், வறுமையை ஒழித்தல்,புலிவெப்பமடைதலையும் மாசடைதலையும் தடுத்து, காலநிலை மாற்றங்களைச் சீர்படுத்து தல், உலகரீதியில் ஏற்பட்டுள்ள உணவுப் பொருள் மற்றும் எரிபொருள்களுக்கான விலை அதிகரிப்புப் பிரச்சினைக்குக் கூட்டாக முகம் கொடுத்தல் என்பன போன்ற பல்வேறு பொதுப் பிரச்சினைகளைக் கையாண்டு தீர்க்கமான- ஆக்கபூர்வமான- முடிவுகளை எடுக்கவேண்டிய பொறுப்பு அதற்கு உண்டு.

'சார்க்' நாடுகள் ஒவ்வொன்றுமே தத்தமது நாடுகளில் - ஒன்றுக்கொன்று வேறுபட்ட - அரசியல் சிக்கல்களிலும் நெருக்கடிகளிலும் மாட்டி, இக்கட்டை எதிர்கொண்டு நிற்கின்றன.

இவை எல்லாம் ஒன்றுகூடிப்பேசி ஏதும் ஆக்கபூர்வமாகச் சாதிக்கமுடியுமா என்பது இன்றைய நிலையில் பெரும் கேள்விக்குறியே.

இவ்வளவு கோடி ரூபாயைச் செலவிட்டு, இவ்வளவு சிரமம் எடுத்து, இத்தனைப் பாதுகாப்புக் கெடுபிடிகளை ஏற்படுத்தி, நடத்திய 'சார்க்'கினால் விளைந்த பயன் என்னவென்பதைப் பட்டியலிடுமாறு இலங்கை அரசுக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. பகிரங்க சவால்விடுத்திருக்கின்றமையும் கவனிக்கத்தக்கது.

'சார்க்' ஏதும் சாதிக்குமா? மாநாட்டின் பெறுபேறைப் பார்த்திருப்போமாக!

# நெருப்பு வைக்கும் படைகளும்,



விடத்தல்தீவில் கடற்புலிகளின் தளத்தைக் கடந்தவாரம் கைப்பற்றிய படையினர்...

# 'பிடில்' வாசிக்கும் புலிகளும்

''நவம்பர் மாத இறுதியில் விடுதலைப் புலிகள் மாவீரர் தினத்தைக் கொண்டாடும் போது வன்னியில் அவர்களுக்கு எதுவுமிருக் காது. விடுதலைப் புலிகள் பதுங்குகுழிகளுக் குள்ளேயே ஒன்று கூடுவர்.''

இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் சரத் பொன்சேகா. (26 - 07- 2008)

முல்லைத்தீவு விசுவமடுவில் புலிகளின் குரல் வானொலியின் முத்தமிழ்க் கலையரங் கம் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

- இணையச் செய்தி (26- 07 - 2008)

மேலே தரப்பட்ட இரு செய்திகளும் ஒரே தினத்தில் ஊடகங்களில் வெளியிடப்பட்டிருந் தன. வன்னியை 'லபக்' கென்று விழுங்கிவிடு வோமென்று சிறிலங்காவின் இராணுவத் தள பதி மார்தட்டிக் கொண்டிருக்கையில், விடு தலைப் புலிகள் வலு 'குசாலாய்' முத்தமிழ்க் கலையரங்க நிகழ்வை நடத்தியிருக்கிறார் கள். இச்செய்திகளைப் படித்த தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் புலிகள் மீதான வெறுப்பை வளர்த்துக்கொண்டிருக்கக்கூடும். நாடு பற்றி எரியும் போது 'பிடில்' வாசித்த நீரோமன்னனோடு புலிகளை ஒப்பிட்டிருக்க வும்கூடும். எனினும் யதார்த்தம் அதுவல்ல.

இக்கட்டுரையின் மேலே தரப்பட்ட இரு செய்திகளையும், அவற்றுக்கிடையேயான தொடர்புகளையும் நோக்கும்போது, அவை வன்னிக் களமுனையில் விஸ்வரூபமெடுத்து நிற்கும் புதிர்களுக்கு விடையினைத் தருவ னவாக இருக்கும். இவ்விரு செய்திகளையும் மேலோட்டமாகப் பார்க்கும்போது மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட் டது போல் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவையாகவே தோன்றும். ஆனால், இராணுவத் தளபதியின் வெற்றிப் பேரிகைக்கான பதிலை முத்தமிழ் கலையரங் கம் சொல்லி நிற்பதை கூர்ந்துநோக்கும் போது அவதானித்துக்கொள்ளமுடியும்.

வன்னிப் பகுதியில் - பல முனைகளூ டாக ஊற்றெடுத்த இராணுவ நடவடிக்கை கள், ஆரம்பத்தில் மிகமிக மெதுவான நகர்வு களையே கொண்டிருந்தன. 'மெதுவாக, நிதான மாக - ஆனால் பலமாக' என்ற தந்திரோ பாயத்தினை அடியொட்டியதாகவே இராணுவத் தினர் நகர்ந்தனர். நகர்ந்தனர் என்பதை விடவும் அவ்வாறு நகர புலிகளால் அனு மதிக்கப்பட்டனர் என்பதே களமுனை யதார்த் தமாக இருந்தது. எனினும், தற்போது அந்த நிலையில் சடுதியான மாற்றம் ஏற்பட்டுள் ளது. தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை இராணுவத்தினர் மெதுமெதுவாகவே மேயும் வண்ணம், போரின் 'மூக்கணாங்கயிற்றை' இறுகப்பிடித்திருந்த புலிகள், திடீரென தமது பிடியை தளர்த்தியுள்ளனர்.

இதனால் மடைதிறந்த வெள்ளமென விடத் தல்தீவு, இலுப்பைக்கடவை, வவுனிக்குளம் போன்றபகுதிகளை ஒரே மூச்சிலேயே விழுங் கிக்கொள்வதற்கு படைத்தரப்பால் முடிந்திருக் கின்றது. சீட்டுக்கட்டால் கட்டப்பட்ட கோபு ரம் சிதறுவது போல புலிகள் சிதறிக் கொண்டி



கடந்தவாரம் புலிகளின் பகுதியில் நடந்த கலைநிகழ்வு ஒன்று...

ருக்கிறார்கள் என்ற விம்பத்தை தென்னிலங் கையில் உண்டுபண்ணவும், அதனூடாக, 'சார்க்கை' சாட்டாக வைத்து செய்கின்ற அட்டூழி யங்களை - கெடுபிடிகளை - மறைத்து சிங்கள மக்களை மகிழ்ச்சிப் போதைக்குள் ஆழ்த்தவும் அரசால் முடிந்திருக்கின்றது.

முந்திரிக்குலைபோல, மடியிலே தானாக வந்துவிழுகின்ற தொடர்வெற்றிகளால், அரசின தும், படைத்தரப்பினதும் யுத்தக் கொண்டாட் டத்திற்கு அளவில்லாமல் போய் விட்டது.

'இனி இறுதிப்போர் மட்டுமே எஞ்சியுள் ளது. அத்தோடு புலிகள் நசுக்கப்பட்டுவிடுவார் கள்.' என்று ஜனாதிபதியிலிருந்து இராணுவத் தளபதிவரை யார், யாரெல்லாம் வெற்றி பற் றியதான அறைகூவலை விடமுடியுமோ, அவர் கள் அனைவரும் உரத்த தொனியில் கூவி முடித்தாயிற்று. 'இராணுவத்தினர் புலிகளின் கழுத்தை நெரிக்கத் தொடங்கிவிட்டனர். இனி மேல் புலிகள் என்ற நாமமே இருக்கப் போவ தில்லை' என்ற எண்ண அலைகள் தமிழ், சிங் களமக்களிடையேயும் தொற்ற ஆரம்பித்துவிட் டன. இதனை உறுதிசெய்வது போல் விடு தலைப்புலிகள் 'சார்க்' மாநாட்டை முன்னிட்டு அறிவித்த ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த மும் படையினரின் பிரசாரத்துக்கு சாதகமாக அமைந்து விட்டது.

'சார்க்' மாநாட்டுக் காலப்பகுதியில் தாம் ஏதாவது தாக்குதலை நடத்தினால் அது சர்வ தேச ரீதியில் பாதகமான பின்விளைவுகளை உண்டுபண்ணும் என்பதாலும், தாம் தாக்கு தலை நடத்தாவிட்டாலும் அரசே 'இனந் தெரி யாதோரைக்' கொண்டு பொதுமக்கள் மீது தாக்குதலொன்றை நடத்திவிட்டுப் பழியைத் தங்கள்மீது போடலாமென்பதாலும் அவற்றி னைத் தவிர்ப்பதற்காய் விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமாக 10நாள் யுத்தநிறுத்தத்தை அறிவித்தனர். இதன்மூலம் சர்வதேச சமூகத் தினது கரிசனைப்பார்வையை கொஞ்சமேனும் பெற்றுவிடலாமென்ற எதிர்பார்ப்பும் புலிகளி டம் இருந்திருக்கலாம்.

ஆன்னால், புலிகளின் 10 நாள் போர்நிறுத்த அறிவிப்பின் உள்ளார்ந்த ராஜதந்திரத்தைப் புரிந்துகொள்ளாது புலிகளின் பலவீனத்தின் வெளிப்பாடாகவே அதிகாரமையம் அதைக் கணக்கிலெடுத்தது. 'இளகின இரும்பைக் கண் டால் கொல்லர் ஓங்கி, ஓங்கி அடிப்பது போல' வன்னியின் இராணுவ நகர்விற்கான விசையை அதிகரிக்க அரசு எண்ணியுள்ளது. தினமும் வசமாகின்ற இடங்களையெல்லாம் 'புலிகளின் முக்கியதளம்' என்ற 'லேபிளுடன்' பட்டிய லிட்டு, கிரிக்கெட் நேரடி வர்ணனை போல் போர்ச்செய்திகளை 'புளுகத்துடன்' வெளியிட்ட

**பிரமன்**

படியுள்ளது.

சேடமிழுத்துக் கொண்டிருக்கும் புலி களுக்கு பால்வார்த்து, அவர்களின் கதையை முடிப்பதற்கு நாள் குறித்துக் கொண்டிருப்ப தாக படைத்தரப்பு அறிவித்துள்ள நிலையில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் வழமை போலவே எவ்வித பதற்றமுமின்றி இயங்கிக் கொண்டிருக்கின்றன. போர்மையங் கொண் டுள்ள பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வரும் மக்களுக்கு ஏற்படும் அவலங்களின் சலசலப் பைத் தவிர, போர் தொடர்பான பதற்றமெதுவும் உணரப்படவில்லை.

சிலவேளைகளில் போரென்பது 'அடிவளவு அலுவல் போல' பழகிப் போனதாலும் இவ்வா றான இயல்புவாழ்நிலை தாக்கமுறாதிருக்க லாம். என்னதான் அரசும், படைத்தரப்பும், பேரினஊடகங்களும் விழுந்தடித்துக்கொண்டு புலிகளின் நிரந்தர வீழ்ச்சி பற்றி எதிர்வுகூறிக் கொண்டிருந்தாலும், புலிகளின் பிரதேசங்களுக் குள் போர் இன்னும் தன் காலடியை சரியான படி வைக்கவில்லை என்பதனையே, புலி களின் குரல் வானொலியின் முத்தமிழ்க் கலை யரங்கம் நடைபெற்ற செய்தியினூடாகப் பிரித் தறிய முடிகின்றது.

'புலிகளுக்கான எல்லா வாசல்களும் அடைக் கப்பட்டுவிட்டன. அவர்களில் வெகு சிலரே போராடக்கூடிய தகுதியோடிருக்கின்றனர். கிளி நொச்சியில் விரைவில் சிங்கக்கொடி ஏற்றப் பட்டுவிடும்' என்றெல்லாம் படைத் தரப்பு சொல்வது உண்மையாக இருந்தால், விசுவ மடுவில் முத்தமிழ்க் கலையரங்கம் நடை பெற்றிருக்கவேமுடியாது. மாறாக 1995 இல் யாழ் குடாநாட்டில் பிரகடனப்படுத்தப் பட்ட அவசரகால நிலையை வன்னியிலும் புலிகள் அமுலுக்கு கொண்டுவந்திருக்க வேண் டும். புலிகளின் பல பிரிவுகளிலுமுள்ள போராளிகளும் பூரண போர்க்கோலத்தோடு, போர்நடவடிக்கை தொடர்பாக ஓடித் திரிந் திருக்கவேண்டும். ஆனால், அவையெது வும் இல்லாமல் முத்தமிழ்க் கலையரங்கம், பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவர் கௌர விப்பு என்பன வன்னியில் சர்வசாதாரணமா கத் தொடர்ந்து நிகழ்கின்றன.

இதன்மூலம் ஒரு மிகப்பெரிய களமுனைச் செய்தியைப் புலிகள் சொல்லாமற் சொல்லு கின்றனர். அதாவது, என்னென்ன நிகழவேண்டு மென்று களமுனையில் புலிகள் எதிர்பார்த் தார்களோ, அவையெல்லாம் அட்சரம் பிச காது அரங்கேறிக் கொண்டிருக்கின்றன என் பதே அது. படையினர் எங்கெல்லாம் போர் முனைகளைத் திறந்தார்களோ, அங்கெல்லாம் புலிகளும் தமது 'பொறிகளை' விரித்துவைத்து விட்டனர். பொறியின் மையப் பகுதிவரை - தம்முடைய தாக்குதல் நடவடிக்கைகளுக் கான பொருத்தமான முனைவரை - படை யினரைப் புலிகள் அனுமதிக்கத் தயங்கமாட் டார்கள். அதன்பின்னர் பொறியில் வசமாகப் படையினர் அகப்பட்ட பின்பு, புலிகளின் தாண்டவம் ஆரம்பமாகிவிடும் தம்முடைய படைபலக் கொள்ளளவை விடவும், அதி களவான நிலப்பரப்பை கைப்பற் றியதால் உண்டான செறிவற்ற முன்னணி நிலைகள், பிரதான விநியோக மார்க்கங்களி லிருந்து புதிதாய் கைப்பற்றிய பிரதேசங்கள் வெகு தொலைவில் இருத்தல், படையினரின் கன ரகப் படையணிக்கு ஆப்பாக அமையப் போகின்ற 'மாரிகாலம்', இவையெல்லாம் இதுவரை பெற்ற வெற்றிகளையெல்லாம் அர்த்தமிழக்கச் செய்யும் படுதோல்விகளை உண்டுபண்ணக்கூடும். அத்தோடு வன்னிப் போர்முனையில் படைநடவடிக்கையில் ஈடு பட்டு வருகின்ற சிறிலங்காப் படையணி கள் நீண்டகாலமாகச் செயற்பட்டதால் சலிப் போடு இருக்க, இவ்வளவுகாலமும் தந்தி ரோபாயமாகப் பின்வாங்கிய புலிகள் புத் துணர்ச்சியோடுபாயக்கூடும். இது களமுனை யின் வலுநிலையில் பெரிய மாற்றத்தை உண்டுபண்ணும்.

இதுவரை அரியணையேறிய அரசுகளின் கன்றுகள் ஓடியதைப் போன்றே, மஹிந்தரின் 'பேத்தைக் [illegible]றுகளும்' ஓடிக் கொண்டிருக் கின்றன. அவை புலிகளின் உண்மையான முக்கிய தளங்களையும், பொறிகளையும் எட்டும் வரைக்கும் முத்தமிழ்க் கலையரங் கங்களும், மாணவர் பரிசளிப்பும், இலக்கிய விழாக்களும் வன்னியில் நிகழ்ந்து கொண்டே தானிருக்கப் போகின்றன. *

# நித்தம் மது சித்தம் கெடுக்கும்

**கேள்வி:** ஆண். வயது 43. நான் தினமும் இரவில் மதுபானம் கொஞ்சம் அருந்துவேன். (நாலுபெக் அல்லது 120 ml). சமீபத்தில் ஈரல் பரிசோதனை பார்த்தபோது ஈரல் அழற்சி எதுவும் இல்லை. இப்படி தொடர்ந்து மது அருந்துவதால் கெடுதல் உண்டா?

**பதில்:** தினமும் மது - அதுவும் கொஞ்சமாக அருந்தினால் கூட நாளடைவில் - ஈரல் திசுக்கள் பழுதாக வாய்ப்பு உண்டு. மது குடலில் இருந்து ஈரலுக்கு செல்லும்போது - பெரும்பாலும் மது நீராக மாறிவிடுகிறது. ஆனால், ஒரு சிறு அளவு - Acetaldehyde ஆக பாதி மாற்றம் பெறுகின்றது. இந்த - Acetaldehyde ஈரலைப் பொறுத்தவரையில் விஷப் பொருள். இந்தப் பொருள்தான் ஈரலில் அழற்சி ஏற்படுத்தி - திசுக்களை அழிக்கின்றது. அவ்வப்போது அதிக மது அருந்தும்போது ஏற்படும் தீய விளைவுகளை விட நாளாந்தம் குறைந்த மது அருந்துவதால் ஏற்படும் தீய விளைவுகள் அதிகம் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. பொதுவாகவே - 60 மி.லீட்டர் - 4 மேசைக்கரண்டி மது இரவில் அருந்துவது இரத்த நாளங்களை விரிவடையச்செய்து இதயநோய் - மாரடைப்பு ஏற்படாமல் தடுக்கும் என்று மருத்துவர்கள் கூறினாலும் - எந்த 'குடிமகன்' தான் - 4 மேசைக்கரண்டி மதுவோடு திருப்தியடைவான் என்பது பெரிய கேள்விக் குறி.

நீங்கள் தினமும் எடுக்கும் மதுவின் அளவு மருத்துவர் சிபார்சு பண்ணும் அளவை விட அதிகமானதே. தற்பொழுது உங்கள் ஈரல் பரிசோதனைகள் திருப்திகரமாக இருந்தாலும் நாளடைவில் ஈரல் திசுக்கள் பாதிக்கப்பட வாய்ப்புண்டு.

இதுதவிர தினமும் மது அருந்துபவர்களின் மூளைக்கலங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்படுகின்றன. ஈரல் பழுதாகும் முன்னரே மூளைக்கலங்கள் நிறைய அழிக்கப்பட்டு விடுகின்றன. ஈரல் கலங்கள் பழுதாகினாலும், புதிய ஈரல் கலங்களை உருவாக்கும் தன்மை ஈரலுக்கு உண்டு. ஆனால், மூளைக் கலங்கள் பழுதாகினால் - இறந்தவை இறந்தவை தான். இழப்புக்கு ஈடாக புதிதான மூளைக்கலங்கள் உருவாகமாட்டா. இதனால் ஞாபகமறதி, தூக்கமின்மை என்பவை ஏற்படலாம். பயங்கர ஞாபகமறதி நோயான Alzehimer அல்ஜீமர் நோய்க்கு ஒரு காரணமாக நிதமும் மது அருந்துவதைச் சொல்கின்றார்கள் மருத்துவ நிபுணர்கள்.

நிதமும் மது அருந்துவது மேலும் பழக்கத்தை (Addiction) ஏற்படுத்தி அந்த கொஞ்ச மதுவை அருந்தாமல் நாளாந்தக் கடமைகளை கூடச் செய்யமுடியாத, தூங்கமுடியாத நிலையை ஏற்படுத்திவிடலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

* * *

**கேள்வி:** ஆண். வயது 25. திருமணமாகி நான்கு மாதங்களாகின்றன. மாதவிலக்கு காலங்களில் உடலுறவு கொள்வது நல்லதா? இதனால், ஏதாவது உடல் நலக்குறைவு ஏற்படுமா? இந்தக் காலத்தில் உடலுறவு கொள்வதை என் மனைவி ஏற்றுக்கொள்கின்றாளில்லை. உங்கள் கருத்து என்ன?


**பதில்:** முதலில் மாதவிலங்கு காலங்களில் உடலுறவு கொள்வதில் தப்பு எதுவுமில்லை என்பதை உங்கள் மனைவிக்கு தெரியப்படுத்த விரும்புகின்றேன். மாதவிலக்குத் தீட்டு - ஒதுக்கப்பட்டகாலம், பெண் அக்காலங்களில் தெய்வ வழிபாடு, நற்காரியங்கள் என்பவற்றிலிருந்து ஒதுங்கியிருக்கவேண்டும் என்றெல்லாம் ஆதார பூர்வ காரணங்கள் எதுவுமின்றி - ஏற்றுக் கொள்ளப்பட்ட, பின்பற்றப்பட்டுவருகின்ற ஒரு வழக்கம் உண்டு. மாதவிலக்கு என்பது ஒரு உடலியல் சம்பவமே ஒழிய - ஒரு நோயோ, ஒரு பெண்ணின் உடலைப் பலவீனப்படுத்தும் நிகழ்வோ இல்லை என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். ஒருகாலத்தில் மாதவிலக்கு ஏற்பட்ட பெண்ணை - வீட்டிற்கு வெளியே தனியொரு மனையில் எதுவித வேலையும் கொடுக்காமல் 'அந்த மூன்று'நாட்களும் ஒதுக்கிவைப்பார்கள். இன்று பெண்களும் தொழில் பார்க்க வேண்டும்என்கின்ற கட்டாய சூழ்நிலையில் - எந்தப் பெண்தான் மாதவிலக்கு காலத்தை தனிமைப்படுத்திக் கொள்ளப்போகின்றாள்? எனவே, மெல்ல மெல்ல மாதவிலக்கை - சாதாரணமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை நம்மிடையே வந்துவிட்டது. இந் நிலையில் மாதவிலக்கு காலத்தில் உடலுறவுகொள்வதும். ஒரு சாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.மருத்துவரீதியில் இந்த மாதவிலக்கு காலங்களில் உடலுறவு கொள்வது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் - ஒரு சில விஷயங்களைக் கவனத்திற்கொள்ள அறிவுறுத்தப் படுகின்றது. பால்வினைநோய்களான - சிபிலிஸ், கொணொரியா நோய்களின் காரணிகள் மாதவிலக்கின்போது வரும் இரத்தத்தில் பல்கிப்பெருகும் தன்மை கொண்டுள்ளன. அதுபோல் எச். ஐ.வி. கிருமிகள் இலகுவாக மாதவிலக்கு காலத்தில் உடலுறவில் ஈடுபடும்போது தொற்றக்கூடியவை. அதுபோல் (Herpes) என்கின்ற பால்வினை தொற்றும் மாதவிலக்கின்போது உக்கிரமடைந்து - வெளியில் பொக்களங்களாக பெண் உறுப்பில் ஏற்படுகின்றது. இவ்வேளையில் உடலுறவில் ஈடுபடும் ஆணுக்கு இவை தொற்றுவதற்குச் சந்தர்ப்பம் அதிகம். இந்தக் காரணங்களால் மனைவியைத் தவிர மற்றப் பெண்களோடு மாதவிலக்குக் காலத்தில் உடலுறவு கொள்வது ஆபத்தானது என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றார்கள். மாதவிலக்குக் காலத்தில் உடலுறவு கொள்ளும்போது. தொற்றுக்கள் பெண்ணின் கருப்பை, கருக்குழாய், சூலகம் என்பவற்றைப் பாதிக்கலாம் என்று ஒருசில மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். இத்தகைய தொற்றுகள் Pelvic Inflammatory Disease என்று அழைப்பார்கள். இந்தக் காரணங்களால் மாதவிலக்குக் காலத்தில் உடலுறவை தவிர்க்க அறிவுறுத்தப்படுகிறது. ஆனால், தம்பதிகள் மனமொத்து இக்காலத்தில் உடலுறவில் ஈடுபடுவது தவறில்லை. அநேகமான தம்பதியர்- மாதவிலக்கு காலங்களில் உடலுறவு கொள்வதை - ஒரு கருத்தடை முறையாகப் பின்பற்றுகின்றனர்கள். மாதவிலக்குக் காலங்களில் - கருக்கட்டுதல் நடைபெறாது என்ற துணிவே இதற்குக் காரணம். அது மாத்திரமல்ல - மாதவிலக்குக் காலங்களில் - ஏற்படும்வலி (Dysmen norhoea) மற்றும் அடிவயிற்று இறுக்கம் (Cramps) என்பவை மாதவிலக்கு காலங்களில் உடலுறவுகொள்வதால் குணமாகின்றன என்பதும் மருத்துவ ஆய்வுக்ளிலிருந்து தெரியவந்துள்ளது.

* * *



**கேள்வி:** ஆண். வயது 28. எனக்கு அடிக்கடி சிறுநீரகத்தில் கற்கள் உருவாகி தாங்கொண்ணாத வலியால் அவதிப்படுகின்றேன். இந்தக் கற்கள் - எக்ஸ்றே படங்களில் தெரியாத அளவு சிறியவை. ஆனால், வலி ஏற்படும்போது சிறுநீரைச் சோதித்துப் பார்த்தால் சிறுகற்களும் இரத்த செவ்வணுக்களும் இருப்பதாகத் தெரிகின்றது. டாக்டர்களிடம் காட்டினால் வலிக்கு மருந்து - ஊசி தருகின்றார்கள். குணமாகிப்போய் விடுகின்றது. ஆனால், திரும்பத் திரும்ப திடீரென்று வருகின்றது. முற்றாக இந்தநோயை குணமாக்கமுடியாதா? பரிகாரம் கூறவும்.

**பதில்:** பொதுவாக நீங்கள் சிறுநீரில் கற்கள் என்று கூறியிருக்கின்றீர்கள். என்ன வகையான கற்கள் என்று கூறவில்லை. ஏனென்றால், சிறுநீரில் உண்டாகும் கற்கள் பல்வகைப்படும். முக்கியமான கற்கள் கல்சியம் ஒக்சலேட் (Calcium Oxalate) என்கின்ற கனியுப்பு வகையைச் சேர்ந்தவை. இவை அமைப்பில் கூரான முட்களைப் போன்ற உருவில் இருக்கும். இவை சிறுநீர்ப்பாதையில் இறங்கி வரும்போது பாதையில் உரசிக் கிழித்து வலியையும் இரத்தப் பெருக்கையும் ஏற்படுத்தும். இன்னும் கல்சியம், பொஸ்பேற் வகைக் கற்களும் உண்டு. இவை உப்புக்க்ல் விளைவது போல் உப்புப் படிந்து படிந்து பெரிய கற்களாக - எக்ஸ்ரேயில் தெரியக்கூடியதாக பெரிதாகும். மேலும் 'யூரிக் அசிட்' கற்களும் சிறுநீரில் உருவாகும் கற்களின் இன்னொரு வகை. இந்த முக்கியமான கற்களைத் தவிர, 'சிஸ்ரின்' (Cystine) கற்களும் - சிறுநீரில் கிருமித் தொற்றுகளால் உருவாகும் கற்களும் உண்டு. சிறுநீர்ப் பரிசோதனையில்தான் எந்த வகைக் கற்கள் என்பது புலப்படும். இப்படிப் பலவகை கற்கள் உருவாகுவதற்கு, பல்வேறு காரணங்கள் ஒவ்வொன்றுக்கும் உண்டு. எந்தக் கற்கள் என்பதை கண்டறிந்துதான் அவை உருவாகுவதை தடுக்க உரிய உணவுமுறைகளை கைக்கொள்ளவேண்டும்.




பொதுவாகவே எந்தவிதமான சிறுநீர்க் கற்கள் (Ureteric Calculus) என்றாலும் - கடைப்பிடிக்கவேண்டிய பொதுவான வழிமுறைகளை முதலில் தருகின்றேன்.

சிறுநீர்க் கற்களால் அவதியுறும் அனைவரும் தினமும் 3 லீட்டருக்குக் குறையாமல் நீர் பருகவேண்டும். கோடைகாலத்தில் அதிகளவு உடல் உழைத்து வேலைசெய்யும் காலங்களிலும் - இந்த அளவைவிட சற்று கூடுதலாக நீர் பருகவேண்டும். அதிக நீர் பருகுவதால் அதிகளவில் சிறுநீர் உற்பத்தியாகும். இதனால் கற்கள் உருவாகுவது குறையும்.

இரண்டாவது முக்கியமானவிஷயம், இவர்கள் தமது நாளாந்த தேவைக்கான கல்சியம் (Calcium) கனிப்பொருளை உணவில் சேர்க்க வேண்டும். உணவில் உள்ள 'ஒக்சலேட்' எனப்படும் கனிப்பொருள். நாம் உணவில் எடுக்கும் கல்சியத்தோடு இணைந்து மலத்தோடு வெளியாகிவிடும். இல்லையெனில், இந்த ஒக்சலேட் என்ற கனியுப்பு இரத்தத்தால் உறிஞ்சப்பட்டு சிறுநீரகம் மூலமாக வெளியேறும் போது சிறுநீரில் உள்ள கல்சியம் உப்போடு சேர்ந்து சிறுநீர்க் கற்களில் மோசமான கல்சியம் ஒக்சலேட் கனியுப்பைத் தரும். அதே வேளையில் கல்சியம் கனிப்பொருளை தேவைக்கதிகமாக உணவில் சேர்ப்பதோ அல்லது மாத்திரைகளாகத் தினமும் உபயோகிப்பதோ எதிர்மறையான கற்கள் உருவாகுவதற்கு காரண மாகிவிடும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்தப் பொதுவான வழிமுறைகளைத் தவிர உருவாகும் சிறுநீர்க் கற்களின் வகையைப் புரிந்துகொண்டு சில உணவுவகைகளை தவிர்க்கவேண்டும். கல்சியம் ஒக்சலேட் கற்கள் ஏற்படுமானால் கோப்பி, சாக்லெட், முள்ளங்கி, பீட்றூட், தானிய வகைகள், ஈரல், மார்மலேட், விட்டமின் சி உள்ள பழவகைகள், ஸ்ரோபரிஸ், திராட்சை என்பவற்றை உணவில் அதிகமாகச் சேர்க்கக்கூடாது.

கல்சியம் பொஸ்பேட் சிறுநீர் கற்கள், கிழங்கு வகைகள், புளிப்புத் தன்மையான உணவு வ கைகள் என்பவற்றால் உருவாக வாய்ப்புகள் அதிகம்.

யூரிக் அசிட் கற்கள் உருவாகுவது அதிகளவில் இறைச்சி உணவுகள் உண்பதாலும் Red Wine அருந்துவதாலும் அதிகரிக்கும். கடலை, கச்சான் வகை பருப்புகளும் யூரிக் அமில கற்களை உருவாக்கத் துணைபோகும்.

* * *

**கேள்வி:** எனது மகனுக்கு வயது 5 அவருக்கு சமீபத்தில் காய்ச்சல் வந்தபோது மருத்துவரிடம் எடுத்துச்சென்றேன். அவர் பரிசோதித்து மகனுக்கு டொன்சில் தொற்று ஏற்பட்டிருப்பதாகவும் அதனால்தான் காய்ச்சல் ஏற்பட்டதாகவும் கூறி மருந்து தந்தார். அதே வேளை இப்படி அடிக்கடி டொன்சில் அழற்சியுற்று காய்ச்சல் வந்தால் அது Rheumatic Fever எனப்படும் வாதக் காய்ச்சலுக்கு வழிவகுத்து அந்தக் காய்ச்சல் சிறுகுழந்தைகளின் இருதய வால்வுகளைப் பாதிக்கும் எனவும் அறிவுரை வழங்கினார். எனவே, அடிக்கடி டொன்சில் அழற்சியுற்றால் அதனை அகற்றிவிட நடவடிக்கை எடுக்கவேண்டிவரும் என்றும் கூறினார். இன்னொரு டாக்டரிடம் இதுபற்றிக் கலந்தாலோசித்தபோது டொன்சில் அறுவைச் சிகிச்சை அவசியமில்லை என்று கருத்துத் தெரிவித்தார். எனது மகனுக்கு டொன்சில் அழற்சி ஏற்பட்டால் டொன்சில் சத்திரசிகிச்சை செய்வது அவசியமா என்பது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:** டொன்சில் எனப்படும் நிணநீர் கலங்களின் தொகுதி - எமது தொண்டைக் குழியின் இருபக்கங்களிலும் உள்ளது. இவை எமது உடலினுள் தொற்றுகள் ஏற்படாமல் பாதுகாக்கும் ஒருவகை 'சோதனை சாவடிகள்' Police Check Points எனச் சொல்லலாம். முக்கியமாக குழந்தைகளுக்கு இவை அவசியம். இந்தக் காரணத்தால் இவற்றில் தொற்றுஏற்பட்டு, வீங்கி, காய்ச்சல் ஏற்பட்டாலும் மருத்துவர்கள் அவசரப்பட்டு அவற்றைச் சத்திரசிகிச்சை செய்து அகற்றிவிட முன்நிற்பதில்லை. ஆனால், அடிக்கடி தொற்று ஏற்பட்டால் உங்கள் வைத்தியர் கூறியபடி வாதக் காய்ச்சல் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. இதுதவிர பெரிதாக வீங்கிய டொன்சில் கட்டிகளால் குழந்தைகளின் உடல்நலம் பாதிக்கப்படலாம். காதுத் தொற்றுகள் ஏற்படலாம். இதன் காரணமாக செவிட்டுத் தன்மையும் ஏற்படலாம். எனவே; குழந்தைகளின் டொன் சில் சத்திரசிகிச்சை செய்யவேண்டிய ஏற்படும். டொன்சில் சத்திரசிகிச்சையை Tonsillectomy என்று அழைப்பார்கள். இந்த சத்திரசிகிச்சை அவசியமா, இல்லையா என்று முடிவு எடுப்பதற்கு சில வழிகாட்டிகள் உண்டு. வருடத்திற்கு ஏழு அல்லது அதற்கு அதிகமாக டொன்சில் அழற்சி குழந்தைக்கு ஏற்பட்டால் அல்லது இரண்டுவருட காலகட்டத்தில் வருடத்திற்கு ஐந்து டொன்சில் அழற்சி என்றவிகிதத்தில் தொற்று ஏற்பட்டால், குழந்தையின் சுவாசத்திற்கு டொன்சிலால் இடையூறு ஏற்பட்டால், தூக்கத்தில் குழந்தையின் சுவாசம் டொன்சிலால் தடைப்பட்டால் (Sleep Apnoea), டொன்சில் அழற்சியுற்று சீழ்ப்பிடித்தால் (Tonsillar Abscess), டொன்சில் அளவுக்கு அதிகமாக பருத்து உணவு விழுங்கக் குழந்தைக்கு கஷ்டமாக இருந்தால் - மட்டுமே டொன்சில்களை அகற்ற வைத்தியர்கள் அறிவுறுத்துவார்கள்.

* * *

# அலெக்ஸாண்டரும் 5 சிம்பன்ஸியும்



(மு)ன்னொரு சமயம் ஜெமினி நிறுவனம் தயாரித்த 'இன்ஸானியத்' என்ற திரைப்படத்தில் நடிப்பதற்காக 'ஜிப்பி' என்கிற சிம்பன்ஸி 'ஹாலிவுட்'டிலிருந்து வரவழைக்கப்பட்டது.

மீனம்பாக்கத்தில், விமானத்திலிருந்து அது தொப்பி, சூட்டுடன் இறங்கியபோது 'ஜிப்பி'யைப் பார்க்க ஆயிரக்கணக்கில் விமானநிலையத்தில் கூடியிருந்த மக்கள், 'அட!மனுஷன் மாதிரியே இருக்குப்பா!' என்று வியப்போடு பேசிக்கொண்டார்கள். மனிதன் மாதிரி இருப்பது உண்மைதான். ஆனால், சிப்பன்ஸி 'எந்த அளவுக்கு மனுஷன் மாதிரி' என்பது பலருக்குத் தெரியாது!

'எந்த அளவுக்கு' என்பதை நான் விளக்கிய பிறகு 'சிம்பன்ஸி பற்றி இவ்வளவு விவரமாகச் சொல்லி, எங்களுக்கெல்லாம் குரங்கு போன்ற உணர்வை ஏற்படுத்தியது நியாயம்தானா?!' என்று எரிச்சலாகக் கேட்பீர்கள். உண்மை அதுதான் என்பதால் நீங்கள் அதைத் தெரிந்து கொண்டுதான் ஆகவேண்டும்!

மனிதனுக்குள்ளே பலவிதமான உயிரினங்களின் மற்றும் மிருகங்களின் குணாதிசயங்கள் இருக்கின்றன என்றாலும் அதெல்லாம் ஆளுக்கு ஆள் மாறுபடும்!

அதாவது, சில மனிதர்களிடையே 'பாம்புதனம்' அதிகம் இருக்கும். சிலரிடையே 'ஓநாய்த்தனம்' அதிகம் இருக்கும்! ஆனால், ஒரே ஒரு மிருகம் எல்லா மனிதர்களுக்கு உள்ளேயும் வசிக்கிறது.

அது - சிம்பன்ஸி குரங்கு!

கடை ஓரமாகவோ, பஸ்ஸிலோ, வீட்டிலோ இதை இப்போது படித்துக்கொண்டிருக்கும் வாசகர்களுக்கு இந்தத் தகவல் ஒன்றும் அவ்வளவு ஆச்சரியமானதாக இருக்காது!

'இஞ்சி தின்ன குரங்கு மாதிரி...! மூஞ்சியைப் பாரு, குரங்காட்டம்...! நம்ம கப்பன் சரியான வாலுங்க..' - இப்படியாக நாமே சமயம் கிடைக்கும்போதெல்லாம் மனிதனைக் குரங்கோடு ஒப்பிட்டுப் பேசுகிறோம். அரசியல்வாதிகள் கூடக் கட்சிவிட்டுக் கட்சி 'தாவுகிறார்கள்!' (ஆங்கிலத்தில் இன்னும் நிறைய இப்படிச் சொற்றொடர்கள் உண்டு!) இதற்குக் காரணம் - மற்ற எல்லா உயிரினங்களையும் விட குரங்குகளை நாம் மிகவும் நெருக்கமான விலங்குகளாகக் கருதுவதால்தான்!

'ஜீன்'களைப் பொறுத்தமட்டில், மனிதனுக்கும் சிம்பன்ஸிக்கும் நூலிழையில்தான் வேறுபாடு என்பதால், எந்த நேரத்திலும் ஒரு சிம்பன்ஸி நம்மிடம் வந்து 'என்ன தம்பி?!' என்று தோளில் கையைப் போட்டுவிடுமோ என்கிற கவலையான உள்ளுணர்வு நம் எல்லோருக்கும் இருக்கிறது!

கிரேக்க மன்னன் ஹனோ, கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் ஆபிரிக்காவுக்குப் படையெடுத்தான். எழுபத்தைந்து கப்பல்களில் அந்த மன்னன் மேற்கு ஆபிரிக்கக் கடற்கரையில் இறங்கிய பிற்பாடு சில வீரர்களை அழைத்துக் கொண்டு (இன்றைய) ஸீயிராலியோன் நாட்டுக்குப் போனபோது, மலைப்பகுதியில் திடீரென்று 'காட்டுமனிதர்கள்' ஹனோவின் குழு மீது தாக்குதல் நடத்தினார்கள்.

'உடல் முழுவதும் அடர்ந்த முடியுடன், சப்பை மூக்குடன் உறுமியவாறு பாய்ந்து வந்த அந்தக் காட்டு மனிதர்களை சிரமப்பட்டுத் துரத்தியடித்தோம். அதில் சில பெண்களை நாங்கள் கைப்பற்றியபோது, அவர்கள் ரொம்ப முரண்டு பிடித்தார்கள். எங்களை நகங்களால் கீறிக்கடித்து, அந்தக் காட்டுப் பெண்கள் செய்த ஆர்ப்பாட்டங்களைப் பொறுக்க முடியாமல் அந்தப் பெண்களை வாட்களால் குத்திக் கொல்லவேண்டி வந்தது. பிறகு கிராமத்துக்கு அவர்களுடைய உடல்களைத் தூக்கி வந்தபோதுதான் அவை மனிதர்கள் அல்ல, கொரில்லா என்கிற குரங்குகள் என்று அங்கே வாழ்ந்த மக்கள் விளக்கினார்கள்...!' என்று தன் டைரியில் ஹானோ எழுதியிருக்கிறார்.

ஆமாம்! ஐரோப்பியர்கள் அதுவரை சிம்பன்ஸி கொரில்லா, எதையும் பார்த்ததில்லை! ஆனால், இந்தியாவிலும், சீனாவிலும், தென் அமெரிக்காவிலும் குரங்குகள் பண்டைய காலத்திலேயே ரொம்பப் பிரபலம்!

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே, மெக்ஸிக்கோவில் 'மாயா' நாகரிகத்தைச் சேர்ந்த மக்கள், 'இறைவன் மனிதனை உருவாக்கும் முயற்சியில் இறங்கியபோது சில தவறுகள் செய்ததால் வந்ததுதான் சிம்பன்ஸி! பிறகு மீண்டும் அந்தத் தவறுகள் சரிசெய்யப்பட்டு திருத்தங்களுடன் உருவாக்கப்பட்டவனே மனிதன்!' என்று நம்பினார்கள்.

குரங்குகளுக்கும் மனிதனுக்கும் உள்ள நெருக்கத்தை எப்போதோ புரிந்து கொண்டவர்கள் இந்தியர்கள்! இந்தியாவிலும் எகிப்திலும் குரங்குகளுக்குக் கடவுள் அந்தஸ்து கூட தரப்பட்டது!

ஐரோப்பியர்கள் விஷயம் வேறு! விக்டோரியா மகாராணி காலத்தில் சிம்பன்ஸிகளை ஆராய்ந்த டாக்டர் தாமஸ் ஸாவேஜ் என்கிற உயிரியல் விஞ்ஞானி சிம்பன்ஸியைப் பற்றிக் கடுமையாக விமர்சித்தார்!

'சிம்பன்ஸி - கெட்டுப்போன, சீரழிந்த, கூச்சமில்லாத ஆபாசமானதொரு உயிரினம்' என்றார் அவர். அதற்கு முக்கிய காரணம் - சிம்பன்ஸி செக்ஸில் காட்டிய அதீத ஆர்வம்!

விக்டோரியா காலத்தில் பள்ளிக் கூடங்களில் மாணவிகள், குறிப்பிட்ட சில மலர்களை சோதனை செய்வதற்குக் கூடத் தடை விதிக்கப்பட்டிருந்தது! அந்தப் பூக்களுக்கு ஆண், பெண் பிரத்யேக உறுப்புக்களின் 'சாயல்' இருந்ததுதான் காரணம்!

அந்த அளவுக்குக் கட்டுப்பெட்டித்தனம் நிலவிய காலகட்டம் என்பதால், 'செக்ஸியான சிம்பன்ஸிகள் ஐரோப்பியர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியதில் ஆச்சரியம் இல்லை!

பிற்பாடு, தவிர்க்க முடியாமல் லண்டன் 'ஜூ'வில் சிம்பன்ஸிகளைத் தயக்கத்தோடு கொண்டு வந்து வைத்தார்கள். ஆனால், குழந்தைகளோடு ஜூவுக்கு வந்த பெற்றோர் சிம்பன்ஸி கூண்டை நெருங்கினாலே பதற்றத்துடன் குழந்தைகளின் கண்களை மூடியவாறு, வேகமாகக் கூண்டைக் கடந்து ஓடினார்கள். அம்மாக்களின் முகம் கூச்சத்தால் சிவந்துபோனது. சிம்பன்ஸி செய்த செக்ஸ் லூட்டிகள்தான் காரணம்!

ஒருமுறை லண்டன் ஜூவில் சிம்பன்ஸிகள் 'பப்ளிக்'காக(!) காதல் லீலைகளில் ஈடுபட்டிருந்ததைக் கூட்டத்தோடு நின்று பார்க்க நேர்ந்த ஆக்ஸ்போர்ட் பிஷப் ஸாமுவேல் வில்பர்போர்ஸ் மிகுந்த திகைப்புக்குள்ளாகி, கோபத்துடன் அவற்றைப் பார்த்து விரலை நீட்டி உரக்க, 'உங்களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். கூச்சமே உங்களுக்குக் கிடையாதா? என்னை நாத்திகனான ஆக்கும் அளவுக்கு உங்கள் நடவடிக்கைகள் என்னை வெறுப்படையச் செய்கின்றன. சே...! இவ்வளவு ஆபாசமான உயிரினத்தை இறைவன் ஏன்தான் படைத்தாரோ என்று ஆச்சரியமாக இருக்கிறது!' என்று 'டோஸ்'விட, அதைக் 'கேட்ட' சிம்பன்ஸி ஒன்று கூண்டில் அவர் முன்பு வந்து அமர்ந்து உற்சாகமாக சுய இன்பத்தில் ஈடுபட ஆரம்பித்தது. 'பிஷப்'பின் முகம் மேலும் வெளிறிப் போய்விட்டது.

பொதுவாகவே குரங்கு இனம் ரொம்ப செக்ஸி! இந்தியாவுக்கு அலெக்ஸாண்டர் படையெடுத்து வந்தபோது, முதலில் அவரை எதிர்கொண்டது குரங்குகள்தான். அலெக்ஸாண்டருக்கு எதிரே அந்த



பிஷப் முன்பு சிம்பன்ஸி செய்ததையே குரங்குகள் செய்தன. இந்த மரியாதைக் குறைவான செயலைப் பார்த்துக் கோபம் கொண்ட மன்னர், அந்தக் குரங்குகளை வெட்டித் தள்ளும்படி வீரர்களுக்கு ஆணையிட்டார்! (பாவம், சிம்பன்ஸிக்கும் மனிதனுக்கும் 99.6 சதவிகிதம் 'ஜீன்'கள் ஒன்றேதான் என்பது அலெக்ஸுக்கு தெரியாது. அவருடைய குரு அரிஸ்டாடிலுக்கும் தெரியாது!)

சுருக்கமாக, குதிரைக்கும் கழுதைக்கும் உள்ள வித்தியாசம்தான் நமக்கும் சிம்பன்ஸிக்கும்!

'ஒவ்வொரு மனிதனும் அணிந்துகொண்டிருக்கும் 'நாகரீகம்' என்கிற உடைக்குள்ளே இருந்து ஒரு சிம்பன்ஸி வெளியே வரத் துடித்துக்கொண்டிருக்கிறது!' என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

ஆகவே, சிம்பன்ஸிகளைப் பற்றிப் புரிந்துகொள்வதன் மூலம் நாம் நம்மைப் பற்றி (நிஜமான நாம்!) புரிந்துகொள்ளமுடியும்!

சிம்பன்ஸி நம்மை விடக் குள்ளம். ஆனால், நம்மைவிடப் பலசாலி! உடல் முழுவதும் அடர்த்தியான முடி அதற்கு உண்டு. அநேகமாக எல்லா 'சிம்பன்ஸி'களுக்கும் ப்ரௌன் நிறக் கண்கள் இருக்கும். அவை நாற்பது அல்லது ஐம்பது வயதுவரை வாழும். மருத்துவ ஆச்சரியங்கள் வருவதற்கு முன்பு, மனிதர்கள் நாற்பதைத் தாண்டியதே அரிது என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

சிம்பன்ஸிகள் கைகளையும் பயன்படுத்தி (நாலு காலால்) நடக்கும். சில சமயம் இரண்டு கால்களாலும் (நம்மைப் போல) நடக்கும். நாலு கால் நடைபோடும் போது உள்ளங்கைகளைப் பயன்படுத்தாமல், மணிக்கட்டுக்களை சர்வ அலட்சியமாக உபயோகிக்கும்.

ஆண் சிம்பன்ஸிகள் எல்லாமே முன்கோபிகள் (Short Tempered). குடும்ப உறவு அவைகளுக்கு ரொம்ப முக்கியம். 'சிம்ப்' குழந்தைக்கு ஒரு பிரச்சினை என்றாலோ, அது வீறிட்டு அழுதாலோ உடனே அம்மா, பாட்டி, அத்தை எல்லோரும் பதைபதைப்போடு ஓடிச் சென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு சமாதானப்படுத்தும்.


'சிம்ப்'களுக்கு ப்ராங்கைடீஸ், நிமோனியா போன்ற, மனித நோய்கள் அத்தனையும் வரும். வயசானால் நெற்றியில் வரிக்கோடுகள், முகத்தில் சுருக்கங்கள், பல் விழுவது, முடி கொட்டுவது, நரைப்பது... எல்லாப் பிரச்சினைகளும் அவைகளுக்கும் உண்டு!

முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்க நேரிட்டால், 'இது நான்தான்!' என்பதை சிம்பன்ஸிகள் புரிந்துகொள்கின்றன. குடும்பத்தினர் உறவினர்கள்கூட அமர்ந்து, 'அரட்டையடித்துக்கொண்டு' விருந்து சாப்பிடுவது அவைகளுக்குப் பிடிக்கும்.

அதேசமயம், மது அருந்தினால் மனிதனைப் போலவே போதையோடு தள்ளாடியவாறு - 'டாய்' என்று குரல் கொடுப்பதைத் தவிர - மற்ற எல்லா கலாட்டாக்களையும் சிம்பன்ஸி பண்ணும். அப்போது, அதன் பின்னாலேயே பெண் சிம்பன்ஸி கவலையோடு ஓடும்!

செக்ஸ்?! சிம்பன்ஸிகளின் செக்ஸ் விஷயத்தை விவரிக்க, ஒரு தனிப் புத்தகமே போட வேண்டியிருக்கும்...!

தொடரும்...




மனித இனத்தோடு வன்முறையும் கூடவே வளர்ந்து அரக்க ரூபம் எடுத்த வரலாற்றை தனது 'மனிதனுக்குள்ளே ஒரு மிருகம்' என்ற தொடரிலே தனக்கேயுரிய சிலிர்ப்பூட்டும் எழுத்து நடையில் தந்திருக்கின்றார் தமிழகத்தின் பிரபல எழுத்தாளரான மதன்.

'ஆனந்த விகடன்', 'ஜூனியர் விகடன்', 'ஜூனியர் போஸ்ட்' போன்ற பத்திரிகைகளில் இணை ஆசிரியராகப் பணி புரிந்த மதன் ஒரு புகழ்பெற்ற கார்ட்டூனிஸ்ட்.

மனித மூளைக்குள் கொடூரமாகப் புதைந்து கிடக்கும் 'வன்முறைக் கலங்களை' ஒரு தடவை தட்டி எழுப்பி அதன் உள்ளார்ந்தங்களை அவர் இத் தொடரில் தந்தார்.

'ஆனந்த விகடன்' இதழில் வாசகர்களின் பெருவரவேற்பைப் பெற்ற இந்தத் தொடர், [illegible] இருந்து இங்கு தொடர்ந்து பிரசுரமாகின்றது.






# நான் கண்ட பாரதி

1


எஸ். டி.சிவநாயகம்

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை உலகில் தன்னிகரற்ற ஜாம்பவானாக மதிக்கப்படுபவர் 'தினபதி', 'சிந்தாமணி', 'சூடாமணி' போன்ற பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியராக மிளிர்ந்த அமரர் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள்.

ஈழத்துத் தமிழ் ஊடக உலகுக்குக் காத்திரமான பல பத்திரிகையாளர்களை வழிகாட்டி, உருவாக்கிவிட்ட பெருமைக்குரியவர் சிவநாயகம்.

27ஆண்டுகளுக்கு முன்னர் - பாரதியார் நூற்றாண்டு சமயத்தில் - தமது 'சிந்தாமணி' வார இதழில் 'நான் கண்ட பாரதி' என்ற தலைப்பில் தொடராக அவர் வரைந்த கட்டுரைகள் பரபரப்பாகப் பேசப்பட்டவை. மகாகவி பாரதியை புதிய கோணத்தில் தமிழ் உலகம் தரிசிக்கச் செய்தவர் சிவநாயகம்.

அக்கட்டுரைத் தொடரை மறுபிரசுரம் செய்வதன் மூலம் பெருமையடைகிறது 'சுடர் ஒளி'.

இக்கட்டுரைத் தொடருக்குள் புகமுன் வாசகர்களுக்கு ஒரு நினைவூட்டல். இத்தொடர் 27 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. இத்தொடரில் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் கோடிகாட்டிச் செல்லும் பாத்திரங்கள் சில அச்சமயம் நம் மத்தியில் வாழ்ந்தவர்கள். அவர்கள் இப்போது இக்கட்டுரை மறுபிரசுரமாகும் சமயத்தில் நம்மத்தியில் இல்லாமல் மறைந்திருக்கலாம்.

எனவே, 27ஆண்டுகளுக்கு முற்பட்ட பின்புலத்திலே உங்கள் நினைவுகளைச் சுழலவிட்டபடி இந்தத் தொடருக்குள் நுழையுங்கள்!

- ஆசிரியர் -

பாரதியார் வாழ்ந்த காலத்தில் நான் பிறக்கக்கூட இல்லை. அப்படியானால் ''நான் கண்ட பாரதி'' என்று எப்படிக் கூற முடியும்?

கேள்வி நியாயமானதுதான்.

ஒரு மஹா புருஷரைக் காண்பதற்கு அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை.

அதேபோல, ஒரு மஹா கவியைக் காண்பதற்கும் அவர் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்திருக்க வேண்டியதில்லை.

'கம்பன் கண்ட ராமன்' என்று எத்தனையோ பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எழுதியும், பேசியும் வருகிறார்கள்.

ராமன் வாழ்ந்தது திரேதயுகம்.

அதன் பின்னர் வந்தது துவாபர யுகம்.

அதைத் தொடர்ந்து இப்போது கலியுகம் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது.

இந்தக் கலியுகத்தில், இன்றிலிருந்து சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் கம்பர், அந்தக் கம்பர் ராமனை நேரில் கண்டாரா?

அப்படியிருந்தும், 'கம்பன் கண்ட ராமன்' என்று கூறப்படுவதை, எழுதப்படுவதை, நாடு ஏற்றுக்கொள்கிறது அல்லவா?

'ஷேக்ஸ்பியர் கண்ட ஜூலியஸ் ஸீஸர்' என்றும், 'பேர்னாட் ஷா கண்ட கிளியோபாத்ரா' என்றும் ஆங்கிலத்தில் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ஸீஸரும், கிளியோபாத்ராவும் வாழ்ந்த காலம் எது? ஷேக்ஸ்பியரும், பேர்னாட் ஷாவும் வாழ்ந்த காலங்கள் எவை?

# இலங்கையில் மகாகவி பாரதியாரின் பெயர் முதன்முதலில் அறிமுகமானது திருமலையில்தான்

எனவேதான், 'நான் கண்ட பாரதி' என்ற தலைப்பு அப்படியொன்றும் தவறானதல்ல. பாரதியின் தரிசனத்தை அவன் பாடிய பாடல்கள் மூலம் நான் எப்படிக் கண்டேன் என்பதுதான் இதன் பொருளாகும்.

பாரதியை எனக்கு முதன் முதலாக அறிமுகப்படுத்தி, அடையாளம் காட்டியவரை இப்போது மிக்க நன்றியறிதலோடு எண்ணிப் பார்க்கின்றேன்.

இதிலும் ஒருவித 'கோ - இன்ஸிடென்ஸ்' - அதாவது நிகழ்வுப்பொருத்தம் - இருக்கக் காண்கிறேன்.

பாரதியாரின் பெயர் சுப்பிரமணியம்.

பாரதியாரை எனக்கு அறிமுகப்படுத்திய அந்த மதிப்புக்குரியவரின் பெயரும் சுப்பிரமணியம் தான்!

திருகோணமலையில் நான் மாணவனாக இருந்த பொழுது ஒரு நாள் இந்த திரு.ஆர்.சிவ.சுப்பிரமணியம் என்பவர் 'பாரதி நூல்கள்' என்ற ஒரு புத்தகத்தைத் தந்து, ''இதைப் படி உனக்குத் தமிழ் அறிவும், தமிழ் ஆற்றலும், கவிதை ரஸனையும், தேச பக்தியும், சுதந்திர உணர்ச்சியும் ஏற்படும்'' என்று கூறினார்.

அன்று வரை, பாரதி என்றால் யார் என்று நான் அறிந்திருக்கவில்லை. அப்படி ஒருவரைப் பற்றி, ஒரு கவிஞரைப் பற்றிக் கேள்விப்பட்டும் இருக்கவில்லை.

இந்த, திரு.சிவ.சுப்பிரமணியம் அவர்கள் இன்றும் திருகோணமலையில் வாழ்ந்து வருகிறார். அப்போது அவர் திருகோணமலை இந்துக் கல்லூரியில் கேம் பிரிட்ஜ் சீனியர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார் என்று ஞாபகம்.

நான் சென்ட் ஜோஸப் கல்லூரியில் ஏதோ ஒரு கீழ் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். நான் திரு.சிவ.சுப்பிரமணியம் அவர்களை ''அண்ணன்'' என்று அழைப்பேன். அவர் அன்போடு ''தம்பி''என்று என்னை அழைத்துக் கொள்வார்.


அவர் கொடுத்த 'பாரதி நூல்கள்' என்ற புத்தகத்தைப் பாசத்தோடு பெற்றுக் கொண்டேன்.

அந்த நூலைப் படித்தால் ஐந்து காரியங்கள்

தமிழ் அறிவு
தமிழ் ஆற்றல்
கவிதை ரஸனை
தேச பக்தி
சுதந்திர உணர்வு

ஏற்படும் என்றும் அவர் சொன்னார் அல்லவா?

அவர் கூறியது பொய்ப்படவில்லை.


திருகோணமலை காளிகோவில்

*

'பாரதி நூல்கள்' என்ற அந்தப் புத்தகத்தை வீட்டுக்குக் கொண்டுபோய்ப் படித்துப் பார்த்தேன்.

ஆஹா, என்ன ஆனந்தம், என்ன இனிமை, என்ன புதுமை, என்ன எளிமை, இப்படியும் கவிதைகள் இருக்க முடியுமா என்று


ஆர். சிவ சுப்பிரமணியம்

அதிசயித்துப் போனேன்.

இத்தகைய ஓர் அற்புத நூலை இரவல் வாங்கிப் படித்துக் கொண்டிருக்க முடியாது. நாமே நமக்கென்று ஒரு நூலை வைத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்ற ஆசையும், உணர்ச்சியும், உந்தலும், அன்றிரவே எனக்கு ஏற்பட்டு விட்டன.

- எஸ்.டி.சிவநாயகம் -


மறுநாள் காலை திருகோணமலையிலிருந்த 'ஈஸ்ட் லங்கா புக் டிப்போ' என்ற புத்தகக் கடைக்குச் சென்று 'பாரதி நூல்கள்' என்ற புத்தகம் கிடைக்குமா என்று விசாரித்தேன்.

அதிலும் ஓர் அதிசயம்!

ஒரே ஒரு புத்தகம்தான் இருந்தது.

சென்னை, திருவல்லிக்கேணி பாரதி பிரசுராலயத்தால் வெளியிடப்பட்ட புத்தகம், சென்னை தியாகராய நகர் ஹிந்தி பிரசார அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்ட புத்தகம். 'விலை ரூபா 2.50 தான்' என்று சொன்னார்கள். உடனே வாங்கிக் கொண்டேன். சரியாக 721 பக்கங்கள் கொண்ட அந்த நூல் முழுவதும் துணி போட்டு கலிகோ பைண்ட் செய்யப்பட்டிருந்தது. ரூபா 2.50க்கு கொள்ளை மலிவு; அந்த நூல் இன்னும் என்னிடம் பாதுகாப்பாக இருக்கிறது.

பாரதியார் இறந்த பின்னர் அவர் சகோதரர் திரு.சி.விசுவநாத ஐயர் 'பாரதி பிரசுராலயம்' என்று ஓர் நிறுவனத்தை உருவாக்கி பாரதி நூல்களை வியாபார ரீதியில் வெளியிட்டு


பாரதியார்

வந்தார்.

அதில் ஒன்றைத்தான் நான் சொந்தமாக்கிக் கொண்டேன்.

இரவல் நூலை மறுதினம் கொடுத்துவிட்டு, சொந்த நூலைத் திருப்பித் திருப்பிப் படிக்க ஆரம்பித்தேன்.

*

பாரதி பாடிய அத்தனையும் அருமையான பாடல்கள்தாம். ஆயினும், முதலில் என்னை அவருடைய சுதந்திரப் பாடல்களோ, தேசிய கீதங்களோ, பாரத நாடு - தமிழ் நாடு என்ற தலைப்புகளில் வந்த பாடல்களோ, வேதாந்தப் பாடல்களோ கவரவில்லை.

நாற்பது நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாகியும், பாரதி பாடல்களில் முதலில் என் மனதிற் பதிந்த பாடல் எது என்பது இன்னும் எனக்குப் பசுமையாக இருக்கிறது.

பாரதியார் 'காளிப் பாட்டு' என்ற தலைப்பில் இரண்டு பாடல்கள் பாடியிருக்கின்றார். 'காளி ஸ்தோத்திரம்' என்ற தலைப்பில் ஏழு பாடல்கள் பாடியிருக்கின்றார், மொத்தம் இந்த ஒன்பது பாடல்களில் ஐந்து பாடல்கள் என் மாணவப் பருவத்தின் வாலாயப் பாடல்களாக மனதில் பதிந்தன —

அந்த ஐந்து பாடல்களையும் இங்கே தருகிறேன்.

யாதுமாகி நின்றாய் - காளி
எங்கு நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - காளி
தெய்வ லீலை யன்றோ?
பூத மைந்து மானாய் - காளி
பொறிக ளைந்து மானாய்
போத மாகி நின்றாய் - காளி
பொறியை விஞ்சி நின்றாய்

இன்ப மாகிவிட்டாய் - காளி
என்னுள்ளே புகுந்தாய்
பின்பு நின்னை யல்லால் - காளி
பிறிது நானு முண்டோ?
அன்ப ளித்து விட்டாய் - காளி
ஆண்மை தந்து விட்டாய்
துன்ப நீக்கி விட்டாய் - காளி
தொல்லை போக்கி விட்டாய்

என்ற னுள்ள வெளியில் - ஞானத்
திரவி யேற வேண்டும்
குன்ற மொத்த தோளும் - மேருக்
கோல மொத்த வடிவும்
நன்ற நாடு மனமும் - நீயெந்
நாளு மீதல் வேண்டும்
ஒன்றை விட்டு மற்றோர் - துயரில்
உழலு நெஞ்சம் வேண்டா

வான கத்தி னொளியைக் - கண்டே
மனம கிழ்ச்சி பொங்கி
யானெ தற்கு மஞ்சேன் - ஆகி
எந்த நாளும் வாழ்வேன்
ஞான மொத்த தம்மா - உவமை
நானு ரைக்கொ ணாதாம்
வான கத்தி லொளியின் - அழகு
வாழ்த்து மாறி யாதோ?

காளி மீது நெஞ்சம் - என்றும்
கலந்து நிற்க வேண்டும்
வேலை யொத்த விறலும் - பாரில்
வேந்த ரேத்து புகழும்
யாளி யொத்த வலியும் - என்றும்
இன்ப நிற்கு மனமும்
வாழி யீதல் வேண்டும் - அன்னாய்
வாழ்க நின்றன் அருளே

*

காளி தேவியைப் பற்றிய பாடல்களில் என் மனம் பதியுற்றமைக்கு ஒருவித 'சைகோலோஜிகல்' காரணமும் உண்டு.

திருகோணமலையில், சிவன் கோவிலடியிலிருந்த எங்கள் வீட்டிலிருந்து, பெரிய கடை என்ற பகுதியில் அப்போதிருந்த செண்ட் ஜோஸப் கல்லூரிக்குப் பெரும்பாலும் பக்கி வண்டியில் செல்வது வழக்கம்.

(27ஆம் பக்கம் பார்க்க)

# செப்பு சல்பேற்றின் குறியீடு



சிறுகதை

**பளை கோகுலராகவன்**

நாகர்கோவிலுக்கு போவதென்றால் எங்கள் பிரயாணம் மிகவும் அற்புதமாகி விடும். அங்கு தரவையில் இருப்பவர்கள் எல்லாரும் எங்களுக்கு அப்பா வழியிலும் அம்மா வழியிலும் நெருங்கிய சொந்தம்தான். நாகர்கோவிலுக்கு போவதற்கு எங்களுக்கு வருடாவருடம் ஒரு வாய்ப்பு கிடைக்கும். அது நாகர்கோவில் நாகதம்பிரான் கோவில் கப்பல் திருவிழா. அது ஆவணி - புரட்டாதியில் வரும். நாலுநாள் நின்றுவருவோம்.

மிகவும் அழகான ஊர். நிறைய நாவல் பழம் கிடைக்கும். மணல் குன்றுகளில் நின்றபடியே பறித்துச் சாப்பிடலாம். நம்மூர்க் கிணறுகளில் நாகர் கோவில் கிணறுகள் மூன்று நாளைத் தூக்கிவைத்துவிடலாம். பனை ஓலையால் வேயப்பட்ட மண்வீடுகள். படுத்தால் எழும்ப மனம் வராது.

போகவும், வரவும் நிறைய குசலம் விசாரிப்பார்கள். ''இரத்தினன்ரை பொடியனே'' என உச்சிமோந்து தலை துளாவி விடும் இதமான உறவுகள்.

நிற்கட்டும்; அது ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தி நாலு என்று நினைக்கின்றேன். பொங்கலுக்கு எடுத்த நீலக் காற்சட்டையும், மஞ்சள் புள்ளி எயிற்றி டுவெண்ரி சேட்டும் போட்டிருந்த ஞாபகம்.

அது ஒரு பங்குனி மாதம். மழை ஓய்ந்து தண்ணீர் பரவி வற்றவில்லை. அம்மாவின் மாமன் மகளின் சாமத்திய வீட்டிற்கு போக அழைப்பிதழ் வந்தது. பன்றிக்குட்டிகள் போல அம்மாவின் பின் இழுபடும் கதைதான்.

திருவிழாவிற்கு தனியே அண்ணன்களுடன் போகும் எனக்கு, அன்று எனது அணியும் இணைந்தமை சும்மா சொல்லக்கூடாது பெருமகிழ்வுதான். அம்மாவின் மாமன் எங்கள் ஊர் தான். அதனால் ஊர் முழுக்கச் சொல்லி இருந்தார். போக வசதி இல்லாதவர்கள் பொடியளைப் பிரதிநிதிகளாக அனுப்பிவிடுவார்கள்.

இந்தப் பொடியள் அணியில் எனக்கு வேண்டியவர்கள் இருந்தார்கள். சங்கரி என்ற தவசங்கர் (ஓ. எல்.வகுப்பு) றஞ்சு என்ற றஞ்சிதராசா, கொடுக்கன் என அழைக்கப்படும் கோவிந்தராசன், முட்டியாகிய முகுந்தன் இவர்கள் எல்லோரும் என்னுடன் வகுப்பு ஏழில் படித்தவர்கள்.

எழுதுமட்டுவாழில் இறங்கி நாகர் கோவிலுக்கு ஐந்துமைல் நடக்கவேண்டும். நாம் பஸ்ஸால் இறக்கி வேகமாக முன்னேறத் தொடங்கினோம்.

றோட்டின் இருபக்கமும் தண்ணீர் நிரம்பி இருந்தது. றோட்டில் இருந்த கற்கள் ''பளக்'' என்ற சத்தத்துடன் தண்ணீரில் மூழ்கிக்கொண்டிருந்தன. அம்மா, சித்தி, சங்கரியண்ணையின் தாய், கொடுக்கனின் தாய்மாமி, றஞ்சுவின் சிறியதாய், முட்டியின் பேத்தியார் எல்லோரும் நடையில் பின்தங்கிவிட்டனர்.

முட்டியின் அம்மம்மா அடிக்கடி ''டேய் முகுந்து நில்லடா. கல்லடிக்கும்டா என்ரை கையை பிடித் துக் கொண்டு வாடா, நில்லடா!'' என்று ஒலிபெருக்கியபடி வந்தார். பாவம் மனுசி. செருப்பு அறுந்து அதைக் கையில் தூக்கியபடி வந்தார்.

இதில் ஒரு விசேடம் பாருங்கள். பத்து குடும்ப பிரதிநிதிகள் சாமத்திய வீட்டுக்கு போய்க்கொண்டிருந்தோம். உடையார் பொல்லு அனுப்பினமாதிரி! இதற் குப் பதிலாக எங்கள் வீடுகளில் விசேடம் என்றால் பொடியள்தான் நிரம்பி வழிவார்களோ தெரியாது.

''ஆர் பார்ப்பம் தூரத்துக்குக் கல் எறிகிறது'' எங்கள் ஆட்டம் தொடங்கியது. எல்லோர் கைகளிலும் கணக்கான தேடி எடுத்த கற்கள்.

மல்ரி ஷெல் மாதிரி, ''பிளக், பிளக் பிளக்'' கென்று தண்ணீரில் கற்கள் விழுந்தன. தண்ணீர் தெறித்து மேல் எழுந்தது. அதில சூரிய ஒளிபட்டுத் தெறித்தது. கொஞ்சம் தள்ளி இருந்த நத்தை கொத்திகளும், கொக்கு, நீர்க்காகங்களும், கூழைக்கடாக்களும் படக்கென்று எழுந்து பறந்தன.

''டேய் உது எந்த நாட்டுப் பறவையடா?'' என்று கேட்டான் முட்டி.

''உதடா சைப்பஸ் நாட்டு பறவையடா'' விடை சொன்னான் கொடுக்கன்.

றஞ்சு விழுந்து விழுந்து சிரித்தான்.

''அது எங்கையடா இருக்கு சைப்பஸ்?'' என்று கேட்டோம்.

''ஓ! சைப்பஸ் நாட்டில் இருந்துதானாம் உந்தப் பறவைகள் வருகின்றனவாம். அப்பா சொன்னவர்'' என்றான் முட்டி பிறகும்.

''சைப்பஸ் இல்லையடா சைப்பிரஸ்'' என்று திருத்தினான் சங்கரியண்ணை.

''ஒவ்வொன்றும் மூன்று கிலோ வரும்'' என்றான் முட்டி. அவன் இன்றுதான் நத்தை கொத்தியை முதன்முதலில் காண்கிறான்.

''அடேய் அப்ப இரண்டு ஆறுகிலோ என்னடா?'' இது கொடுக்கனின் முட்டி மீதான நக்கல்.

முட்டி கொடுக்கனுக்கு கல்லால் எறிந்தான். கொடுக்கன் ஓடத் தொடங்கினான். எல்லோரும் ஒரே நேரத்தில் ஓடத் தொடங்கினோம்.

றஞ்சு எப்பவும் வேகம்தான். பள்ளிக்கூடத்தில் 100மீற்றரில் அவன்தான் முதலாவது. மேல்மூச்சு வாங்கியது. ஒருபாலம் அருகில் மருதமரம். அதில் களைப்பாற இருந்தோம்.

கொடுக்கன் பாலக்கட்டில் நின்று, தண்ணீருக்குள் மூத்திரம் பெய்தான். சளசளவென்று சத்தம் கேட்டது.

''ஏடேய் மீன்களுக்கு சுடப்போகுது'' முட்டி கத்தினான்.

நுரையாய்க் கிளம்பிய சலம் தண்ணீருடன் சேர்ந்து போய்க்கொண்டிருந்தது. கொடுக்கன் என்னைப் பார்த்துச் சிரித்தான்.

மீண்டும் கல்லெறியும் போட்டி ஆரம்பமாகியது. இந்தத் தடவை முட்டியின் கல் தூரத்தில் பிளக்கென்று சத்தத்துடன் விழுந்தது. முட்டி துள்ளிக் குதித்தான்.

கொடுக்கனுக்குப் பொறுக்கவில்லை.

''இப்ப சட்டி பானை எல்லாம் சரியான விலையடா'' வம்பு தொடங்கியது.

முட்டி சும்மா சில்லறை ஆளில்லை.

''முந்தநாள் இரா்த்திரி அம்மாவுக்கு காலில் ஏதோ குத்திப்போட்டுது தேடிப்பார்த்தோம். காணல்லை'' என்ற முட்டியைப் பார்த்துக் கொடுக்கன் முறைத்தான்.

''டேய் சத்தம் போடாமல் வாருங்கோடா'' சங்கரியண்ணை உத்தரவு போட்டான்.

நான்தான் வழிகாட்டியும் விளக்கவுரைஞரும். ஏனெனில், மற்றவர்களுக்கு இது முதல் அனுபவம்.

''இந்த ஆறு, மருதங்கேணி ஆற்றிலை கலக்கும். மாரி தொடக்கத்தில் மருதங்கேணிக்கு பாயும் பிறகு மருதங்கேணி முட்டியவுடன் தொண்டமானாற்றுக்குத் திரும்பிபாயும்'' என்று விளக்கம் சொல்லி வைத்தேன்.

எல்லோரும் மகாவலி பாய்கின்றது மாதிரி ஆவென்று கேட்டார்கள்.

''முந்தி இந்த ஆற்றில் பாலம் கட்ட முன் ஓடம் ஓடினது. ஓடத்தில் போக ஐம்பது சதம்'' என்றேன்.

ஓடத்தில் ஏறி இருந்துகொண்டு கால் நனைய இருக்க மிகவும் சுகமாக இருக்கும்.

எல்லோரும் தாமும் ஓடத்தில் ஏறவில்லையே என்று அங்கலாய்த்தார்கள்.

தண்ணீருக்குள் ஏதோ செத்து மணத்தது. மிதந்தது.

''உது நீர்கொத்தைப் பாம்பு''

''நீர் கொத்தைப்பாம்பு கடிக்குமோ?''

''சீ அது கடியாது'' என்றேன்.

பாலக் கல்லில் யாரோ கக்கூஸ் இருந்திருக்கிறார்கள். மணத்தது.

முட்டி காறித் துப்பினான். றஞ்சு காலைத் தூக்கித் தூக்கிப் பார்த்தான்.

முட்டி கொடுக்கனுடன் கொழுவினான்.

''உன்னை மாதிரி ஆட்கள்தான் இப்படி செய் வார்கள்''

''நீ திறமான ஆள்! பொலிஸ் ஸ்ரேசன் சுவரிலை தூஷணம் எழுதேல்ல...?''

''கண்டனியோ. மடையா.''

''மடையா எண்டால் அடிச்சு பல்லு உடைச்சுப் போடுவன்''

''உடையடா பார்ப்பம்''

நான் முட்டியை இழுத்துப் பிடித்தேன். சங்கரி அண்ணை கொடுக்கனை இழுத்துக்கொண்டு போனான்.

* * *

நாகர் கோவில் சந்திக்கு வந்துவிட்டோம். சந்தியில் பூனைக் கந்தையரின் கடையில் முட்டி மரவள்ளிப் பொரியல் வாங்கினான். ஆளுக்கு ஒருபை வாங்கிக் கொடுத்தான்.

கொடுக்கன் வேண்டாம் என்று மறுத்துவிட்டான். அவனுக்கு முட்டியில் சரியான கோபம்.

'சே உது சரியான பித்தம்'' சும்மா புலுடா தான்.

நானும் கொடுக்கனும் கொஞ்சம் பிந்திவிட்டோம். மரவள்ளிப் பொரியலை யாரும் காணாதமாதிரி அவனிடம் கொடுத்தேன்.

ஒருதரும் காணாமல் வாய்க்குள் அடக்கி அடக்கி சப்பினான் கொடுக்கன். எனக்குச் சிரிப்பு வந்தது. மரவள்ளிப் பொரியல் வாய்க்கு இதமாக இருந்தது.

அதனைக் கொடுக்கன் பிறகும் என்னிடம் வாங்கிச்சாப்பிட்டதன் மூலமும் நிரூபித்துக் கொண்டேன்.

சாமத்திய வீட்டுக்குக் கிட்ட வந்து விட்டோம். காற்சட்டை, சேட்டை சரிபார்த்துக் கொண்டு போனோம்.

சங்கரியண்ணை சீப்பை எடுத்து தலை வாரிக் கொண்டான். அவன் 'சிக்கோ 5' மணிக் கூடும் கட்டியிருந்ததை கவனித்தேன்.

சாமத்திய வீட்டு ஸ்பீக்கரில் ''சிறுத்தைகளே ஒன்று சேருங்கள்'' பாடல் ஒலித்துக்கொண்டு இருந்தது''

முட்டி ''சிங்கத் தமிழா புறப்படு'' என்று பாடினான். கொடுக்கன் பெருமூச்சுவிட்டதைக் கண்டேன்.

உள்ளே நுழைந்தோம். கொட்டகைக்குள் நுழைந்து முன்னே இருந்து கொண்டோம். யாரும் கவனிப்பதாகத் தெரியவில்லை. கும்பம் வைத்த இடத்து பலகாரங்கள் எம்மை பார்த்து ''சுகமா?'' எனக் கேட்டன.

நல்லகாலம் ஒரு பச்சைத் தாவணிபோட்ட பிள்ளை பலகாரமும் தேநீரும் தந்துவிட்டுப் போனாள்.

அவள் உள்ளே போய் மற்ற ஆட்களுக்கு தேநீர்கொண்டு வரும்பொழுது எமது தட்டு காலியாகக் கிடந்தது.

ரின்பால் தேநீரைக் கொடுக்கன் ஊதி ஊதிக் குடித்தான். அவன் கைக்குள் பயற்றம் பணியாரம் 2, 3 இருந்தது. பின் அது காற்சட்டைபைக்குள் போனதைக் கண்டேன்.

இனி ஒன்றும் கிடையாது. அதில் இருந்தால் அட்டகாசம் செய்யமுடியாது. கொஞ்சம் தள்ளி சித்தப்பா இருந்தார்.

மெதுவாக எழும்பி முன்னால் சென்று வெறுங் காணிக்குள் வந்தோம். முன்னால் வயல்வெளி. அருகில் பருத்தித்துறை வீதி. பக்கத்தில் கடை ஒன்றும் இருந்தது.

கடைவாசலுக்கு வந்தோம். கடைக்குள் வாங்கு ஒன்று இருந்தது. அதில் இரண்டு மூன்றுபேர் இருந்து கதைத்துக் கொண்டிருந்தனர். அதில் நாமும் ஒட்டிக் கொண்டோம்.

சங்கரியண்ணை அலுப்புக் கொட்டினான் ''என்ன ஊருடா இது? ஒரு பஸ்சும் ஓடுதில்லை. நடக்கிறதென்றா எவ்வளவு தூரம்''

நான் கடையை திரும்பிப் பார்த்தேன். ஓர் அலுமாரி, அதற்குள் மூன்று நாலு றாத்தல் பாண். கொஞ்சம் தள்ளி ரீ பட்டடை கடைக்காரர் சரவணமுத்து மாமா பழைய பேப்பர் பார்த்துக் கொண்டிருந்தார்.

சங்கரியண்ணை பெரியாள் மாதிரி, ''இண்டையான் பேப்பர் இருக்கே?'' என்று கேட்டார்.

''வாசிகசாலைக்குப் போனால் பார்க்கலாம்.''

வாசிகசாலை மிகத் தூரம் என்டபடியால் போகாமல் இருந்துவிட்டோம்.

சங்கரியண்ணை கடையில் பீடா, வெற்றிலை வாங்கி போட்டபடி கடை அரைச்சுவரில் ஏறி இருந்துகொண்டான்.

நாங்கள் அலட்டியபடி குந்திக் கொண்டு இருந்தோம்.

கடை வாயிலில் இருந்த ஓர் இளைஞன் - கறுப்புகொட்ரோயில் ரவுசரும், வெள்ளை ரீசேட்டும் போட்டிருந்தவன் - எம்மை அவதானிப்பது தெரிந்தது. அவன் சாமத்திய வீட்டுக்குப் புகைப் படம் எடுக்கவந்தவன் என்று பின்னர் மணவறையில் செல்லமாமியைப் படம் எடுக்கையில் கண்டு கொண்டேன்.

அவன் கேட்டான்.

''தம்பியவை எங்கை படிக்கிறீர்கள்?''

''பளை மகா வித்தியாலயம்'' என்று சங்கரியண்ணை எடுப்பாக சொன்னான்.

சங்கரியண்ணையரிடம் ''என்ன வகுப்பு படிக்கிறீர்?'' என்று எல்லா விவரமும் கேட்டான். பின்னர் சங்கரியண்ணையை பார்த்து, ''தம்பி செப்பு சல்பேற்றுக்கு என்ன குறியீடு?'' என்று கேட்டான்.

கெட்டது குடி. சங்கரியண்ணைக்கு செப்பு சல்பேற்று எந்தப் பாடத்தில் வருகின்றது என்பது கூடத் தெரியாது. சங்கரியண்ணை முழுசத் தொடங்கினான்.

நல்ல காலம் போட்டோக்காரர் எங்களை திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால் ஏழாம் வகுப்பில் இதெல்லாம் கிடையாது. வேறு ஏதும் கேள்வி கேட்டால் கஸ்ட காலம்தான்.

சங்கரியண்ணை முகத்தில் பத்துப் போத்தல் தேங்காய் எண்ணை வழிந்தது.

''இந்தக் காலப் பொடியள் பள்ளிக் கூடம் படிக்கவோ போகுதுகள்?''

கடைக்காரர் பொரியத் துவங்கினார். அவருக்கு நாங்கள் வாங்கில் குந்தினது முதலிலேயே பிடிக்கவில்லை.

''அந்தக் காலத்தில் நாங்கள் என்ன படிப்பு படித்தோம். பீடியை உறிஞ்சியபடி ரீ போடுபவர் வெள் ளாப்பு வைத்தார்.

போதாக்குறைக்கு வாங்கில் இருந்த ஒருவர் ''இந்தக் கால பொடியளுக்கு மரியாதை தெரியா தப்பா! பிஞ்சில பழுத்ததுகள்'' என்றார்.

என்னடா இழவு இது என்றாகி விட்டது.

கமராக்காரன் சங்கரியண்ணையை விடுவதாக இல்லை. ''எப்படி ஓ.எல். எடுக்கப் போகின்றீர்?'' என்றார்.

சங்கரியண்ணைமௌனமாக இறங்கிப் போய் விட்டார்.

* * *

செத்த நாயில் உண்ணி கழண்ட மாதிரி அந்த இடத்தை விட்டு ஓடி வந்துவிட்டோம்.

பிறகு சாமத்திய வீட்டில் ஏதோ சாப்பிட்டோம். வீட்டுக்கு போக புறப்பட்டோம்.

தண்ணீர் நிரம்பிய பாதையை விரைந்து கடந்து விட்டமை எனக்கு வியப்பாகவே இருந்தது.

எங்களில் முன்னுக்கு சங்கரியண்ணை வேகமாக நடந்து கொண்டிருந்தான். எங்கள் ஒருவருடனும் அவர் பேசவே இல்லை. முட்டியும் கொடுக்கனும் வேகமாக நடந்தார்கள்.

றஞ்சுவும் எதுவும் பேசவில்லை.

எனக்கு மனதில் ஏதோ உறைத்தபடி இருந்தது. ஏதோ ஓர் அர்த்தம் மனதில் பட்டபடி இருந்தது.

வீட்டுக்கு வந்து அண்ணன்களின் புத்தகங்களைப் புரட்டி செப்பு சல்பேற்றின் குறியீட்டை தெரிந்து கொண்டேன்.

சங்கரியண்ணை பார்த்தானோ தெரியவில்லை? பார்த்திருந்தால் அந்த வருடம் ஓ.எல். பாஸ் பண்ணி இருப்பார். அவர் அதற்கு பிறகும் பார்க்கவில்லை என்றுதான் நினைக்கின்றேன்.

* * *




சுடர் சிந்தனை :- ''தொடர்ச்சியான பயிற்சியே வெற்றிக்கு வழி''

# தரம்-05 புலமைப்பரிசில்

## விசேட மாதிரி வினாத்தாள் - 08

மாணவர் பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

பாடசாலை/கல்வி நிலையம் : ..........................................................

மாவட்டம் : ..........................................................


தொலைபேசி இலக்கம் : ..........................................................

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

### பகுதி - I


✱ முதலாம் வினாவில் தரப்பட்ட உருவில் விடுபட்ட பகுதியைத் தெரிந்துஅதன் கீழ்க் கோடிடுக.

01.




✱ 2ஆம், 3ஆம் வினாக்களில் கேள்விக்குறி (-?-) வரும் இடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

02.





1) 10

2) 9

3) 12

03.





1) 

2) 


3) 

04. முதலில் தரப்பட்ட உருவில் நிழற்றப்பட்ட சதுரமுகிக் கட்டைகளை அகற்றியபின் அது எவ்வாறு தோற்றமளிக்கும்?





✱ 5ஆம், 6ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள வடிவத்தினை மடித்து பெறக்கூடிய உருவங்கள் தரப்பட்டுள்ளன. **a, b, c, d, e** ஆகிய விடைகளில் ஒன்றை மட்டும் முதல் தரப்பட்ட உருவிலிருந்து பெறமுடியாது. அந்த உருவின் கீழ்க் கீறிடுக.

05.




06.




✱ 7ஆம் 8ஆம் வினாக்களில் தரப்பட்ட உருவங்களுடன் மிகவும் தொடர்பான சொல்லினை கீழ்க் கீறிடுக

07. 

1) மாணவர்
2) பாடசாலை
3) அறிவு

08. 

1) பாதுகாப்பு
2) ஓய்வு
3) படம்

✱ 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள கூற்றுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கீறிடுக

09. பாடசாலைகளில் விளையாட்டுப் பயிற்சி அளிக்கப்படுவதன் நோக்கம்:-

1) படிப்பில் ஆர்வம் இல்லாத மாணவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காக.
2) விளையாட்டுப் பயிற்சி மாணவர்களுக்கு தொழில்வாய்ப்பை அளிப்பதற்காக.
3) மாணவர்களின் உடல், உள வளர்ச்சிகளுக்கு உந்து சக்தி அளிப்பதற்காக

10. பெற்றோர் தம் பிள்ளைகளை மழையில் நனைய விடுவதில்லை. ஏனெனில்,

1) பிள்ளைகளின் ஆசையை பெற்றோர்கள் அறியாதவர்கள் என்பதால்.
2) பிள்ளைகளின் உடைகள் மழையால் நனைந்துவிடும் என்பதால்.
3) பிள்ளைகள் மழையில் நனைந்து நோய்வாய்ப்படுவர் என்பதால்.


✱ 11ஆம், 12ஆம் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

11. பின்வரும் அடைப்புக்களில் உள்ள வாக்கியங்களை வாசியுங்கள். நிகழ்ச்சிகள் நடக்கின்ற வரிசைக் கிரமத்தைக் காட்டுகின்ற விடை எது?

| | |
|---|---|
| 01. கையில் வில் ஏந்தியவனாய் கானகத்தைச் சுற்றி அலைந்தான். | 02. அதனை வேட்டையாடிக் கொன்றான். |
| 03. பசியால் வருந்திய வேடன் ஒருவன வேட்டை ஆடுவதற்கு ஆயத்தமானான். | 04. கொன்ற மானை எடுத்து கொண்டு வருகையில் பயங்கரமான உருவத்தை உடைய பன்றியைக் கண்டு பயந்தான். |
| 05. அலைந்தவன், எதிர்பாராத விதமாக ஒரு மானைக் கண்டான். | |

1) 1,3,5,4,2 2) 3,1,5,2,4 3) 3,5,1,2,4

12. கீழே உள்ள படங்கள் ஒரு சம்பவத்தை விவரித்துக் காட்டுகின்றன. ஆனால் அந்த சம்பவங்கள் ஒழுங்குமுறையில் தரப்படவில்லை. தரப்பட்ட படங்களை ஒழுங்குபடுத்தும் போது குட்டிப் பூனையின் குறும்புத்தனத்தால் ஏற்பட்ட விபரீதத்தை அறிந்து கொள்ளமுடியும். எனவே அந்த சம்பவத்தை ஒழுங்குமுறையில் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.




1) ஆ, இ, உ, ஈ, அ 2) ஆ, உ, அ, இ, ஈ 3) ஆ, உ, இ, அ, ஈ

✱ 13ஆம், 14ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடு இடுக.

13. விமலன் தினமும் துவிச்சக்கரவண்டியில் பாடசாலைக்கு வருவான். நேற்று அவன் பாடசாலைக்குத் தாமதமாக வந்தான். அவனின் தாமதத்திற்குக் காரணமாக இருக்கக் கூடியது?

1) நேற்று முழுவதும் எழுந்து நடக்க முடியாத அளவு அவன் சுகவீனம் அடைந்தமை.
2) நேற்றுக் காலை அவன் தூக்கத்திலிருந்து தாமதமாக எழுந்தமை.
3) நேற்றுக் காலை, பாடசாலையில் கலைவிழா என்பதால்.

14. தேனுகன் முயற்சியோடு பாடங்களைப் படித்து, கடந்த வருடம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில், தனது மாவட்டத்தில் உயர் புள்ளி பெற்று, முதல் மாணவனாகச் சித்தியடைந்தான். இவன் முதல் மாணவனாகச் சித்தியடைந்தமைக்குக் காரணமாக இருக்கக் கூடியது எது?

1) தேனுகன் தொடர்ச்சியாகப் பாடசாலைக்குச் சென்று படித்தமை.
2) தேனுகன் படித்த விடயங்கள் பரீட்சைக்கு வந்தமையால்.
3) தேனுகன் ஏனைய மாணவர்களை விட சரியான முறையில் விடை எழுதியமையால்.

✱ 15ஆம், 16ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியங்களில் எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதைக் குறிக்கும் விடையின் கீழே கோடு இடுக.

15. நல்ல, புதிய, பெரிய


1) வினை அடைமொழியாக 2) பெயர் அடைமொழியாக
3) பெயர்ச்சொல்லாக

16. படித்து, முறிந்து, எழுதி


1) வினையெச்சமாக 2) வினைச்சொல்லாக 3) பெயரெச்சமாக

✱ 17ஆம், 18ஆம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்ட உருவை A குறிப்பிடும் திசை வழியே பார்க்கும்போது (மேலிருந்து பார்க்கும்போது) அது தோன்றும் விதத்தைக் காட்டும் விடையின் கீழ்க் கோடு இடுக.

17.




18.




✱ 19ஆம் 20ஆம் வினாக்களில் உருக்கள் ஒரு தொடர்ச்சியான கோலத்தில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. முதலிலுள்ள உருவுக்கு அடுத்துவரும் ஒவ்வொரு உருவமும் முன்னுள்ள கோலத்தில் இன்னுமொரு உருக்களின் வரிசையைச் சேர்ப்பதால் உருவாக்கப்படும் முறை கீழே காட்டப்பட்டுள்ளது. அதனை அவதானித்து வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.




அந்த மருந்தைச் சாப்பிட்டதிலிருந்து ஒரு வாரமாக எனக்கு வயிறு சரியில்லை. நேற்றுதான் புரட்சி நின்றது. இன்று காலை மாலதியைப் பார்க்கச் சென்றேன். நல்லவேளை மாலதி இருந்தாள். கொஞ்சம் நம்பிக்கையுடன் "அப்பா இல்லையா மாலதி?" என்று கேட்டேன்.

"இருக்கிறார், மாடியில்" என்று மேலே பார்த்துக்கொண்டு சொன்னாள்.

"சாமியார் இருக்கிறாரா?"

"சாமியாரா?" என்று கேட்டுப் புன்னகைக்க ஆரம்பித்தாள்.

"செந்தில்நாதப் புலவர்?"

புன்னகை சிரிப்பாக மாறியது. கவர்ச்சிகரமாக ரசித்துச் சிரித்தாள்.

"நீ சிரிப்பது அழகாக இருக்கிறது. குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். நான் ஒரு கேள்வி கேட்கலாமா? ஏன் சிரிக்கிறாய்?"

அவள் மேலும் சிரித்தாள்.

நான் ஒன்றிலிருந்து நாற்பதுவரை நிதானமாக எண்ணினேன். ஓய்ந்தாள். "ஐஸே, சிரிப்புக்கு நாற்பது செகண்ட் கொஞ்சம் அதிகம். எனக்கு ஒரு சந்தேகம். நீ என்னைப் பற்றிச் சிரிக்கிறாயோ என்று."

மறுபடி நாற்பது செகண்ட்.

"உடம்பு எப்படி இருக்கிறது?" என்று சிரித்தாள்.

"ஏன், நன்றாகத்தானே இருக்கிறது?" இன்றுகூடப் புல்வொர்க்கரை நாலு இழுப்பு இழுத்துவிட்டுத்தானே வந்தேன்."

"லான்ஜவிட்டிக்கு அறுநூறு வருஷம் வாழ்வதற்கு மருந்து சாப்பிட்டாயே. அதற்கப்புறம்?"

"ஓ. அதுவா? அது சாப்பிட்டு ஒரு வாரம்தானே ஆயிற்று."

"ஸக்கர் என்றால் என்ன அர்த்தம் தெரியுமா?"

"ஸக்கர்?"

"ஆம்."

"இந்தியிலா? இங்கிலீஷிலா?"

"அமெரிக்கன் ஸ்லாங்கில்."

"தெரியும். அந்த வார்த்தை இப்பொழுது அனாவசியம்."

"நீயும் அப்பாவும் இந்த உலகத்தின் மகத்தான ஸக்கர்... மன்னிக்கவும். தட் ஷுட் ரீட் நீயும் அப்பாவும் இந்த உலகத்தின் மகத்தான ஸக்கர்கள்."

"ரொம்ப டாமேஜிங் டியர் கர்ல்!"

"அந்தப் புலவர் நாலு டெரிலின் சட்டை, நாற்பது ரூபாய் சில்லறை, என் பால் பாயிண்ட் பேனா, ஒரு ரெயில்வே டைம்டேபிள் இவைகளுடன் கழன்றுகொண்டுவிட்டார்."

"செந்தில்நாதப் புலவர்?"

"டிட்டோ. அப்புறம் ஒரு குறிப்பு எழுதிவிட்டுச் சென்றார். 'ராகவானந்தம், எல்லாவற்றிற்கும் வந்தனம். வேறு எந்த நூற்றாண்டிலாவது சந்திக்கலாம்' என்று."

"அப்ப அந்தப் புலவர்?"

"என் அப்பா அப்படி. ஏதோ ஒரு ரிக்ஷாக்கார முனுசாமி வந்து, 'நான்தான் ராக்ஃபெல்லர். அவசரமாகக் கைமாத்தா அஞ்சு ரூபா கொடுங்க'ன்னா கொடுத்துடுவார்."

"அப்பா என்ன சொன்னார் புலவர் காணமற்போனதற்கு?"

"அப்பா அதைப் பற்றிக் கவலைப் படவே இல்லை. அடுத்த பரிசோதனையில் இறங்கிவிட்டார். எனக்கு அப்பாவைப் பற்றி நிஜமாகவே கவலையாக இருக்கிறது."

"ஏன், ராகவேனியம் 278 என்று ஏதாவது..."

"அப்படி இல்லை. இப்பொழுது எழுத்துத் துறையில் புகுந்து விட்டார்."

"கம் எகய்ன்?"

"ரைட் டிங்! சென்ற ஒரு வாரமாக மௌண்ட் ரோடு பிலால் ஓட்டலிலிருந்து மூர்மார்க்கெட் வரைக்கும் பழைய புத்தகக் கடையாக அலசி ஆயிரக்கணக்கில் பத்திரிகை சேர்த்திருக்கிறார். 'நீரூஸிம்ஹப்ரியா'விலிருந்து எல்...லாம்."

"ஓ எஸ்!"

"என்ன ஓ எஸ்?"

"ஜஸ்ட் ஓ எஸ். அவ்வளவுதான்."

"அப்பட்டமாகச் சொன்னால் அவர் பெரிய நட்! நீ சின்ன நட். இரண்டு பேருக்கும் நடுவிலே நான்."

"ஸ்டராங் வோர்ட்ஸ் மாலதி! உன் அப்பாவின் மூளைத் திறமையைப் புரிந்துகொள்ளக்கூடியவன் நான்தான். டாக்டர். பத்திரிகைகளைக் குப்பையாகச் சேகரிக்கிறார் என்றால், அதில் ஒரு மாறுதல் இருக்க வேண்டும்... ஏதாவது புதிதாக..."

"அவருக்கு நீ சரியான..."


"மாப்பிள்ளை என்கிறாயா?"

"உன்னை நான் கல்யாணம் செய்துகொள்ளப்போகிறேன் என்று கனவு காண்கிறாயா?"

நான் இடது பக்கம் வலது பக்கம் பார்த்துவிட்டு மாலதியின் அருகில் சென்றேன்.

"மாலதி! உன்னிடம் ஒன்று சொல்லட்டுமா?"

"சொல்லேன்."



"ரகசியமாக?"

"அதுதான் பக்கத்திலேயே நிற்கிறாயே! என்ன ஹேர் ஆயில் உபயோகிக்கிறாய்?"

"வான்த்ரடோன்."

"தேங்காய் எண்ணெய் கலந்துகொள். ஒரே வாசனை. வான்த்ரடோன் என்கிறதில் மெக்ஸிகோ தேசத்து ஈ ஒன்றின் எஸன்ஸ் இருக்கிறது தெரியுமா?"

"அதுதான் நீ சொல்ல வந்த ரகசியமா? மெக்ஸிகோ தேசத்து ஈ?"

"ஓ ஸாரி மாலதி! நான் உன்..."

"அப்பா!"

நான் நிலைப்படியை நோக்கி ஓர் ஈ லைன் செய்தேன்.

டாக்டர் ராகவானந்தம் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு இறங்கி வந்தார், தமிழ் சினிமாவில் கதாநாயகனைத் தனியாக அழைத்து இது ஒரு விஷ ஜுரம் என்று சொல்லப் போகும் டாக்டர் போல்.

"ஹலோ டாக்" என்றேன்.

என்னைக் கவனிக்காமல், "மாலதி 16-3-67 இஷ்யூ ஒன்றுதான் கிடைக்கவில்லை" என்றவர் என்னைப் பார்த்தார். "அடடே பையா, வா! எப்ப வந்தாய்? ரொம்ப பிஸி நான். பையனுக்குக் காபி கொடுத்தாயா மாலதி? அரைத்தான் என்பதற்கு சின்ன ரவா பெரிய றவா? அப்புறம் ஏ.எஃப் 115 பி.என்.பி.டிரான்ஸிஸ்டர் ஒன்று வேண்டும்..."

நான் குறுக்கிட்டு, "டாக்டர், நீங்கள் பேசுவதைப் பார்த்தால் ஒரு குறிப்பிட்ட வாரப் பத்திரிகையை ஜாஸ்தி படித்திருக்கிறீர்கள் போலிருக்கிறது... டாக்டர், உங்கள் லேட்டஸ்ட் என்ன?"

"மாலதி சொல்லவில்லையா?"

"சொன்னாள். சரியாக விளங்கவில்லை. ஏதோ பத்திரிகை சேர்க்கிறீர்களாம். அதையே கவுர் ஆக்கி ப்ளீச் பண்ணி அச்சாபீஸில் திருப்பி விற்கிற ஐடியாவா?"

"சேச்சே! அதெல்லாம் இல்லை. ஒரு புதிய மெஷின் தயாரித்திருக்கிறேன். மிகப் புதிய மெஷின். ஒரு விதமான கம்ப்யூட்டர்."

"என்ன செய்யும்? கோகோ கோலா உடைத்துக் கொடுக்குமா? இல்லை, பத்து ரூபாய்க்குச் சில்லறை மாற்றித் தருமா?"

"பூ!" என்றார்.

"பூ!" என்றாள் மாலதி.

"பையா, நான் எடுத்துக்கொண்டிருக்கிற புராஜெக்ட் மிக எக்ஸைட்டிங். என்னுடைய காரியர் பெஸ்ட்."

"என்ன அது? சொல்லுங்களேன்."

"தம்பு அதன் பெயர்."

"தம்பு?"

"ஆம். தம்பு. தனாக இயங்கும் புத்தக மெஷின்."

"அப்பாவின் தேர்ட் ஜெனரேஷன் கம்ப்யூட்டரின் பெயர்."

"என்ன டாக்டர்?"

"தம்பு. பி.எஃப்.ஜி. மார்க் ஒன். புரோகிராம்ட் ஃபிக்ஷன். ஜெனரேட்டர் மார்க் ஒன்."

"தமிழ், தமிழ்," என்றேன்.

"தானாக இயங்கும் கதை தயாரிக்கும் கருவி."

"அதாவது..."

"உனக்கு என்ன வேண்டும்? சிறுகதையா, கவிதையா, துணுக்கா, கட்டுரையா, தலையங்கமா? இன்ஸ்டண்ட். உடனே தயார். தம்பு தருவான்."

"புரியவில்லை டாக்டர். யார் இந்தத் தம்பு?" கூப்பிட்டேன். "தம்பு!"

"மேலே வா, தம்புவைச் சந்திக்கலாம். மாலதி?"

"ப்பா?" என்றாள். "தம்பு பேசமாட்டான், எழுதுவான்," என்றாள்.

டாக்டர், "கிராம ஊழியன் என்று 1944 வாக்கில் ஒரு பத்திரிகை வெளிவந்துகொண்டிருந்தது. அதில் சில ஒரிஜினல் புதுமைப்பித்தன் எல்லாம் இருந்திருக்கிறது. கன்னிமரா லைப்ரரியிலிருந்து..." என்று ஆரம்பித்ததும் மாலதி குறுக்கிட்டாள்.

"அப்பா. இதை மூன்றாம் தடவையாகச் சொல்கிறீர்கள் என்னிடம். வர வர நீங்கள் மாறிக்கொண்டு வருகிறீர்கள். இந்த எக்ஸ்பெரிமெண்ட் எல்லாம எதற்கு அப்பா? எதற்காக அப்பா இந்த மெஷின்?"

"என்ன, எந்த மெஷின்?" என்றேன் நான்.

"நீ வந்து மேலே பார். அந்த மெஷின் தேவையா இல்லையா என்று தெரியும்" என்றார் டாக்டர் ராகவானந்தம்.

"மாலதி, நீயும் வாயேன்," என்று கண்களினால் கெஞ்சினேன். நான் அந்தத் தம்புவைச் சந்திக்க அவ்வளவு ஆர்வமாக இல்லை.

மாடியில் ராகவானந்தத்தின் அறையில் நுழைந்தோம். அறை முழுவதும் பத்திரிகைகளும் பஞ்ச் செய்யப்பட்ட காகித டேப்களும் ரீல் ரீலாக நிறைந்து இருந்தன. அவைகளைக் காலால் ஒதுக்கிக்கொண்டே நடுவிலே சென்று "பையா, மீட் தம்பு," என்றார்.

ராகவானந்தத்தின் தம்பு ஒரு ரிடையர் ஆன பியானோ போல இருந்தான். பதினைந்து டிகிரி சாய்வில் ஒரு பானல் போர்டு இருந்தது. அதில் வசவச என்று பட்டன்கள் இருந்தன. ஒவ்வொரு பட்டனின் நடுவிலும் வார்த்தைகள்.

தம்புவின் நடுப் பாகத்தில் ஒரு டைப்ரைட்டர் இருந்தது. அதாவது கீபோர்டு விலக்கப்பட்ட டைப்ரைட்டர்.

தம்பு ஒரே சமயத்தில் ஒரு டெலிபோன் எக்ஸ்சேஞ்சையும் எவர்சில்வர் பாத்திரக் கடையையும் எலக்ட்ரானிக்ஸையும் ஞாபகப்படுத்தினான். பச்சை, சிவப்பு விளக்குகள், ஸ்விட்ச்கள், பாட்ச் கார்ட்கள், ஒரே ரிங் டிங் டிங்!

"எப்படி இருக்கிறான்?" என்றார்.

"டாக்டர், இந்த பட்டன்கள் எல்லாம்."

"ப்ரொகிராம் செய்வதற்கு. 'சரி' என்றால் சரித்திரம். 'விஞ்' என்றால் விஞ்ஞானம்."

"புதுக் என்றால்?"

"புதுக் கவிதை, தம்பு எப்படி வேலை செய்கிறான் பார்க்கிறாயா?"

தம்புவின் பின்பக்கத்தில் டாக்டர் மறைந்தார்.

"என்ன செய்கிறீர்கள் டாக்டர்?"

"மெய்ன் சப்ளை கொடுக்கிறேன்." பிளக் பாயிண்டில் செருகியதும் தம்பு 'ஃளக்' என்றான்.

"ஐ பெக் யூவர் பார்டன்" என்றேன்.

காசு குலுங்குவது போல் சப்தம் கேட்டது. ஐஸ்க்ரீம் சப்புவது போல் சப்தம் கேட்டது. ரெடி என்கிற விளக்கு எரிந்தது.

"ப்ரொக்ராமுக்கு மெஷின் ரெடி. என்ன வேண்டும் உனக்கு?" என்றார் டாக்டர்.

"மசால் தோசை."

"நான் அதைக் கேட்கவில்லை. சிறுகதையா, கவிதையா, கட்டுரையா?"

"சின்னதாக ஏதாவது..."

"நீயே தெரிந்தெடு. இஷ்டமான பட்டனை அமுக்கு."

நான் இடது கையைத் தம்புவின் மேல் ஊன்றிக்கொண்டு 'ய் ய் ய்' என்று விட்டத்தை நோக்கி எம்பிக் கீழே வந்தேன்.

"டாக்டர் ஷாக் அடிக்கிறது."

"ஓ எஸ் மறந்துவிட்டேன். மெஷினை 'எர்த்' பண்ணவில்லை." மறுபடி பின்னால் மறைந்தார். வெளியே வந்தார். "இப்பொழுது தொடு, நான் காரண்டி. ஷாக் அடிக்காது."

"எதற்கு ஒரு மரப்பலகை போட்டால் நல்லது. அதில் நின்று கொண்டு..."

"பயப்படாதே, நான் தொடுகிறேன் பார்."

தம்புவை மரியாதையுடன் என் சுட்டுவிரலால் 'சரித்' என்கிற பட்டனையும் 'கவி' என்கிற பட்டனையும் அழுத்தினேன்.

"கவர்ச் என்றால் என்ன டாக்டர்?"

"கவர்ச்சியின் - செக்ஸ். 10, 20 என்று எவ்வளவு சதவிகிதம் வேண்டுமோ அவ்வளவு தேர்ந்தெடுக்கலாம்."

கவர்ச்சியில் 50'ஐ அழுத்தினேன். டட்ட டட்டடட் என்று மெஷின்கள் போல வெடித்த தம்பு யோசித்து விட்டு 'ப்ளீப்' என்று சொல்லிவிட்டு, பின்குறிப்பாக 'ரிக்' என்றது. மறுபடி ரட்டட்டடட். டைப்ரைட்டர் சுமார் 80 வார்த்தை வேகத்தில் அடித்தது!

*"கதவைத் திறந்து கவனித்து வந்து*
*ராஜராஜ சோழன் - அங்கு*
*விதவைக்கு முத்தம்*
*பதினெட்டுத் தந்த*
*ராஜராஜ சோழன்..."*

"ஹோல்ட் இட்" என்றாள் மாலதி

"எப்படி சரித்திரம்? 'கவர்ச்சி 50'"

(16 ஆம் பக்கம் பார்க்க)

கம்ப்யூட்டரே...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பர்சென்ட்'' என்று 'ஸ்டாப்' பட்டனை அழுத்த, தம்பு ஓய்ந்தது. நான் 'விஞ்' 'துணுக்' பட்டன்களை அழுத்த தம்பு கீழ்க்கண்டவாறு தட்டினான்.

*ஜூலியஸ் ஷ்மிட் என்கிற அமெரிக்க மருத்துவத் தயாரிப்பாளர் தயாரித்துள்ள ரஸாயனப் பொருள் இருபதே வினாடியில் ஒரு பெண் கர்ப்பமா இல்லையா என்று கண்டுபிடித்துவிடுகிறது*

*- ஆதாரம்: நியூஸ் வீக்*

உபரியாக நாலைந்து லைன் ஃபீடைக் கொடுத்துவிட்டு சில XXXXகளை அடித்துவிட்டு ஓய்ந்தான்.

''ரிமார்க்கபிள் டாக்டர்!'' என்றேன்.

''என்ன ரிமார்க்கபிள்! இந்த மெஷினால் என்ன உபயோகம்?'' என்றாள் மாலதி.

''மாலதி! இந்த மெஷின் சும்மா கதை, கவிதை எழுதுவதற்காக மட்டும் இல்லை. இந்த மெஷின் பெரிய பெரிய விஷயங்களை எல்லாம் செய்யப் போகிறது. செஸ் ஆடப் போகிறது. ஜாதகப் பொருத்தம் பார்க்கப் போகிறது. புதிய புதிய இசைகள் அமைக்கப் போகிறது. டிராயிங் போடப்போகிறது. இதற் கெல்லாம் முன்னோடியாக இந்தக் கதை, கட்டுரை திறமையை அமைத்தி ருக்கிறேன் - ஒரு டெமான்ஸ்ட் ரேஷனுக்காக. ஐ.பி.எம். இதனிடம் பிச்சை வாங்க வேண்டும். நம்முடைய பத்திரிகைகளை அலசியதில் அவைகளில் வரும் விஷயங்களை எல்லாம் சுலபமாகப் பாகுபடுத்திவிட முடிந்தது. தமிழ் நடையைக்கூட 1, 2, 3, 4, 5 என்று 5 விதங்களில் பாகுபடுத்திவிட்டேன் பார்.''

டாக்டர் 'சரித்' 'நடை' '3' பட்டன்களைத் தட்டினார். தம்பு செயல்பட்டான்.

*அரண்மனை விளக்கேற்றுவோர் ஏணியும் பந்தமுமாக வந்து ஆங்காங்குத் தீபங்களுக்கு எண்ணெய் ஊற்றிக் கொளுத்த அந்தப் பின்புற முகப்புக் கட்டில் பல பல விளக்குகள் பளிச்சிட்டதால் அந்தப் பகுதி பூராவும் இந்திரலோகம் போல் காட்சியளித்தது.*

டாக்டர் 'ஸ்டாப்'பை அழுத்தினார்.

''இதையே நடை '1'ல் பார்,'' என்றார்.

தம்பு:

*அரண்மனை. விளக்கு. ஏணி. பந்தங்கள். தீ எண்ணெய் விளக்குகளின் பளிச். இந்திர லோகம்.*

''பூஸீ!'' என்றார்.

''டாக்டர்! கை கொடுங்கள்'' என்றேன்.

''இந்த மெஷின் பூராத் திறமையும் காட்டின பிற்பாடு கை கொடு. எத்தனை ஷிஃப்ட் ரிஜிஸ்டர், எத்தனை ரிங் கவுண்டர், சேர்க்யூட்கள் திருகி இணைத்திருக்கிறேன்! முதலில் அல்கோலில்தான் ப்ரோக்ராம் பண்ண நினைத்தேன். ஆனால்...''

டாக்டர் மேலே பேசின பேச்சுகளில் கம்ப்யூட்டர் டெக்னாலஜியின் வார்த்தைகள் அதிகம் இருந்தால் அவைகளை விட்டுவிட்டேன்.

மேலும் டெலிபோன் மணியடித் தால் டாக்டர், ''எக்ஸ்க்யூஸ் மீ'' என்று கீழே கிளம்பிவிட்டார்.

நானும் மாலதியும் தம்புவும் தனியாக இருந்தோம்.

''மாலதி, தம்புவைப் பற்றி என்ன நினைக்கிறாய் நீ?'' என்றேன்.

''காசு விரயம், நேரம் விரயம்.''

''இல்லை. நான் அப்படி நினைக்கவில்லை.''

''இதனால் என்ன உபயோகம்? ஒரு நைலக்ஸ் ஸாரி கிடைக்குமா?''

''கிடைக்கும்.''

''எப்படி?'' என்றாள்.

நான் தம்புவை நெருங்கி, ''தம்புப் பையா ரெடியா?'' என்று கேட்டேன்.

தம்பு 'ஷ்வப்'' என்றான். தம்புவின் பட்டன்களில் கீழ்க்கண்டவாறு விளையாடினேன்.

சுரு

கதை

திகில் 50

கவர்ச் 50

நடை 2

'தம்பு, ஒரு கதை எழுதப் போகிறான். அதைக் காசாக்கி உனக்கு நைலக்ஸ்!''

*சேகர் மெதுவாகக் கதவைத் தட்டினான்.*

*திறந்திருக்கிறது என்று பதில் வந்தது. பெண் பதில். உள்ளே நுழைந்தான். தன் பின்னங்காலால் கதவை மூடினான். நளினியைப் பார்த்தான்.*

*''திறந்திருக்கிறது என்று சொன்னது கதவைப் பற்றித்தானே?''*

*''ஏன்?'' என்றாள்.*

*''உன் ஸாரி...''*

*''ஓ ஸாரி! திரும்பிக்கொள்ளுங்கள் கொஞ்சம் அந்தப் பக்கம்.'' அந்தப் பக்கம் திரும்பினான். ஜன்னல் திறந்திருந்தது. வெளியே நகரம் உறங்கிக் கொண்டிருந்தது. ஜன்னல் கண்ணாடியின் மெல்லிய பிரதிபிம் பத்தில் நளினி தெரிந்தாள். திரும்புவது தெரிந்தது. அவள் அழகான முகம் தெரிந்தது. அழகான மூக்கு, அழகான உதடுகள், அழகிய கழுத்து, அதன் அழகிய ஒற்றை மாலை, அதன் பென்டெண்ட். பென்டெண்ட் இளைப்பாறிக் கொண்டிருந்தமா... ஜன்னல் கதவு காற்றில் ஆடி பிம்பம் மாறிவிட்டது.*

*''திரும்பலாமா?'' என்றான்.*

*''இன்னும் இல்லை...''*

*''சேகர் ஒரு உதவி செய்வீர்களா?''*

*''வித் ப்ளெஷர்.''*

*''இந்த ஜிப்பை முதுகில் வைத்து விட்டான்.*

*தயவு செய்து இதை...''*

*அவள் திருப்பிக்கொண்டிருந்தாள். அருகில் சென்றான்.*

*மெதுவாக ஜிப்பை உயர்த்தினான்.*

*''சரக்'' - ஜிப்பை மறுபடி பிரித்தான். அவளைத் திருப்பினான்.*

*''சேகர் சேகர் லைட்!'' என்றாள்.*

*''எரியட்டும்.''*

*அவன் கைகள் மிக மெதுவாக அவள் இடுப்பின் பக்க வளைவுகளில் பிரயாணம் செய்து மெதுவாக மேலே வந்து புஜங்களில், தோள்களில், பின்பு கழுத்தில்...*

*சரேல் என்று அவனை உதறிவிட்டு சேகர் திரும்பி ஜட விரசல நீ க்ளாக் பல்ஸ் வந்த த்ருப்ல ராகவ ஜனகன மணந்தயா.*

விரலைக் கடித்துக்கொண்டு காத்திருந்த நான், ''என்ன ஆச்சு?'' என்று கேட்டேன்.

மாலதி, ''ஊரேமூரே என்று அடிக்கிறது'' என்றாள்.

தம்பு விடா முயற்சியாக, ''லாமா... லாமா...'' என்று அடித்துக் கொண்டிருந்தது.

டாக்டரே வந்துவிட்டார். ''வாட் ஹாப்பண்ட்?'' என்றார்.

''தெரியவில்லை. திடீரென்று இட் வெண்ட் பெர்ஸெர்க்! பாருங்கள்.''

தம்பு ''உஊஊ...'' என்றது பழைய ஆஸ்டின் கார் போல. டாக்டர் ஸ்டாப் பட்டனை அழுத்தியும் தம்பு மேலே மேலே வைத்தியக்காரத்தனமாக அடித்துக்கொண்டே சென்றது.

''பையா; சீக்கிரம் போய் அந்த பிளக்கைப் பிடுங்கு'' பிடுங்கினதும்தான் தம்பு அடங்கினான்.

''அந்த மல்டி மீட்டரை எடு.''

''டாக்டர், அந்த சேகர் என்ன ஆனான்?''

''சேகர்? யார் சேகர்? என்ன உளறுகிறாய்?''

''கதை ஒன்று ஜோராகப்...''

''இரு'' டாக்டர் தம்புவின் வயிற்றைத் திறந்து சோதித்தார்.

''அந்த நளினி பாவம்! டாக்டர் நளினி உயிருடன் இருக்கிறாளா? பார்த்துச் சொல்லிவிடுங்கள்,'' என்றேன்.

டாக்டர் வெறிப்பட்டார். அவர் கையில் கருகிப்போன ஒரு சிறிய சமாச்சாரம் பட்டாணி போல இருந்தது.

''ஷாட்! பிடுங்கிக்கொண்டுவிட்டது. ஓவர் க்ரண்ட். ஜீனர் டையோட் எண் 3455. அமெரிக்காவுக்கு எழுதி வரவழைக்க வேண்டும்!''

''ஸ்பேர் இல்லை?''

''இல்லை.''

''அது இல்லாவிட்டால் வேலை செய்யாதா தம்பு?''

''ம்ஹூம். ஸ்டெபிலைஸர் ஸர்க்யூட். கன்னாபின்னா என்று அடிக்கும்!''

''அப்ப அந்தக் கதை?''

''என் நைலெக்ஸ் ஸாரி? இரண்டும் அமெரிக்காவிலிருந்துதான் வர வேண்டுமா?''

டாக்டர் எங்களைக் கவனிக்கவில்லை. ''எப்படி ஓவர் கரண்ட் ஆச்சு? டிசைனில் சரியாகத்தானே பேஸ் ரெஸிஸ்டன்ஸ் போட்டிருந்தேன்?'' என்று பேப்பர் பென்சிலை எடுத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டார்.

*நன்றி சுஜாதா*

# எதிர்பார்ப்பை தூண்டியுள்ள 'ரஜனி'யின் 'குசேலன்'

இன்றைய தமிழ்த் திரையுலகில் கமலஹாசன் பத்து வேடங்களில் தோன்றி நடித்து வெளிவந்து கலக்கிக் கொண்டிருக்கும் தசாவதாரத்திற்குப் பின் பரபரப்பாக பேசப்பட்டுக் கொண்டிருக்கும் திரைப்படம் எது தெரியுமா? 'ரஜனி' நடித்து வெளிவரவுள்ள 'குசேலன்'. 'கத பறையும் போள்' மலையாள படத்தை பார்த்த இயக்குநர் பி.வாசு, 'மம்முட்டி' செய்த பாத்திரத்தில் 'ரஜனி' நடித்தால் நன்றாக இருக்கும் என நினைத்தார். இயக்குநர் சிகரம் கே. பாலசந்தர் சில திரைப்படங்களைத் தாயாரித்து நஷ்டப்பட்டிருந்தார். அவரின் சிரமத்தை போக்கும் நோக்கத்துடன் தான் 'ரஜனி' குசேலனை ஒப்புக் கொண்டார். இப்படத்தில் 'ரஜனி'யின் பங்கானது வெறும் 25 வீதமாகத்தான் முதலில் இருந்தது. மலையாள படத்திலும் மம்முட்டி சில பகுதிகளில் மட்டும்தான் தலைகாட்டுவார். ஆனால், பி. வாசு மலையாள படத்தின் கருவை மட்டும் எடுத்துக் கொண்டு படம் முழுவதும் ரஜனி வரும்படி அதை விரிவுபடுத்தினார். ரஜனிக்கு மூன்று பாட்டுகள் கூட உண்டு. இவருக்கு ஜோடி நயன்தாரா. பசுபதியும் மீனாவும் இன்னொரு ஜோடி. நகைச்சுவைக்கு வடிவேலும் இருக்கிறார்.

'சிவாஜி' திரைப்படத்தில் பார்த்ததைவிட குசேலனில் ரஜனி இன்னமும் இளமையாக அழகாக இருக்கிறாராம். இது முழுக்க முழுக்க சூப்பர் ஸ்டார் படமாக அமைந்திருக்கிறதாம். அதாவது படம் தொடங்கி பத்தாவது நிமிஷத்தில்தான் ரஜனி அறிமுகமாகிறாராம். தொடர்ந்து படம் முழுவதும் இவர் வருகிறாராம்.

'ரஜனி' இந்த வருடம் 'ரோபோ' படத்தை மட்டும்தான் ஒப்புக் கொண்டிருந்தார். இயக்குநர் சங்கர் 'ரோபோ'வுக்கான படவேலைகளில், மும்முரமாக இருந்த வேளையில் இடையில் கிடைத்த இடைவெளியில் குசேலனுக்கு தேதிகள் கொடுத்திருந்தார் ரஜனி. அதற்கு காரணம் குசேலனின் பிரதான வேடத்தில் பசுபதியும் கௌரவ வேடத்தில் ரஜனியும் இடம் பெற்றிருந்தமைதான். ஆனால் பி. வாசுவோ ரஜனியை கௌரவ வேடத்தில் வைத்து இயக்க விரும்பவில்லை. ஏற்கனவே 'சந்திரமுகி' மூலம் பெரிய பெயர் பெற்றிருந்த பி.வாசு வந்த சந்தர்ப்பத்தை விடுவாரா என்ன? எனவே குசேலனுக்கு வித்தியாசமாக கதை, வசனம் அமைந்து ரஜனியின் பாத்திரத்தை விரிவாக்கி விட்டார்.

சிகையலங்கார நிலையம் வைத்துள்ள ஒருவர் மிகப் பெரிய நடிகரை பார்க்க ஆசைப்படுகிறார். அது நிறை வேறுமின்றதாவென்பதுதான் கதை. உண்மையில் பசுபதி ரஜனியை நேரில் பார்த்தது கிடையாதாம். படப்பிடிப்பில் ரஜனியைப் பார்த்து வியப்பும் பிரமிப்புமடைந்து விட்டாராம் பசுபதி. ஆனால், அதற்குப் பின் ரஜனியின் எளிமை, அவர் பசுபதியிடம் காட்டிய அக்கறை அன்பு அனைத்துமே பசுபதியின் இதயத்தில் ரஜனியை உயர்ந்த இடத்தில் தூக்கி வைத்துவிட்டதாம்.

மறைந்த வசூல் சக்கரவர்த்தி மக்கள் திலகம் எம். ஜி. ஆரிடம் இருந்த பல நல்ல குணங்கள் ரஜனியிடம் உள்ளன. அதனால் தான் ரஜனி இன்னமும் சூப்பர் ஸ்டாராகவே இருக்கிறார். தன்னை ஏற்றி விட்ட ஏணிகளாக செயல்பட்ட பாலசந்தர் போன்ற பலரை ரஜனி என்றுமே மறந்ததில்லை. மேலும் என்னதான் உயரமான இடத்தில் அவர் இருந்தாலும் அவரின் எளிமை பலரை வியப்பிலாழ்த்தி விடுகின்றது. படப்பிடிப்பு ஓய்வு நேரங்களில் இவர் ஏஸி அறைகளைத் தேடி ஓடுவதில்லை.




வெறுந்தரையில் பிளாஸ்டிக் நாற்காலியில் அமர்வார். மரத்தடியில் தூங்குவார். சாதாரண லைட் போயையும் அழைத்துப் பேசுவார். ரஜனியை 'இளமை வழிநடத்துகிறது'. படத்தின் இயக்குநர் ஸ்ரீதரிடம் உதவி இயக்குநராக இருந்த போதிலிருந்து இயக்குநர் வாசு கவனித்து வருகின்றாராம். பி. வாசு ஸ்ரீதரிடம் உதவி இயக்குநராக இருந்தபோது இவரைக் கண்டு எழுந்து மரியாதை செய்வாராம். அதே போலத்தான் இன்று பி. வாசுவிடம் உதவி இயக்குநர்களாக இருப்பவர்களைக் கண்டாலும் எழுந்து வணக்கம் சொல்லுவாராம்.

ரஜனி முன்னர் தன் ரசிகர்கள், தான் எப்படிப்பட்ட படத்தை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற எண்ணத்தில் தான் 'பாபா'வை கொடுத்தார். ஆனால், 'பாபா' தந்த பாடம் ரஜனியை மிகவும் பாதித்து விட்டது. மக்களுக்கு ரஜனியைப் பிடிக்கும். ஆனால், அதற்காக அவர் 'பாபா' மாதிரியான படங்களில் நடித்தால் ரசிகர்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

பாலா சங்குபிள்ளை

அதனால்தான் 'ரஜனி' கடைசிவரை மக்களை மகிழ்ச்சிப்படுத்துவதே தன் பிரதான குறிக்கோள் என்ற நோக்கில் 'சந்திரமுகி', 'சிவாஜி' என்ற மக்களுக்கு பிடித்த விதத்தில் படம் கொடுத்து வருகின்றார். இவரின் அடுத்த படமான குசேலனையும் பி. வாசு கிட்டத்தட்ட அதே பாணியில் மக்களுக்குப் பிடித்த வகையில் உருவாக்கியிருக்கிறார். தற்போது 'குசேலன்' படப் பாடல்கள் மிக வேகமாக பிரபல்யமாகி வரும் வேளையில் வெகு விரைவில் வெளியாகவுள்ள 'குசேலன்' படத்துக்கு எதிர்பார்ப்பு அதிகரித்துள்ள நிலையில் இப்படம் முன்னைய ரஜனி படங்களின் வசூலை முறியடிக்குமென இப்போதே திரைப்பட வல்லுனர்கள் பரபரப்பாக பேசிக்கொள்கின்றார்கள். திரையுலகில் கீழ் மட்டத்திலிருந்து இன்று சூப்பர் ஸ்டாராக மேல் மட்டம் வரை உயர்ந்துள்ள ரஜனியின் உயர்வுக்கு காரணமானவை அவரின் எளிமையும் நல்ல குணங்களுமே யாகும்.


19. இக்கோலத்தில் அடுத்துவரும் உருவில் எத்தனை பூக்கள் இருக்கும்?



(1) (2) (3)

1) 18
2) 20
3) 33

20. இந்த முக்கோண உருக்கோலத்தில் ஐந்தாவதாக வரும் உருக்கோலத்தில் எத்தனை சிறிய முக்கோணிகள் இருக்கும்?



(1) (2) (3)

1). 10
2) 15
3) 18

*** 21ஆம், 22ஆம் வினாக்களில் மூன்றாம், நான்காம் சொற்கள் அல்லது எண்களுக்கு இடையேயுள்ள தொடர்பே, முதலாம், இரண்டாம் சொற்கள் அல்லது எண்களுக் கிடையேயும் உள்ளது. இதற்கமைய பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.**

21. கல்வி: ........................................... பாட்டு : பாடுதல்

1) சொல்லுதல் 2) பாடம் 3) கற்றல் 4) புத்தகம்

22. 1234: ........................................... 6789 : 9687

1) 2341 2) 4321 3) 3214 4) 4132

*** 23ஆம், 24ஆம் வினாக்களில் ஒவ்வொரு கூற்றையும் பூர்த்திசெய்யும் சொல்லினை அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் இருந்து தெரிந்து, அவற்றின் கீழ்க கோடிடுக.**

23. ஒரு கிராமத்தில் எப்பொழுதும் (கிராமசபை, வீடுகள், கோயில், வைத்தியசாலை) உண்டு.

24. ஒரு புத்தகத்திற்கு எப்பொழுதும் (படங்கள், பாடங்கள், பக்கங்கள், எழுத்துக்கள்) உண்டு.

*** 25ஆம், 26ஆம் வினாக்களில் தடித்த எழுத்திலுள்ள கூற்றுக்களை, நாம் உண்மை என ஏற்றுக்கொண்டால் அவற்றை அடுத்துவரும் மூன்று கூற்றுக்களுள் ஒன்று உண்மை யாயிருககும். அதன் கீழ்க் கோடிடுக.**

25. **தீபனிடம் இருக்கும் புத்தகங்களில் கதைப் புத்தகங்கள் உண்டு. பெரும்பாலும் தீபன கதைகளை வாசிப்பதில் நேரத்தைச் செலவிடுவான்.** ஆகவே,

1) தீபனிடமிருப்பவை எல்லாம் கதைப் புத்தகங்கள் ஆகும்.
2) தீபன் எப்பொழுதும் கதைகளை மட்டும் வாசிப்பான்.
3) தீபனிடம் வேறு புத்தகங்களும் உண்டு.

26. **கமலாவிற்கு சிலவேளைகளில் மட்டும் பாடசாலைப் பரீட்சைகளில் எல்லாப் பாடங் களிலும் உயர் புள்ளிகள் பெறமுடியாமல் போகும் சந்தர்ப்பங்கள் வருவதுண்டு.** ஆகவே,

1) கமலா சில வேளைகளில் மட்டும் உயர் புள்ளிகள் பெறுவாள்.
2) கமலா பெரும்பாலும் எல்லாப் பாடங்களிலும் உயர் புள்ளிகள் பெறுவாள்.
3) கமலா குறைந்த புள்ளிகளையே அதிகம் பெறுவாள்.

*** 27-32 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையின் கீழே கோடு இடுக.**

27. கீழுள்ள நான்கு சொற்களிலும், ஒரு சொல்லில் உள்ள எந்தவொரு எழுத்தாயினும் மற்றச் சொற்களில் காணப்படவில்லை. அந்தச் சொல் எது?

1) விகடகவி 2) பதுமமலர் 3) கடகரவி 4) சகடக்கால்

28. ஒரு தோட்டத்தில் மிளகாய்ச் செடிகளும் கத்தரிச் செடிகளும் உள்ளன. ஒவ்வொரு மிளகாய்ச் செடியையும் அடுத்து மூன்று கத்தரிச் செடிகள் நடப்பட்டிருந்தன. ஒரு வரிசையில் முதலாவது நட்டிருப்பது மிளகாய்ச் செடியாகும். தோட்டத்தில் அந்த வரிசையில் 25 செடிகள் காணப்படின் கத்தரிச் செடிகள் எத்தனை?

1) 18 2) 15 3) 13

29. இராமனின் வயது 17 வருடங்கள். மாறன் இராமனிலும் இரண்டு வருடங்கள் வயதில் கூடி யவன். சுகுணன் மாறனைக் காட்டிலும் 5 வருடங்கள் குறைந்தவன். ஏழு வருடங்களின் பின் சுகுணனின் வயது யாது?

1) 14 வருடங்கள் 2) 21 வருடங்கள் 3) 24 வருடங்கள்

30. ஒவ்வொன்றும் சம இடைவெளிகளில் உள்ள 4 மின்கம்பங்களிடையிலான தூரம் 45 மீற்றர ஆகும். அவ்வாறான சம இடைவெளியிலுள்ள 10 கம்பங்களுக்கிடையிலான தூரம் யாது?

1) 450 m 2) 150 m 3) 135 m

31. கோபாலன் கோவிந்தனை விட வேகமாக ஓடுவான்; ஆனால், கோமாறனை வெல்லமாட்டான். கோமாறன் ஓர் ஓட்டப் பந்தயத்தில் இராமனை விட வேகமாக ஓடவில்லை. அதே ஓட்டப் போட்டியில் கோவிந்தன் குருசாமியை வென்று விட்டான். இதில் முதலிடத்தைப் பெற்றவர் யார்?

1) இராமன் 2) கோவிந்தன் 3) கோமாறன்

32. குமுதன் கடற்கரை வழியே சென்றுகொண்டிருந்தான். அவனது இடது கைப்பக்கத்தில் சூரியன் உதித்தது. குமுதன் எந்தத் திசை நோக்கிச் செல்கின்றான்?

1) வடக்கு 2) கிழக்கு 3) தெற்கு 4) மேற்கு

*** 33ஆம், 34ஆம் வினாக்களில் தரப்படும் நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

33. நிகழ்வு:- கவிலன் தெருவின் குறுக்கே வீழ்ந்திருந்த மரத்தை அப்புறப்படுத்த நினைத்தான். முயற்சி செய்தான், முடியவில்லை. பின்னர் தனது நண்பர்கள் மூவருடன் சேர்ந்து அதனை அப்புறப்படுத்தி விட்டான்.

1) முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.
2) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
3) அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்.

34. நிகழ்வு:- சேகர் அவனது செலவுக்காகப் பெற்றோர் தரும் பணத்தில மிகுதியைச் சேகரித்து வந்தான். இவ்வாறு பல வருடங்கள் சேமித்த பணத்தைக் கொண்டு ஒரு துவிச்சக்கர வண்டியை வாங்கினான்.

1) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
2) சிறுதுளி பெரு வெள்ளம்.
3) மனமுண்டானால் இடமுண்டு.

* 35ஆம், 36ஆம் வினாக்களுக்கு பின்வரும் பந்தியை வாசித்த பின், கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காக தரப்பட்ட அறிவித்தல்களைப் பயன்படுத்தி, அதற்கமைய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

> நானும் அக்காவும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றோம். எனது தாயார் இக்கல்லூரியின் கணித ஆசிரியராகக் கடமையாற்றுவதோடு, எனது மாமாவும் இங்கு உப அதிப ராகக் கடமையாற்றுகின்றார். எமது கல்லூரியில் 45 ஆசிரியர்கள் சேவை செய்கிறார்கள். எனது அக்காவின் வகுப்பறை 3ஆவது மாடியில் அமைந்துள்ளது.

அறிவுறுத்தல்: கூற்று உண்மையானது எனின் T; கூற்று உண்மையற்றது எனின் F; கூற்று உறுதியாகக் கூறமுடியாது எனின் N.

35. இங்கு நான் எனக் குறிப்பிடுவது ஒரு பெண் பிள்ளை ஆகும். (T. F. N)

36. இப்பாடசாலையில் ஆசிரியைகள் மட்டும் கற்பிக்கின்றனர். (T. F. N)

*** 37ஆம் 38ஆம் வினாக்களில் உள்ள கூற்றுக்கள் எதனை உணர்த்துகின்றன எனத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.**

37. மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் காற்று வீசுவதால் அங்குள்ள மககள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர்.


1) விளம்பரம் 2) அறிவித்தல் 3) செய்தி 4) அனுபவம்

38. நாடெங்கிலும் ஒருவகை வைரஸ் காய்ச்சல் பரவி வருகின்றது. எனவே, குழந்தைகள் முதல் பெரியவர் வரை கொதித்தாறிய நீரையே கட்டாயமாகப் பருகவும்.

1) விளம்பரம் 2) அறிவித்தல் 3) அறிவுறுத்தல் 4) செய்தி

*** பின்வரும் வினாவுக்கான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

39.




மரக்கட்டை A யில் இருந்து மரக்கட்டை B யின் அளவுடைய எத்தனை மரக்கட்டைகளை வெட்டி எடுக்க முடியும்? ...........................

40. சிகரம என்பதனை 4365 என எழுதினால் கரகம் என்பதை எவ்வாறு குறியீட்டால் எழுதலாம்? ...........................

முற்றும்


## மாணவர்களுக்கும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு நற்செய்தி......

**நாடளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்ற கீழ்வரும் ஆசிரியர்கள் சுடர் ஒளி நாளிதழுக்காக விசேடமாகத் தயாரித்துவழங்கும் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான இறுதி மாதிரி வினாத்தாள்கள் எதிர்வரும் 2.8.2008 முதல் 15.8.2008 வரை (பகுதி-1, பகுதி-2 என்பன ஒரே நாளில்) நாளாந்தம் வெளிவரவுள்ளன.**

*திரு.பி.அம்பிகைபாகன் - கொழும்பு*
*திரு.வே.அன்பழகன் - யாழ்*
*திரு.திருமதி.எஸ்.புன்னியாமீன் - கண்டி*
*திரு.எஸ்.தயாளலிங்கம் - திருமலை*
*திரு. யு.எல்.எம்.சாஜித் - அம்பாறை*
*திரு.தி.சுரேஸ்குமார் - கம்பளை*
*திரு.எஸ்.சந்திரபவன் - கொழும்பு*
*திரு.சண்.சுதர்சன் - கண்டி*
*திரு.எஸ்.தீபன், எஸ். கபிலன் - வவுனியா*
*திரு.து.திலீப்குமார் - கொழும்பு*
*திரு.டபிள்யூ.டபிள்யூ.சேனரத்ன (பிரபல சிங்கள ஆசிரியர்) - கொழும்பு*

**மாணவர்களே! கருமையான தொடர் பயிற்சிக்குத் தயாராகுங்கள்!!**
**வெற்றி உங்கள் கைகளில்!!!**
உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி முகவரிடம் முற்பதிவுசெய்துகொள்ளுங்கள்.


## தரம் - 05 மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்காக வெளியிடப்படும்

# விசேட மாதிரிவினாத்தாள் - 08

ஆசிரியர்:- திரு.வே.அன்பழகன்
( யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்ப்பாணம்.)

# ஆபத்தான புறக்கர்ப்பம்!

பெண்களுக்கு கருப்பையில்தான் கரு வளர வேண்டும். சிலருக்கு கருப்பைக்கு வெளியே கரு வளர்ந்துவிடும். இது மிகவும் ஆபத்தானது.

**புறக்கர்ப்பம்**

கருப்பைக்கு வெளியில் கரு வளர்ந்தால் அது புறக்கர்ப்பம் அல்லது வெளிக்கர்ப்பம் (Ectopic Pregnancy) எனப்படுகிறது. இது, சினைக் குழாய்களில் ஏற்பட்டால் 'சினைக் குழாய் கர்ப்பம்' எனப்படும். சிலநேரம் வேறு உறுப்புகளிலும் ஏற்படலாம். கருவணுவகம், கருப்பை வாயிலும்கூட ஏற்படக்கூடும்.

கருப்பையை நோக்கிச் செல்வதற்குப் பதில் சிலருக்கு சினைக் குழாயினுள்ளே கரு ஒட்டிக்கொண்டு அங்கேயே வளர ஆரம்பிக்கிறது. இதுவே, புறக்கர்ப்பம். நூற்றில் ஒரு பெண்ணுக்கு புறக்கர்ப்பம் ஏற்படலாம்.

கருத்தரிக்க இயலாத நிலையில் உள்ள பெண்களுக்கும் புறக்கர்ப்பம் ஏற்படும் அபாயம் அதிகம். விந்து செலுத்துதல் சிகிச்சைக்குப் பிறகு சிலருக்கு சினைக்குழாய் கர்ப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**அறிகுறி**

தொடக்கத்தில், புறக்கர்ப்பத்தின் அறிகுறிகளும் சாதாரண கர்ப்பம் போன்றே தோன்றலாம். மாதவிலக்கு ஏற்படாது. வாந்தி, குமட்டல், மார்புக் கனம் ஏற்படலாம். ஆனால், மாதவிலக்கு ஏற்படும் நாளிலோ அல்லது சில நாட்களுக்குப் பின்னரோ இரத்தப்பெருக்கு ஏற்படக்கூடும். இதை மாதவிலக்கு என சிலர் தவறுதலாக நினைத்துவிடுவது உண்டு.

புறக்கர்ப்பம் ஏற்பட்டுள்ள பகுதியில் வலி வரலாம். குழாய் வெடித்ததும் அதிக வயிறுவலி, மயக்கம், அதிர்ச்சி ஏற்படலாம்.

**மெதுவாக வளரும்**

எல்லா கருத்தரிப்புகளும் சினைக்குழாயில்தான் நடைபெறுகிறது. அதன்பிறகு மெல்ல மெல்ல நகர்ந்து, 7நாளுக்குள் கருப்பை உள்சவ்வில் சரியான இடத்தில் வந்து சேர்ந்து விடுகிறது. இந்தக் கருக்குழியில் கர்ப்பம் வந்து சேர்ந்தவுடன்தான் மற்ற வளர்ச்சிகள் வேகமாக நடக்கின்றன.

இயற்கையாக நடக்கவேண்டிய இந்த மாற்றங்கள் சரியாக நடக்காமல், வரும் வழியிலோ அல்லது தொடக்க நிலையிலோ இன்னும் சொல்லப்போனால் பின்பக்கம் நகர்ந்து, வயிற்றின் உள்ளேகூட சென்று இந்த சினைக் கரு ஏதாவது ஒரு இடத்தில் தொற்றிக்கொள்ள முயற்சி செய்யலாம். இதுவே, வெளிக்கர்ப்பம்.

வெளியில் கருவுக்கு தேவையான சத்துக்கள் கிடைக்காததால் அது மிக மெதுவாகவே வளரும். புறக்கர்ப்பத்தில் வாந்தி எடுப்பது கூட மிகமிகக் குறைவாகவே இருக்கும்.

சிறுநீர் பரிசோதனை செய்வதால் கர்ப்பம் எனச் சொல்லும்.

இரத்தத்தில் கருவளர்ச்சிக்கான ஆர்மோன் பீட்டா 'எச்.சி.ஜி'யின் அளவைப் பார்த்தால் சரியாக இருக்காது. 40 நாட்களில் 30 ஆயிரத்துக்கும் அதிகமாக இருக்க வேண்டிய பீட்டா எச்.சி.ஜி. 3 ஆயிரத்தைத் தாண்டாது.



வெளிக்கர்ப்பத்தில் நாடித்துடிப்பு சரியாக இருந்தால் மட்டுமே 100 சதம் வெளிக்கர்ப்பம்தான் என்று உறுதியாகச் சொல்லலாம்.

**ஆபத்து**

20 ஆண்டுகளுக்கு முன் 'ஸ்கான்' வராத காலத்தில் வெளிக்கர்ப்பம் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பதாக இருந்தது. இந்தக் கர்ப்பம் (இரத்தக்குழாய்கள்) விரைவாக உடைந்து, கிழிந்துவிடும். கிழிபட்ட இரத்தக்குழாய்கள் மூலம் வயிற்றின் உள்ளே இரத்தம் சேர்ந்துவிடும். இந்த இரத்தம் இருதயத்திற்கு திரும்பாமல் வயிற்றின் உள்ளேயே தங்கிவிடும்.

இதனால், உடலில் இரத்த ஓட்டம் குறையும். மூளைக்குப் போதிய இரத்தம் கிடைக்காது. மூளை சரியாக வேலை செய்யாது. நுரையீரல், சிறுநீரகம் போன்ற முக்கிய உறுப்புகளும் செயல் இழக்கும்.

அந்தப் பெண் எழுந்து நிற்கவே முடியாது. வயிறு வீங்கிவிடும். இரத்த ஓட்டம் வெகு வேகமாகக் குறைவதால் இதயத்துடிப்பு பாதித்து, ஒரு கட்டத்தில் இதயம் நின்று, **மரணம்** ஏற்படக் கூடும்.

**மருத்துவம்**

தற்போது, வெளிக்கர்ப்பத்தை 35 முதல் 40 நாட்களுக்குள் கண்டுபிடிக்க முடியும். வெளிக்கர்ப்பம் கிழியாத நிலையில் இருக்கும் போது ஊசிகளை இரத்தக் குழாயிலோ அல்லது புறக்கர்ப்பத்திலோ போட்டு இந்த வெளிக்கர்ப்பம் வளராமல் அழித்துவிட முடியும். ஊசிக்குக் கட்டுப்படா விட்டால் 'லாபராஸ்கோபி' மூலம் வெளிக் கர்ப்பத்தை உறிஞ்சியே எடுத்துவிடலாம்.

வெளிக்கர்ப்பம் கிழிந்து விட்டால் உடனடியாக அந்தப் பெண்ணை மருத்துவமனையில் சேர்த்து, அதை நீக்க வேண்டும். சேதமடைந்த இரத்தத்திற்கு சமமாக உடனடியாக இரத்தம் கொடுக்க வேண்டும். 4 முதல் 6 போத்தல் இரத்தம் கூடத் தேவைப் படலாம். சேதமடைந்த புறக்கர்ப்பத்தை 'லாபரஸ்கோபி' மூலம் அகற்றலாம்.

வெளிக்கர்ப்பம் 99 சதம் சினைக் குழாயில்தான் ஏற்படும். இப்படி சினைக்குழாய் அகற்றப்படும்போது, அந்தப் பெண் மறுபடியும் கருத்தரிக்கும் வாய்ப்புக் குறைகிறது.

ஆரம்ப நிலை சினைக்குழாய் கர்ப்பத்துக் த மருத்துவ சிகிச்சை உள்ளது. 'மீத்தோட்ரெக்சேட்' (Methotraxate) என்ற ந்து உபயோகிக்கப்படுகிறது. இது, மாக வளரும் சினைக்குழாய் கர்ப்பத் களை அழித்துவிடுகிறது. கரு மேலும் வதில்லை.

னைக்குழாய் கர்ப்பம் ஏற்பட்டு அது வெடிக்காமல் இருந்தால் 'அல்ட்ராசவுண்ட்' ஸ்கான்வழியாக சிகிச்சை அளிக்கலாம், 'லாபரோஸ் கோபி' செய்தும் தொடக்க நிலையில் உள்ள சினைக்குழாய்க் கர்ப்பத்துக்கு அறுவை முறையில் சிகிச்சை அளிக்க முடியும். சினைக் குழாயைத் திறந்து, கருவை மட்டும் அகற்றிவிட்டு, குழாயைப் பாதுகாக்கவும் முடியும்.

**மீண்டும் மகப்பேறு**

சினைக்குழாயில் ஒருமுறை கர்ப்பம் தரித்தால் பிறகு கர்ப்பம் தரிக்க வாய்ப்பு உண்டா? என்ற கேள்விக்கு 'வாய்ப்பு குறைவு' என்றே கூறவேண்டும். ஏனெனில், இரு குழாய்களையுமே நோய் பாதிக்கிறது. இதனால் கருத்தரிக்க இயலாமைக்குத்தான் ...கிக வாய்ப்பு. மற்றொரு குழாய் நன்றாக இ...ந்தாலும், மறுபடியும் குழாயில் கர்ப்பம் தரிக்கும் அபாயம் உண்டு.

ஆனாலும், எந்தவித சிகிச்சையும் பெறாமலேயே ஒருமுறை குழாயில் கர்ப்பம் தரித்தபின்னும் 60 சதம் பெண்கள் மறுமுறை சாதாரணமாக கர்ப்பம் தரித்து, குழந்தைப்பேறு அடைந்திருக்கிறார்கள்.

ஒருமுறை புறக்கர்ப்பதுக்கு ஆளானவர்கள் மறுபடியும் குழாயில் கர்ப்பம் ஏற்பட்டுள்ளதா என்பதை தொடக்கநிலையிலே பரிசோதனை செய்து பார்க்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

சிலருக்கு, காசநோயால் 'சினைக்குழாய்' பாதிக்கப்பட்டு, சினைக்குழாய் கர்ப்பம் ஏற்படுகிறது. ஆகவே, சினைக்குழாய் கர்ப்பம் அடைந்த பெண்களுக்கு காச நோயால் பாதிப்பு உள்ளதா என்று பரிசோதனை செய்து, தேவையான சிகிச்சை பெறவேண்டும்.

சினைக்குழாய் கர்ப்பம் ஏற்பட்டு குழாய் வெடித்து, பிறகு சிகிச்சை பெற்றபின், மறுமுறை அவர்கள் குழந்தை வேண்டி சிகிச்சை பெறும்பொழுது கருததரிப்பதில் நிறையப் பிரச்சினை உள்ளது. இருந்தாலும் சரியான முறையில் சிகிச்சை அளித்தால் நிச்சயம் அவர்கள் குழந்தைப் பேறு பெற வாய்ப்பு உண்டு. ✱

**பெண்**

---

# மாதவிலக்கு நிறுத்தம் வாழ்வில் புதிய கட்டம்!

"நாற்பது வயதைக் கடக்கும் பெண்கள் குடும்பத்தில் மகள் திருமணம், புதிய மருமகள் வரவு, பொருளாதாரத் தடுமாற்றங்கள் என நிறையவே சந்திக்க வேண்டியிருக்கும். அதே சமயத்தில்தான் 'மெனோபாஸ்' எனப்படும் மாதவிலக்கு நிற்கும் காலமும் வந்து உடல்ரீதியாகவும் சிரமப்படுவார்கள். இவை எல்லாவற்றையுமே என்ன எனத் தெரிந்துகொண்டு விட்டால் வாழ்க்கை சுமுகமாகப் போகுமே!" என்று கூறுகின்றனர் மகளிர்நல மருத்துவர்கள். அவர்கள் மெனோபாஸ் பற்றி இங்கு விளக்குகின்றனர்.

மாதவிடாய் முழுமையாக நின்று விடும் நிலையை மருத்துவரீதியாக 'மெனோபாஸ்' என்று கூறுகிறார்கள். மாதவிடாய் முழுமையாக சுமார் 50 வயதில் நின்று விடும். சிலருக்கு 40 வயதிலேயே நிற்க வாய்ப்புண்டு. கருமுட்டைப் பையிலிருந்து சுரக்கும் ஈஸ்ட்ரோஜன் என்னும் 'ஹார்மோன் குறைவதால் மெனோபாஸ்' ஏற்படுகின்றது. மெனோபாஸ் நிகழ்வதற்கு 8 – 10 மாதங்களுக்கு முன்பாகவே அதற்கான அறிகுறிகள் தென்படும். அறுவை சிகிச்சையில் கருவகங்கள் அல்லது கருப்பை அகற்றப்பட்ட பெண்களுக்குத் திடீரெனவும் மெனோபாஸ் ஏற்படும்.

மெனோபாஸ் ஏற்படும்போது உண்டாகும் உடல் ரீதியான மற்றும் மனரீதியான அறிகுறிகள் பற்றி இனிப் பார்ப்போம்.



**உடல் ரீதியான ஆரம்ப நிலை அறிகுறிகள்:-**

✱ஒழுங்கற்ற மாதவிலக்குகள், குறைவான மற்றும் லேசான இரத்தப்போக்கு, திடீரென அதிகமாகும் இரத்தப்போக்கு.

✱உடலில் வெப்ப உணர்வு பரவுதல், இரவு நேரத்தில் அதிக வியர்வை.

✱இதயத்துடிப்பில் ஒழுங்கின்மை, உடலுறவில் ஆர்வம் குறைதல்.

✱பிறப்புறுப்பில் உலர்ந்த தன்மை

✱தூங்கும்போதும், சிரிக்கும்போதும் கட்டுப்படுத்த இயலாமல் சிறுநீர் வெளியேறுதல், அடிக்கடி சிறுநீர் கழித்தல், சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல் ஏற்படுதல்.

✱சருமம் உலர்ந்து போதல், அரிப்பு, தசைகளில் இறுக்கம் அதிகமாகுதல்.

✱மார்பகங்கள் லேசானதைப் போன்ற உணர்வு, மார்பகங்களில் வலி.

✱உடல் எடை அதிகரிப்பு,

✱எலும்புத் தேய்வு, இதயநோய், திடீரென ஏற்படும் மன அதிர்ச்சி.

✱தலை, பிறப்புறுப்பு அல்லது உடல் முழுவதும் (கேசம்) முடி உதிர்தல், முகத்தில் அளவுக் கதிகமாக முடி வளருதல்.

✱ஈறுகளில் அதிக இரத்தக்கசிவு, நகம் மென்மையாகுதல் அல்லது சுலபமாக உடைதல்.

✱காதுகளில் மணிச்சத்தம் ஒலித்தல், (டின்னிடஸ்)

**மன ரீதியான அறிகுறிகள் உருவாதல்:-**

✱திடீர் அழுகை, கோபம், எரிச்சல், கவலை போன்ற தொடர் மனநிலை மாற்றங்கள்.

✱கவனம் செலுத்துவதில் பிரச்சினை, கவனம் செலுத்த முடியாமை, மனச்சோர்வு, கிறக்கம், தலை லேசானதைப் போன்ற உணர்வு, சமநிலை இழப்பு

**மெனோபாஸ் அறிகுறிகளை எப்படி சமாளிக்கலாம்?**

✱டீ, கோப்பி, போன்ற சூடான பானங்கள், மசாலா உணவுகள், மதுபானங்கள், வெப்பமான பருவநிலை, வெதுவெதுப்பான அறை முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

✱வறண்ட சருமம் உடையவர்கள் 'மொய்ச்சரைசிங் க்ரீம்' அல்லது 'சன்ஸ்கிரீன்' லோஷனைப் பயன்படுத்தலாம்.

✱நாள்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் தூங்கி, குறிப்பிட்ட நேரத்தில் விழித்துக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சரியான நேரத்தில் உணவை உட்கொள்ள வேண்டும்.

✱பிடித்த பொழுதுபோக்கு அல்லது தியானம் போன்றவை மனதிற்கு அமைதியைத் தரும். நண்பர்களுடன் ஓய்வு நேரத்தை கலகலப்பாக செலவிடலாம்.

✱மெனோபாஸ் சமயத்தில் ஏற்படும் எலும்புத்தேய்வைத் தடுக்க முறையான உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். ஸ்டீராய்ட் உள்ள மாத்திரைகளை தவிர்த்து விட வேண்டும்.

**உணவு முறைகள்**

✱சுண்ணாம்புச்சத்து அதிகமுள்ள ராகி, பால், கீரை, மீன், உலர்ந்த பழங்கள் போன்றவற்றை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். நாள் ஒன்றுக்கு 1500 மி.கி. கல்சியம் உணவில் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

✱உணவில் அதிகப்படியான உப்பைத் தவிர்க்க வேண்டும். சோயா உணவுகள், பச்சைக் காய்கறிகள், முழு தானியங்களை அதிகமாக சேர்த்துக் கொள்ளுதல் இதய நோய்களை வரவிடாமல் தடுக்கும்.

✱புழுங்கல் அரிசி, ஓட்ஸ், ஹோல்மீல் ப்ரெட் போன்ற கார்போஹைட்ரேட் உணவை ஒருவேளையாவது உட்கொள்ள வேண்டும்.

✱கொழுப்புள்ள பால் தயாரிப்புகளைத் தவிர்த்து நார்ச்சத்துமிக்க உணவை சேர்த்துக் கொள்ளுவது சிறந்தது

✱செயற்கை ஸ்வீட்னர்கள், பிரிசர் வேடிவ்கள், காப்பின் போன்றவைகளை அண்ட விடவே கூடாது.

✱ஈஸ்ட்ரோஜன் மாததிரைகளை மருத்துவரின் ஆலோசனைப்படி எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மெனோபாஸிற்குப் பின் கடைப்பிடிக்க வேண்டியவை**

✱தொடர்ந்து உடற்பயிற்சி செய்து உடல் பருமனைக் குறைக்க வேண்டும். இதனால் எந்த நோயும் எளிதில் நெருங்காது.

✱இதயநோய் மற்றும் நீரிழிவு நோயில் இருந்து தப்பிக்க ஏரோபிக் உடற்பயிற்சிகள் உதவும். எடை தாங்கும் பயிற்சிகள் எலும்புத் தேய்வு ஏற்படாமல் தடுக்கும்.

✱தொடர் உடற்பயிற்சி செய்வதால் தசைகளுக்கு வலிமை, இணக்கத்தன்மை ஏற்படுகின்றது. நன்கு தூங்க உதவுகிறது. இரத்த அழுத்தத்தைக் குறைத்து இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது.

மெனோபாஸ் உங்கள் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வரும் ஒரு தடை என்று நினைக்காதீர்கள். புதிதாக பல ஆர்வங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். மெனோபாஸ் சமயம் உங்களைத் தளர்ச்சி அடைய விடாதீர்கள்.

இனி மாதந்தோறும் தொல்லை தரும் மாதவிலக்கு இல்லை என நல்ல காரியங்களில் இனிதாக ஈடுபடுங்கள். இது வாழ்க்கையின் புதியபாதை என மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ளுங்கள். ✱

# கவிதைப்புனல்

## துறவி ஆனேன்!

புடைத்திரு க்னிகள் குத்திப்
புலவனென் மார்பி லக்க
தடையினைக் கவர்ச்சி தாண்டி
தையலாள் வதனந் தின்ன
மடைவிட்டுப் பாயுங் காம
மதுவினில் மடந்தை மேய்ந்தாள்!

நகத்திடை இதழின் ஓரம்
நங்கையாள் மைகள் தீட்டி
முகத்திடை மின்னும் வண்ண
முகையவிழ் மினுக்கல் பூசி
தகர்த்திடும் மோக மெய்து
தத்தையாள் மாய்த்தாள் என்னை

கூந்தலை ஒட்ட வெட்டிக்
குதியுயர் செருப்பும் மாட்டி
ஏந்திலை காளை போன்று
எடுப்புறு ஜீன்சும் போட்டு
சந்தமாய் கவர்ச்சி காட்டும்
சங்கடம் சாலை சொல்லும்!

அரபியாம் மொழி பகர்ந்தேன்
அசத்தியே கொல்லு கின்றாள்
உரசுதல் தொல்லை என்றே
ஒதுங்கிடச் சொல்லு கின்றாள்
இரவினில் துய்க்கும் இன்பம்
எனக்கேது?: துறவி யானேன்!?

■ கவிஞர் ஏ.நாகூர், திருமலை.

## பரமன் அருள் கைகூடும்

கோயிலும் பூசையும் காசும் என்றால்
குடும்பம் சிறந்து வாழுமா? சில
ஆயிரம் கைகளில் கிடைத்தால் மட்டும்
அமைதி மனதில் பிறக்குமா?

சமுதா யத்துடன் இசைந்தால் தானே
சைவம் உலகில் தழைத்திடும் - தினம்
உமையொரு பாகனை நினைப்போர் உள்ளம்
உவகையில் மகிழ்ந்து நெகிழ்ந்திடும்!

கூடி வாழ்தல் மனதில் இலையேல்
கோத்திரந் தாலே என்ன பயன்? - புகழ்
பாடி உலகம் போற்றுவ தெல்லாம்
பண்பால் வாழ்வில் விளையும்பயன்!

உலகை ஒதுக்கி உன்னத நிலையை
எய்திட என்றும் இயலாது - பிறர்
தலையில் துன்பம் ஏறும் போது
தவிக்க விடவும் முடியாது!

ஆசா ரத்தை வீட்டில் வைத்து
அன்பாய் உலகில் நாம் நடந்தால் - கடும்
பாஷா ணமும் அமிழ்தாய் மாறும்
பரமன் அருளும் கைகூடும்.

■ க.கோணேஸ்வரன், திருமலை.

## ஜூலை மலர்கள்

கந்தகப் பொதி சுமந்து
பைந்தமிழ் பாட்டிசைத்து
வெடித்திடும் கணத்திலும்
வெகுளியாய்ச் சிரித்திடுவர்.

சிங்களம் பார்த்திருக்க - பகை
எங்கணும் சூழ்ந்திருக்க
சாவை சுமந்து நித்தம்
சாவிற்காய் காத்திருப்பர்.

இலக்கது கிடைத்திடும் - மிக
இன்புற்று சென்றிடுவர்
இலக்கது திசைமாறின்
ஏங்கியே தவித்திடுவர்.

விடியலுக்காகத் தம்மை
வெடியாக்கி மகிழ்ந்திடுவர் - தேசம்
விடிகின்ற போது - எங்கள்
இதயத்தில் வாழ்ந்திடுவர்.

மண்டியிட்டுத் துதிக்கின்றோம்
மற்றுமொரு தடவை நீர்
மண்ணில் பிறப்பெடுத்து
மகிழயாம் வந்திடுவீர்!

■ கு.தீபா, புதுக்குடியிருப்பு.

## தோட்டக் காவலாளி

காத்தலுக்கு மகாவிஷ்ணு; தோட்ட எல்லைக்
காவலுக்கு முனீஸ்வரனார்; ஊரை என்றும்
காத்தலுக்கு வைரவர்தான்; கடலைக் கட்டிக்
காத்தலுக்குப் பெருங்கரைகள்; குடும்பங் காப்பர்
மூத்தவர்தாம்; தேசங்களைக் காக்க இன்று
முடியரசா? குடியரசா? படையா? சிக்கல்!
பூத்துவெழில் குலுங்குமலர்த் தோட்டத் துக்குப்
போடுகின்ற வேலியதே காவல் ஆகும்!

தொழிற்சாலை நிறுவனத்துக் காவற் காரர்
தொழில்பார்ப்பு உள்–வெளியில்! இரவு வேளை
வழியில்லை அஞ்சுதற்கு; மண்ட பங்கள்
வசமான பாதுகாப்பு; உலாக்கள் சுற்றி!
குழியில்லை; குன்றில்லை; தோப்பு மில்லை!
கொடுத்திடலாம் தொலைபேசிச் செய்தி யோடி
கொழிக்கும்வளத் தோட்டத்துக் காவல் வேலை
குன்றேறி குழியிறங்கி நிமிரும் வேலை!

வான்முட்டும் உச்சிமலைச் சாரல் காடு
வற்றாத தீஞ்சுனைகள் விரையுங் கீழே
தேன்கூடு கற்குகைக்குள்; நெளியும் பாம்பு!
திக்கெல்லாம் பரந்துதிகழ் குன்றச் சூழல்!
தீன்தேடும் குருவிக்குலம் பறக்கும்; பச்சைத்
தேயிலைகள் பொலிந்திலங்கும் குன்றின் மீது
மீன்கும்பல் தேக்கங்களில் நீந்தும்;யானும்
மேற்கொள்வேன் மலைக்காட்டில் பகலில் வேலை!

மலைநிலத்துப் பெருந்தோட்டக் காவல் வேலை
மலைக்காது, சளைக்காது அலையும் வேலை
நிலையுயர்த்தும் காலணிகள் இல்லை; கள்வர்
நிலைகுலைக்கும் துவக்கில்லை; ஈர்க்குந் தொப்பி
தலைக்கில்லை; குல்லாவா? சால்வைக் கட்டு
தருமழகுச் சீருடையும் ஏது? என்றோ
விலைகொடுத்து யான்பெற்றக் கோட்டு; உள்ளே
வெண்ஷேர்ட்டு; இடையில்தான் வேஷ்டிக் கட்டு!

(தொடரும்)

■ கவிஞர் ஸி.எஸ்.காந்தி

## கொஞ்சல்வழிக் கல்வி

நிலவில்
அமைதிக் கடல் இருக்கிறது

தன்னுடைய கடலை
அமைதியாக வைத்துக் கொண்டு
பூமியில் இருக்கும் கடல்களை
அலைபாய வைக்கிறது அந்த நிலவு
நீ உன்னை அமைதியாக வைத்துக்கொண்டு
என்னை அலைபாய வைப்பதைப்போல

பூமியைத் தவிர
பருவகாலங்கள் உள்ள கோள்
செவ்வாய்

அதிருக்கட்டும்
உன் செவ்வாயில்
முத்தப் பருவக் காலம்
எப்போது தொடங்கும் சொல்

■ தபூ சங்கர்.

## காதல் நெருப்பணைக்க வாராயோ?

ஊனுருகிப் போகுதடி
உள்ளமெலாம் நையுதடி
தேனேயுன் நினைவாலென்
தேகமெல்லாம் தேயுதடி
வானூரும் வண்ணநிலா
வாட்டுதடி தீயெனவே,
மானேநீ வந்தணைத்து
வாடல்நிலை தீராயோ?

தெருவில் நடக்கையிலே
தேர்போல அசைந்துவரும்
உருவில் எழிலுடைய
ஒய்யார மெல்லிடையர்
அருகில் நெருங்குகையில்
அளிக்கின்ற புன்னகையில்
பருவம் தடுமாறும்
பதைப்புவரும் உன்நினைவில்!

தளுக்கு நடைமாதர்
தரிசாக உடலெழிலைச்
'சிலுக்'காய் மினுமினுக்கும்
சிவப்பாகக் காட்டிவர
இழுக்கும் மனக்குரங்கு
இச்சைகளைத் தூண்டிவிடும்
வழுக்கும் மனத்துக்கோர்
வடிகாலாய் வந்தணைப்பாய்!

எத்தனையோ திருமுனிவர்
இந்திரனும் வேறுபல
சத்தியத்தின் ஆளரெலாம்
சறுக்கி விழுந்தகதை
புத்தகத்தில் நான் படித்தேன்
புத்திதடு மாறுதடி
சித்தம் குழம்புமுன்னர்
செவ்விதழால் முத்தமிடு!

காதல் பெருக்கெடுக்கும்
கனிந்த மனமுடையேன்
மாதேயுன் நினைவுகளை
மனதில் முழுமையுடன்
சாதல் வரைக்குமென்று
சத்தியமாய் வைத்துவிட்டேன்
காதல் நெருப்பணைக்க
கண்ணேநீ வாராயோ?

■ கவிஞர் அ.கௌரிதாசன்.

## மைந்தனுக்கு ஓர் மடல்

நேற்றுக்கான் [illegible] வைத்த 'செக்'கும்
[illegible] கைக்கு எட்டிடுமையா!
[illegible]
[illegible] பூக்கதடா! [illegible]
[illegible] சொல்லி
[illegible]! உந்தன் அன்பு
வற்றவைக்க வில்லை என்றேன்; [illegible]
உன் ஊரின் [illegible] கண்டேன்.

[illegible]
[illegible] "[illegible]
[illegible]" [illegible]? [illegible]
[illegible] சொல்வாய்?
[illegible] என்று
[illegible]; உந்தன் [illegible]
[illegible]; நீ [illegible]
[illegible]!

[illegible]; [illegible]
[illegible] செய்வாய்! [illegible]
[illegible]
'[illegible]' [illegible]! [illegible]
[illegible]! '[illegible]' '[illegible]' [illegible]
[illegible]! '[illegible]' [illegible]
[illegible]! [illegible]
'[illegible]' [illegible]! [illegible].

[illegible]
[illegible] நான்... [illegible]
[illegible]...
[illegible]... உன் [illegible]? வேண்டாம்; [illegible]
[illegible]
[illegible]! [illegible]
[illegible]
[illegible]! [illegible] சொர்க்கம் இல்லை!!

[illegible]
[illegible]
[illegible], [illegible]
[illegible], [illegible],
[illegible]! உன் [illegible]
[illegible]! உன்னை
[illegible]; [illegible] நான்
[illegible].

[illegible], [illegible]
[illegible]
[illegible] ஆசை: நீ [illegible]?
[illegible]? [illegible] உன்,
'[illegible] இல்லை', எங்கள்
[illegible] எல்லை. உந்தன்
[illegible]! அதனால் எந்தன்
"[illegible]!"

■ அருணன்

## போதும் பாதை சரிதானோ?



மக்கள் ஆட்சி மலர்வதற்கும்
மாநில வாழ்வு புலர்வதற்கும்
தக்கதாய் வகுத்த யாப்பெங்கே?
தார்மிக அரசியற் கோப்பெங்கே?
மிக்குயர் தலைமை பூணுதற்கும்
மேவிடும் புகழைப் பேணுதற்கும்
வக்கணை யோடு வழிகின்றார்
வாக்குகள் கேட்டு நெளிகின்றார்!

வல்லர சாட்சிக் கனப்புடனும்
வளைகுடா வளைக்கும் நினைப்புடனும்
புல்லராய்ப் படையைப் பெருக்குவதோ?
பூதல வளத்தைக் கருக்குவதோ?
தொல்லுல கெங்கும் கரிமூட்டம்
திறம்பியே வாழ்வை எரியூட்ட..
அல்லலில் மானிடம் அழியுதடா!
அவனியே போரால் இழியுதடா!

எத்தனை கொடுமைகள் நாம் கண்டோம்!
எதனிலே மீட்சியைத் தினம்கொண்டோம்?

இத்தரை வாழ்வில் நீதியில்லை
இடரினைத் துடைக்க நாதியில்லை!
சொத்துச் சுகங்கள் கண்டவனும்
சுந்தர வாழ்வைக் கொண்டவனும்
எத்தராய் ஏய்த்தே பிழைக்கின்றார்!
எளியனை வதைத்தே திளைக்கின்றார்

மன்னுயிர் தன்னை மதிக்காமல்
மானிட உறவைத் துதிக்காமல்
இன்னும் பகையுடன் வாழுவதோ?
இனிதாம் வளங்கள் வீழுவதோ?
முன்னோர் வகுத்த நெறியுமில்லை!
மோட்சப் பாதைக் குறியுமில்லை!
இன்னுயிர் சுடலை இருப்பிடமோ?
இடர்பலி தடந்தான் தரிப்பிடமோ?

போதும் பாதை சரிதானோ?
புவன மீதில்
புன்மை வாழ்வே கதிதானோ?

■ ஏறாவூர் அனலக்தர்.




# குதிரை முட்டை வாங்கிய கதை

பரமார்த்த குருவும் அவரது சீடர்களும் ஆற்றைக் கடந்தமை பற்றியும், ஆள் ஒருவர் குறைந்தமை பற்றியும், மந்திரச் சாட்டையின் மகிமை பற்றியும் முன்கதையில் கண்டோம். குருவிற்கும், சீடர்களுக்கும் சாட்டை அடி வாங்கியதுகூட ஞாபகம் இல்லை. ஆனால், அவன் ஏறிவந்த குதிரையை மட்டும் அவர்களால் மறக்கவே முடியவில்லை.

அப்படியொரு குதிரையை குருவிற்கு வாங்கிவிட வேண்டுமென்று அவர்கள் முடிவுகட்டினார்கள். குதிரை என்ன விலையாய் இருக்கும், குதிரைகள் எங்கு கிடைக்கும்... குதிரை குட்டி போடுமா அல்லது முட்டையிடுமா? இதுபோன்ற குதிரை பற்றிய அரிச்சுவடி கூட குருவிற்கும், சீடர்களுக்கும் தெரியாது.

ஒருநாள் பரமார்த்தகுருவின் மடத்திலிருந்த பசு ஒன்று காணாமல் போய்விட்டது. அதைத் தேடும் பணியில் சீடர்கள் ஈடுபட்டிருந்தார்கள். மூன்று நாட்கள் தேடியபின் மட்டியும், மடையனும், பேதையும் திரும்பிவிட்டார்கள். ஆனால், முட்டாளும், மிலேச்சனும் தேடிக்கொண்டே பல ஊர்களுக்கு வந்தார்கள். அப்போது ஓர் ஊரில் பல கழுதைகள் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றைக் குதிரைகள் என்று நினைத்துக்கொண்ட இருவரும் எப்படியாவது இதில் ஒன்றை வாங்கி அதில் தங்கள் குருவை ஏற்றி, சவாரி செய்யவிட்டால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தார்கள். அருகில் நின்ற ஒருவரிடம் சென்று, "ஐயா, இந்த மட்டக் குதிரைகள் விலை என்னவாய் இருக்கும்?" எனக் கேட்டனர்.

அவர், "குதிரைகளா, எங்கே?" என்றார்.

"உங்களுக்குக் கண் சரியாகத் தெரியாதா? உங்கள் கண் முன்னேதானே அதோ ஆறு குதிரைகளும் மேய்ந்துகொண்டு இருக்கின்றன." - என்றார்கள் சீடர்கள்.

இவர்கள் சரியான கிறுக்கர்களாக இருப்பார்கள் போலும் என்று நினைத்த அந்த ஆசாமி, "ஓ! இவற்றைச் சொன்னீர்களா? இவை என்னுடைய மட்டக் குதிரைகள்தான்." என்றான்.

"இவற்றில் ஒன்றை விற்கும் எண்ணம் உண்டா?"

"விற்பதற்குத்தான் வைத்திருக்கிறேன். ஒன்றின் விலை ஐம்பது பொற்காசுகள்."

"அடேயப்பா, இவ்வளவு விலையா?"

"சரி, உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது?"

"ஐந்து பொற்காசுகள்."

"ஐந்து காசுக்கு இதன் முட்டையைக்கூட வாங்க முடியாது."

"அடடா! எனக்கொரு அற்புதமான யோசனை தோன்றுகிறது" என்றான் முட்டாள்.

"என்ன யோசனை?"

"இதன் முட்டை ஒன்றை வாங்கி நாம் அடைகாத்துக் குஞ்சு பொரித்தால் என்ன?"

"ஆகா! அட்டகாசமான யோசனை."

"ஐயா, குதிரை முட்டைகள் எங்கு கிடைக்கும்?"

"பொன்னமராவதி சந்தைக்குச் செல்லுங்கள். அங்கு வேண்டிய முட்டைகளை வாங்கலாம்."

"எத்தனை நாட்கள் அடைகாக்க வேண்டியதிருக்கும்?"

"சரியாக நாற்பது நாட்கள்."

"ஐயா, இந்த முட்டைகள் என்ன நிறத்தில் இருக்கும்?"

"சாம்பல் நிறத்தில் இருக்கும்"

"எவ்வளவு பெரிதாக இருக்கும்?"

"இவ்வளவு பெரிது" - கைகளை குவித்துக் காண்பித்தான்.

"நன்றி ஐயா, வருகிறோம்."

அவர்கள் சென்றதும் அந்த ஆசாமி விழுந்துவிழுந்து சிரித்தான். வெகுநேரம் வரை அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

இந்தக் காலத்தில் இப்படியும் மூடர்களா?

மடத்திற்கு வந்த இருவரும் குதிரை முட்டை பற்றி குருவிடம் சொன்னார்கள். பரமார்த்தகுரு குதிரை முட்டை ஒன்று வாங்கி விடுவதென்று முடிவுகட்டினார். ஆனால் அதை அடைகாப்பது யார் என்ற பிரச்சினை வந்தது.

முட்டாள் சொன்னான்: "நான்தானே தினமும் மடத்திற்கு வேண்டிய தண்ணீரைச் சுமக்கிறேன். நான் அடைகாத்தால் தண்ணீர் எடுப்பது யார்?"

இவ்வாறு ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வேலைகளைச் சொன்னார்கள். வேலை இல்லாமல் இருப்பது யார்? குருதான். எனவே அவர்தான் அடைகாக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள். குருவும் அதை ஏற்றுக்கொண்டார்.

"எப்படி அடைகாப்பது... முட்டையின் மேல் ஏறி உட்கார்ந்தால் முட்டை உடைந்துவிடாதா?"

"ஆம், அதுவும் சரிதான்" என்ற அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு யோசனையைச் சொன்னார்கள். கடைசியில் மட்டி சொன்ன யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குரு சம்மணமிட்டு உட்கார்ந்து தன் மடியில் குதிரை முட்டையை வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் குருவை ஒரு போர்வையால் போர்த்திவிட வேண்டும்.

ஒரு பெரிய பிரச்சினை ஓய்ந்தது. இனி குதிரை முட்டை வாங்கி வரவேண்டும். குரு இருபது பொற் காசுகளை எடுத்து முட்டாளிடமும், மட்டியிடமும் கொடுத்து, "நீங்கள் இருவரும் சந்தைக்குச் சென்று நல்ல குதிரை முட்டையாக வாங்கி வாருங்கள், ஏமாந்துவிடவேண்டாம்" என்று எச்சரித்து அனுப்பினார்.

இருவரும் சந்தைக்குப் புறப்பட்டனர்.

சந்தைக்குள் நுழைந்த அவர்கள் குதிரை எங்கே கிடைக்கும் என்று கண்களைச் சுழலவிட்டனர்.

"அதோ பார் குதிரை முட்டைகள்" மட்டி ஆச்சரியமாகக் கத்தினான்.

"அடேங்கப்பா! இத்தனை குதிரை முட்டைகளா? வா, சென்று விசாரிப்போம்."

அவர்கள் குதிரை முட்டைகள் என்று நினைத்தது சாம்பல் பூசணிக்காய்களை!

"ஐயா கடைக்காரே! இந்தக் குதிரை முட்டைகள் என்ன விலை?"

கடைக்காரர் சுற்றும்முற்றும் பார்த்து, "குதிரை முட்டைகளா, விசித்திரமாக இருக்கிறதே."

"இப்படியெல்லாம் பேச வேண்டாம். மலைபோல் குதிரை முட்டைகளைக் குவித்து வைத்துக்கொண்டு விசித்திரம் என்கிறீர்களே. ஏன்? நாங்கள் காசு கொடுக்காட்டோம் என்று நினைக்கிறீர்களா?"

இவர்கள் சரியான முட்டாள்களாக இருப்பார்கள் போலும் என்று நினைத்த கடைக்காரர், "அதற்கில்லை...: விலை கொஞ்சம் அதிகம்." என்றார்.

"என்ன விலை?"

"இருபத்தைந்து பொன்கள்."

"ஐயா! கொஞ்சம் இரக்கம் காட்டவேண்டும். எங்களிடம் இருபது பொன்கள்தான் இருக்கின்றன. இதை வாங்கிக்கொண்டு ஒரு நல்ல முட்டையைக் கொடுக்க வேண்டும்."

"பார்த்தால் நல்லவர்கள்போல் தெரிகிறது. எங்கிருந்து வருகிறீர்கள்?"

"பரமார்த்தகுருவின் சீடர்கள் நாங்கள்."

"நான் நினைத்தது சரிதான்."

பணத்தை வாங்கிக்கொண்டு ஒரு சாம்பல் பூசணிக்காயைக் கொடுத்தார்.

மிக்க மகிழ்ச்சியுடன் அதை வாங்கித் தலையில் வைத்துக்கொண்டான் முட்டாள்.

மாலை நேரம், காட்டில் ஒற்றையடிப்பாதையில் பேசிக்கொண்டே நடந்து வந்தார்கள்.

முட்டாளின் கால் ஒரு கல்லில் இடறியது. அவன் படக்கென்று சாய்ந்தான். சாய்ந்த வேகத்தில் அருகிலிருந்த மரத்தின் தாழ்வான கிளையில் டமார் என்று மோதினான்.

தலையிலிருந்த பூசணிக்காய் தொப்பென்று கீழே விழுந்து உடைந்தது. அப்போது அங்கு புதரின் மறைவிலிருந்த முயல் ஒன்று விசுக்கென்று கிளம்பி ஓடியது.

"குதிரைக் குட்டி டோய், விடாதே பிடி விடாதே பிடி" கத்திக்கொண்டே பின்னாலேயே ஓடினான். அது மாயமாய் மறைந்துவிட்டது.

முட்புதர்கள் பற்றி இழுத்ததால் அவர்களது ஆடைகள் கிழிந்தன. உடம்பெல்லாம் கீறல்கள், இரத்தம் வடிந்தது.

அவர்கள் அழுதுகொண்டே குருவிடம் வந்தார்கள்.

"ஏன் அழுகிறீர்கள்? குதிரை முட்டை என்ன ஆனது?"

"அந்த அநியாயத்தை எப்படிச் சொல்வோம் குருவே. தலையில் சுமந்து வந்த குதிரை முட்டை கல் தடுக்கி, கிளையில் மோதி கீழே விழ, அதிலேர்ந்து விசுக்குன்னு கிளம்பிச்சு பாருங்க ஒரு குதிரைக்குட்டி, ஓட்டமனா ஓட்டம். செம ஓட்டம். நாங்க முடிஞ்சமட்டும் விரட்டிப் பார்த்தோம். குதிரைக்குட்டி ஓடியே போயிடுச்சு."

இருவரும் அழுதார்கள்.

"அழாதீங்க. இதுவும் ஒருவகையில் நல்லதுதான். குட்டியா இருக்கும்போதே இந்த ஓட்டம் ஓடுற குதிரைக் குட்டி பெரிசான உடனே எந்த ஓட்டம் ஓடும்? அதில் நான் ஏறி சவாரி செய்தால், என் நிலை என்ன ஆகும், சற்று சிந்தியுங்கள்." என்றார் குரு.

(தொடரும்)

## அழகாக நிறம் தீட்டுங்கள் 59



தம்பி, தங்கைகளே! அருகே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவுசெய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 56



ஆர். எச். ... தரம் 03. சென் தோமஸ் கல்லூரி, கல்கிசை.

### பாராட்டுப் பெறுவோர்...

1. செல்வி. பி. கணேஷப்பிரியா, தரம் 1எவ், திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு - 04.
2. கி.சர்தசன், தரம்3, ஹைலன்ட்ஸ் கல்லூரி, ஹட்டன்.
3. ஜி. அஸ்காபானு, தரம் 5, கொ/ சைரியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு -09.
4. ஜே.எச்.பாத்திமா மரியம், தரம் 3, ஸெயினப் மகளிர் மகா வித்தியாலயம், புத்தளம்.

# சிறுவர் கைவண்ணம்



அபிஷா ..., இல்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, வெள்ளவத்தை.



இஹனி, தரம் - 4, இல்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, வெள்ளவத்தை.



மதுமிதா, இல்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, வெள்ளவத்தை.



பாத்திமா முனாசால், தரம் - 7 ஜீ, பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம், புத்தளம்.

# ஊடக கற்கைநெறியும் அதனை வெற்றிகரமாக அமைத்தலும்


MMIC - கல்லூரி அதிபர் லயன் எஸ்.கே. ரமேஷ் உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

தகவல் தொழில்நுட்பம், அதன் விளைவான பரிமாற்றம், ஆகியன துரிதமான வளர்ச்சி கண்டுவரும் யுகம் இது. ஆலமரம் போன்ற இந்த அறிவியலின் அசுர வளர்ச்சி நாளொரு வண்ணமாக புதிய புதிய விழுதுகளை துளிர்விடச் செய்து கொண்டிருக்கின்றது. இதன் தாக்கத்தின் பிரதிபலிப்புகள் நாட்டிலும், நம் மொழியிலும் ஏற்படத் தவறவில்லை. வெகுஜன ஊடகங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, கணினி மூலமான இணையங்கள் இன்று மக்களின் அன்றாட வாழ்வுடன் இரண்டறக்கலந்து தொடர்பாடலின் நாடி நாளங்களாகி விட்டன.

தொடர்பாடல் வாழ்வியலில் பிரதான இடம் வகிக்கின்றது. இதற்கு பேச்சாற்றல் முக்கியமானது. மொழிவல்லமை அதன் உயிர்துணையாகின்றது.

செய்தி பரிவர்த்தனையிலும், தொடர்பாடலிலும் பத்திரிகைகள் மட்டுமே அரசோச்சியிருந்த நிலைமை மாறுதலடைந்து, அதன் வளர்ச்சியாக வானொலியும் இடம் வகிக்க ஆரம்பித்ததுடன், அதற்கான மொழி வல்லமையின் பிறிதோர் அம்சமும் தேவையாகத் தலைதூக்க ஆரம்பித்தது. வானொலிக்கு பேச்சாற்றல் முக்கியமானது. செய்தி அல்லது தகவல்வழங்கும் மொழியாற்றல் எழுதுவதில் மட்டும் அல்ல, பேசுவதிலும் அதன் திறனை வானொலி வேண்டி நிற்பதே காரணமாகும். இலங்கை வானொலியின் தோற்றமுடன் மொழி வல்லமையின் பிறிதொரு அம்சமான பேச்சாற்றல் உயிர்ப்புக் கொண்டது. இத்தன்மை ஆரம்பத்திலிருந்தே இலங்கை வானொலியில் வெற்றிகரமாகவே அமைந்தது. அன்றைய வானொலிக் கலைஞர்கள் எழுத்தாற்றலிலும் ஓரளவிற்கு பக்குவப்பட்டிருந்தமையின் காரணமாக பேச்சாற்றல் மூலமாகத் தமது தொடர்பாடலை முன்னெடுப்பதில் கரிசனை கொண்டு அவதானிப்புடன் தம்மை வளர்த்துக் கொண்டனர். இத்தகையதொரு நிலைமை அதிக அளவில் தனியார் வானொலிகளும், தொலைக்காட்சி சேவைகளும் புற்றீசல்களெனக் கிளம்பி அன்றாட வாழ்வியலுடன் முட்டிமோத ஆரம்பித்ததுடன், நிலைமை பனிக்குடம் உடைந்தாற் போன்று சிதறிவிட்டது. எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் இல்லாத அதீத போக்குடைய இளைஞர் பட்டாளம் தொழில் ரீதியாக இவ்வூடகங்களுக்குப் படையெடுத்தனர். இலாப நோக்குடைய தனியார் சேவைகளின் தேவையும் இதுவாகவே இருந்தது.

ஜனரஞ்சகம் என்ற கோட்பாடு முதன்மை நிலை வகித்தல் வேண்டும் என்ற மூலமந்திரம் இத்துறையின் தேவையாக இடம்பிடித்துக் கொண்டது. முதிர்ச்சியின்மையும், தரமற்ற வெளிப்படுத்தலும் தவிர்க்க முடியாதவைகளாகிவிட்டன. தகவல் வழங்குவதும், மொழியின் சீர்மையும் இத்துறையின் பிரதிபலிப்புகளாக அமைந்தபோது கடுமையான எதிர்ப்பலைகள் இவை குறித்த கரிசனையாளர்களிடமிருந்து வெடித்துக்கிளம்பின. ஜனரஞ்சகமாகவிருந்தாலும் தகவல் வழங்கலிலும், பேச்சுத் தொடர்பாடலிலும் மொழியின் சீர்மை பேணப்பட வேண்டும் என்பதை சகலமட்டத்தினரும் வெகுவிரைவிலேயே உணரத்தலைப்பட்டனர். இதன் காரணமாகவே நாடு தழுவிய ரீதியில இவை தொடர்பான கற்கைநெறிகள் தோன்றின. இவை பயன்மிகு செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன.

வெகுஜன ஊடகங்களைச் சிறப்பாகக் கையாளவும், மொழியின் சீர்மை கெடாமல் பேச்சாற்றலை வளர்த்துக் கொள்ளவும் ஊடகவியல் கல்வி அவசியமானதாகும். இதன் அவசியப்பாட்டின் விளைவாகவே இதழியல் கல்லூரிகள் தோன்றியுள்ளன. அரசும் பாடவிதானத்தில் இணைத்துக் கொள்ள முனைகிறது.

M.M.I.C. என அழைக்கப்படும் 'வெகுஜன ஊடக இலங்கைக் கல்லூரி' ஒலிபரப்புத்துறை கலைஞர்களுக்கு பயிற்சியளிப்பதற்கென ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தனியார்துறை நிறுவனமாகும். ஊடகத்துறையில் அனுபவமிக்க எஸ்.கே. ரமேஷ் என்பவரே இதனை ஆரம்பித்தார். 2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இக்கல்வி நிறுவனம் கடந்த எட்டு ஆண்டுகளாகக் கற்கைநெறியினை சிறப்புற நடத்தி வருகிறது. அதில் ஒலிபரப்புத்துறைக்கான கல்வி கற்று தேறியவர்களுக்கு சான்றிதழ் வழங்கிப் பாராட்டும் வைபவம் அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இடம்பெற்றது. ஊடகத்துறைசார்ந்த ஏராளமான கலைஞர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் தமது இதழியல் மற்றும் ஒலிபரப்புத்துறை கற்கைநெறிகளை இந்நிறுவனத்திலே பெற்றுக்கொண்டதுடன், இன்று நாட்டில் ஒளி, ஒலிபரப்புத்துறை சேவையில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுபவர்களாகவும் இருக்கின்றனர் என்பது சிறப்புக்குரியதோர் அம்சமாகும்.

இக்கல்லூரியின் நிறுவுனரும், அதிபருமான எஸ்.கே. ரமேஷ் கல்லூரியின் கற்கைநெறி மற்றும் செயற்பாடுகள் குறித்துக் குறிப்பிட்டார்.

இலங்கை வானொலியில் ஓர் அறிவிப்பாளராகப் புதிய தலைமுறை இளங்கலைஞர்கள் அங்கு பணியாற்றுவதற்கு இணைந்தபோது அவர்களிடம் காணப்பட்ட தகவல்வழங்கல், பேச்சாற்றல், உச்சரிப்பு பிசகல் என்பனவற்றை அவதானித்து வந்திருக்கிறார். அதற்கான கல்லூரி மட்டத்தில் ஒரு வழிகாட்டல் அவசியம் என்பதையும் உணர்ந்தார். அதன் காரணமாகவே அத்துறைசார்ந்த பலரின் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றுடன் கல்லூரியை நிறுவி அனுபவம் மற்றும் அறிவு சார்ந்த பெரியோருடன் இணைந்து, கலந்தாலோசித்து, பொருத்தமான கற்கைநெறியொன்றையும் அமைத்துள்ளார். செய்தி எழுதுதல், தகவல் சேகரித்தல், அவற்றை கட்டமைத்தல், வாக்கியங்களை நெறிப்படுத்தல், உச்சரிப்புச் சுத்தம், ஏற்ற இறக்கம் என்பவற்றை அடிப்படை அம்சங்களாகக் கொண்டு இக்கற்கை நெறி அமைக்கப்பட்டுள்ளது. என்பதை தெளிவுபடுத்துவதாக அதிபர் ரமேஷின் குறிப்புகள் அமைந்திருந்தன.



இக்கல்வி நிறுவனம் தமது புதிய கல்வித்திட்டத்தில் மேலும் பல புதிய அம்சங்களாகப் பாடசாலை மாணவர்களிடையே கலையுணர்வை அதிகரிக்கச் செய்யும் மேடைப்பேச்சு, வானொலி, தொலைக்காட்சிகளில் பங்குபற்றி வாதவிவாதங்களில் ஈடுபடுவதற்கான பயிற்சிகளை முன்னெடுக்கவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

இளைய தலைமுறையினர் மத்தியில், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் அதிகரித்து வரும் இன்றைய நிலையில் Diploma in Mass Media எனும் 12 பாடவிதானங்கள் அமைந்த கற்கை நெறி வழங்கப்படுகின்றது. அதேவேளை அறிவிப்புத்துறையில் செய்தி வாசித்தல், நிகழ்ச்சி தொகுத்தல், நேர்காணல், எழுதும் விடயம் வழங்கல், என்பனவும் கற்பிக்கப்படுகின்றன. Diploma in Mass Media - Diploma in Journalism ஆகிய கற்கைநெறிகளையும் இவர்கள் வழங்கி வருவது சிறப்பானதாகும்.

**கே.வி.**

நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினர்.





## "அடுத்த உலகப் போர் ஜலத்திற்காகத்தான்"

ஓர் எழுத்தாளர் சொன்னார்:

"எழுத்தாளர் சுஜாதாவை, நேக்கு பிடிக்கல்லவோய்"

"அடப்பாவி மனுஷா! ஏன் அப்புடிச் சொல்றேள்?

சுஜாதா! சுஜாதா! ன்னு இங்கே ரொம்பப்பேர் உயிரை விட்டுன்னு இருக்கார். அவாள் காதுலே விழுந்துட்டா பெரிய வம்பாப்போயிடும். மனுஷன் அந்த அளவுக்கு எழுதித் தள்ளி ரசிகர் பட்டாளத்தை குவிச்சு வைச்சிருக்காரர்."

"நன்னாதான் எழுதியிருக்கார். ஆனா எதிர்காலம் பத்துன விஞ்ஞான கதைகள் எழுதியிருக்காரே. அதுகதான் நேக்கு புடிக்கல்லே. இன்னும் கொஞ்ச காலத்துலே உலகம் இப்படித்தான் இருக்கப் போறது, மனுஷாள் இப்புடித்தான் இருக்கப் போறான்னு பயமுறுத்தின்னே இருக்கார். இது தேவைதானா? சமகாலப் பிரச்சினையை எழுதுனாப் போறாதா? அவருடைய விஞ்ஞான கதைகள் தூங்கவிடாமல் பயமுறுத்தின்னே இருக்கு."

"ஹஹ் ஹஹ் ஹா! என்னவோய், இதுக்கு இந்த அலட்டல் அலட்டுறேள். அவர் சொல்றது நெஜமோ, பொய்யோ. சுஜாதா சொன்ன காலத்துலே நாம உசுரோட இருக்கப்போறது இல்லை. பின்னே ஏன் மெரண்டு சாகணும்? 'குடி ஜலம்' தான், அடுத்த உலகப் போரை இழுத்துன்னு வரப்போரதுன்னு ஒருத்தர் எழுதியிருக்கார்.

"ஈஸ்வரா! அப்படியொரு நிலமை ஜீவன்களுக்கு வரப்படாது! கடலாய், நதியாய், அகிலமெல்லாம் பரந்து கெடக்கே உனக்கா பஞ்சம் வரப்போரது?"

"என்ன பண்றது வந்து தொலையப் போறதே. அதுவும் நம்ம காலத்துலே தலைநீட்டும் போல இருக்கு. இன்னும் ரெண்டு நூற்றாண்டுக்குள்ளே நிலமை எப்படி இருக்கப்போறது தெரியுமா? 'ஜலம்' என்கிறது மருந்துக்கும் கிடைக்காத பண்டமாகப்போறது. நெலமை எப்படி இருக்குமுன்னு சொன்னா பூமியை மூவாயிரம் அடி தோண்டியும் பாளம் தங்கம் வருகிறதே தவிர, ஒரு சொட்டு ஜலம் வர இல்லே. வங்கியில் திகில் சம்பவம்; ஏ.கே. போர்ட்டி செவனோட நாலு பேர் பூந்து 6 பேரை சுட்டுத்தள்ளிவிட்டு பத்து பேக் தண்ணீரோடு தப்பியோட்டம், அதன் பெறுமதி 50 லட்சம் என்று சொல்லப்படுகிறது. விமானத்தில் கடத்தப்படவிருந்த 5 பார்ட்டில் தூய தண்ணீர் கண்டுபிடிக்கப்பட்டது; சுங்க அதிகாரிகளின் துணிகர புலனாய்வு. அதனால் அரசுக்கு 5 லட்சம் லாபம் - இப்பிடித்தான் தேசிய தொலைக்காட்சியிலே செய்தி வாசிக்கப்போறா."

"ஐயோ! எம் பெருமானே! உன் தலையிலே ஓடுகிற கங்கா ஜலத்தை வத்திப்போடச் செய்யாதே'."

## புருஷன் மாரிண்ட மரியாதை கொடி கட்டிப் பறக்குது

"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்று பெருமைப்படுகிற சமுதாயம் எங்கள்ண்ட தமிழ்க் குடிதான்."

"சரி, சரி, ஆர் இல்லை என்றது? அம்மான் என்னத்தைச் சொல்லப்போறீங்கள் என்றது அச்சொட்டாத் தெரியுது. ஆனால், நான் கொஞ்சம் வித்தியாசமாத்தான் சொல்லப்போறன்."

"அது சரிதான். நீர் எழுத்தாளன், கதை, கவிதை எண்டு புதுமையாக எழுதுறவர், ரியலிஸம் பற்றிக் கதை கதையாகப் பேசுறவர். உம்முட கண்ணுக்கு எல்லாம் வித்தியாசமாகத்தானே தெரியும்? சரி, அப்படி என்ன வித்தியாசத்தைக் கண்டு கொண்டதாக மார்தட்டிக் கொண்டு நிற்கிறீர்?"

"கலியாணமெல்லாம் சொர்க்கத்திலே பிக்கப் பண்ணுறதாகச் சொல்றதாகச் சொல்லுறாங்களே. உந்த கண்றாவிக் கதைகளை நான் கேட்கத் தயாரில்லை."

"இதென்ன புதுக்கதை. ஏன் அப்படிச் சொல்லுறனீர்?"

"எங்கள் சமூகத்தின்ட புருஷன் பொஞ்சாதி உறவுகள் உப்புடிச் சொல்லக் கூடியதாகவோ இருக்கு. எல்லாம் தலைகீழாத்தானே கிடக்கு. இந்தப் பெண் ஜென்மங்கள் புருஷன்மாரை மதிக்கினமே? வெளிநாட்டு பெண் விடுதலைப் போராட்டங்கள், ஏன் உந்த மெகா சீரியல்கள் எல்லாமே உதுகளை மாத்திப் போட்டுது."

"ஹஹ் ஹஹ் ஹா"

"என்ன அம்மான் சிரிக்கிறியள்?"

"இல்லே உமக்கு மனுஷியோட கொளுவலாக்கும். அதுதான் உப்புடி பொரிஞ்சு தள்ளுறீர்."

"சே...! சே. என்ட மனுஷி தங்கம். நான் பொதுவாக யதார்த்தத்தைக் கதைக்கிறனான். என்னதான் மேல் நாட்டு குடும்ப வாழ்க்கையை, பொஞ்சாதி புருஷன் வாழ்க்கையை 'கன்னா பின்னா' வென மோசமாக நாங்கள் சொன்னாலும் அவையள் கொஞ்ச காலம் தான் ஒட்டுறவோட வாழ்ந்தாலும் ஒருவரை ஒருவர் மதிச்சி வாழ்கினம். மனுஷன் இன்னொரு பொம்புளையோட அறைக்குள்ளே இருந்தாலும், நான் உள்ளே வரலாமா என்ற கேள்வியோடத்தான் உள்ள போறவங்கள். அவ்வளவு மரியாதை.

"ஓமோம்! ஓமோம்! உதுல பகிடி என்னென்றால் சில புருஷன் மாரிண்ட மரியாதை அங்கே கொடி கட்டி பறக்குது."

"கண்டியளே! நீங்கள் உலகம் தெரிஞ்ச மனுஷன். உங்கள்ண்ட வாயாலே நாலு மாச்சாரத்தைச் சொன்னால்தான் எங்கள்ண்ட மூதேசிகளுக்கும் நெஞ்சலே படும். ஆயிரம்தான் எண்டாலும் புரிபன்மாருக்கு அவையள் குடுக்குற மரியாதை தனியானதுதான். ஏதேனும் சொல்லுங்கோவன்"

"சொல்லுறன்' சொல்லுறன். அங்கத்த புராணத்தைக் கேளுங்கோ. ஓர் அமெரிக்கன் டிப்டொப்பாக ஒரு பண்ணை வீட்டின் வெரெண்டாவிலே வந்து நின்றவன்.

"மிஸெஸ் எலிசபெத், உங்கள் கணவரை சந்தித்து பேச வேண்டும்"

"ஓ. அப்படியே? அவர் பன்றிப் பண்ணையிலே இருக்கார்."

"சந்திக்கலாமே?"

"தாராளமாக. ஒரு விசயம். பன்றிகளின்ட நடுவிலே குந்தியிருப்பார். கண்டு கொள்ள கஷ்டம்தான். 'மனுஷன்ட வாயிலே சுருட்டு எரியும். அதை வைத்து கண்டுபிடித்தும் கொள்ளுங்கோ.

"என்ட தம்புரானே! மரியாதை மகுடம் சூடித்தான் நிற்குது."




# நள்ளிரவில் ஒரு நாடகம் 26

## முன்கதைச் சுருக்கம்

சிக்காக்கோ நகரின் ஒதுக்குப் புறமான ஓரிடத்தில் நியூமூன் வைத்தியசாலை அமைந்திருக்கிறது. கொஞ்சம் தொலைவில் நர்சுகளின் விடுதி இருக்கிறது. மர்ம மனிதனொருவன் நள்ளிரவில் இந்த விடுதிக்குள் நுழைகிறான். பல திகில் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. நர்சுகள் உட்பட ஒரு ரோந்து பொலிஸ்காரன், பிரதேச பொலிஸ் அதிகாரி எனப் பலர் அவனால் கொலை செய்யப்படுகின்றனர்.

ஏன்? என்ன காரணம்?

சிறைச்சாலை அதிகாரியின் அழகிய இளம் மனைவியுடன் றோபோ என அழைக்கப்படும் மர்மமனிதன் உறவுகொள்வதை அதிகாரி கண்டுவிடுகிறான். ஆத்திரமடைந்த அவன் ரகசியமாக தன் மனைவியை கொன்று விடுகிறான். பிணத்தை பெட்டியில் அடைத்து சிறைக்கைதியான றோபோவையே கொண்டுசெல்ல வைக்கிறான். குற்றத்தை றோபோ மீதே சுமத்த வைக்கிறான். பொலிஸாரினால் கடுமையாகத் தாக்கப்பட்ட றோபோ வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படுகிறான்.

அங்கே என்ன நடைபெறுகின்றது...?

இனி...

நடுச்சாமம் கடந்துவிட்டது.

நியூமூன் வைத்தியமனை மெர்க்குரி வெளிச்சத்தில் மூழ்கிக்கிடக்கிறது.

உட்புறம் கண்களுக்கு குளிர்மையான மங்கல் வெளிச்சம் பரவிக்கிடக்கிறது. பரபரப்பு அடங்கிய ஓர் அமைதியான சூழல், பல நோயாளிகள் படுக்கைகளில் அமைதியாக குறட்டை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

டாக்டர் வில்லியம்ஸின் அறை. நாற்காலியில் அமர்ந்து தனக்கு முன்னாலுள்ள மேசையில் கால்கள் இரண்டையும் தூக்கிப் போட்டுக் கொண்டு டாக்டர் கண்களை மூடிக்கொண்டிருந்தார். அவர் மனதில் பல எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

பதினைந்து நிமிடங்களுக்கு முன்னர் -

டாக்டர் வில்லியம்ஸ் வீட்டில் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்.

அப்போது -

தொலைபேசி அலறியது. மறுபக்கம் திரும்பிப்படுத்தார்.

'டாக்டர்னாலே தொல்லைதான். கொஞ்சம் நிம்மதியாக தூங்கமுடிகிறதா? எப்பப் பார்த்தாலும் டெலிபோன் தொல்லைதான். எவனுக்கும் சாப்பிட முடியவில்லை என்றாலும் 'கோல்'தான். அடேயங்கப்பா. இவன் சாப்பிடுகிறான், சாப்பிடுகிறான், நிறுத்தவே முடியவில்லை என்றாலும் கோல்தான். என்ன உலகமடா இது? சே! சே! சே!' - அவர் உதடுகள் வெறுப்புடன் முணுமுணுத்துக் கொண்டன.

'ஐயா' உன்னை விட மாட்டேன்' என்பது போல மறுபடியும் தொலைபேசி கதறியது.

'சே! என்ற அலுப்புடன் எடுத்து காதில் வைத்தார்.

"ஹலோ"

"வில்லியம்!. நான்தான் கிளின்டன்." பிரதம சிறை அதிகாரியின் குரல் ஒலித்தது. டாக்டர் வில்லியம் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தார்.

"ஹலோ சார்! என்ன இந்த நேரத்தில்?"

"அவசரம்! அவசரம்! உடனே நியூமூனுக்குப் போங்கள். அங்கே ஒரு சிறைக்கைதியை கொண்டு வருவோம். என்ன செய்ய வேண்டுமோ அதைப் பிறகு சொல்கிறேன். உங்களுக்கு நம்பிக்கையான நர்சுகளைத் தயாராக வைத்துக் கொள்ளுங்கள். ஓர் அவசர அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது. அனைத்தையும் இரகசியமாக வைத்துக் கொள்ளுங்கள்..."

தொலைபேசி தொடர்பு அறுந்தது. ரிசீவர் வைக்கப்படும் 'டக்'கென்ற சப்தம் கேட்டது. "என்னடா இது?" என்று டாக்டர் வில்லியம் தலையை ஆட்டிக்கொண்டார். இரவு உடையைக் களைந்து விட்டு வேறு உடை அணிந்து கொண்டு கராஜுக்குள் சென்று தனது பென்ஸை எடுத்தார்.

அது பறந்தது.

ஐந்தே வினாடிகளில் நியூமூன் வாசலில் பென்ஸ் வந்து நின்றது.

பரபரப்புடன் உள்ளே நுழைந்தார். டியூட்டி ரோஸ்ட்டரை எடுத்தார். கண்களை ஓட்டினார்.

அமுரா, ஜீனா, ரோசி மேரி இவர்கள் யாரையும் காண[illegible]ம. ஹோஸ்டலில் தங்கியிருக்கும் [illegible]பர்கள் மீதுதான் டாக்டர் வில்லியம் ஸுக்கு நம்பிக்கை அதிகம். அவர்கள் கெட்டிக்காரிகள் மட்டுமல்லர், நம்பிக்கையுமானவர்கள், இரகசியங்களை காப்பாற்றுபவர்கள், விசுவாசமானவர்கள் என்று அவர் தீர்மானித்துவிட்டிருந்தார்.

வேகமாகத் தன் அறைக்குச் சென்றார்.

"ஹலோ அமுரா!"

கோல் பறந்தது.

"ஹலோ ஜீனா!" கோல் பறந்தது.

"ஓர் அவசர சிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது. நீங்கள்தான் எனக்கு வேண்டும். உடனே புறப்பட்டு வாருங்கள். பெரிய புள்ளிதான் ஏற்பாடு செய்திருக்கிறார். விசேட அலவென்ஸ் எடுத்து தருகிறேன்..."

அமுராவும், ஜீனாவும் கோல் கிடைத்த போது எங்கோ ஒரு ரெஸ்டோரண்டில் தமது காதலர்களுடன் இரவு போஜனத்தில் இருந்தார்கள். இருவரும் வெவ்வேறு இடங்களில் இருந்தார்கள். அழைப்புகளும் தனித்தனியாகவே கிடைத்தன. அமுரா முன்னரே வைத்தியசாலையை அடைந்துவிட்டாள்.

அமுரா எப்பொழுதும் இப்படித்தான். அவசர சிகிச்சை என்றால், என்ன வேலை இருந்தாலும் அப்படி அப்படியே போட்டுவிட்டு முதல் ஆளாகப் பறந்துபோய் நின்று விடுவாள்.

இன்றும் அப்படித்தான்.

டாக்டர் வில்லியம் கண்களை மூடி, அயரத் தூக்கத்தில் யோசனையுடன் இலயித்துக் கிடக்கிறார்.

அமுரா வாசலில் நடமாடிக் கொண்டிருக்கிறாள். ஜீனாவும் வந்து சேர்ந்துவிட்டாள்.


அமுராவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஜீனாவை அவள் விரும்பினாள். அவளுடன் வேலைசெய்வது சந்தோஷமாகவிருக்கும். ரோஷியை அவள் விரும்பவில்லை. அவள் பொல்லாதவள் என்பது அவள் எண்ணம். என்றாலும் என்ன, அனைவரும் ஒரே விடுதியில் வாழ்ந்துவருகின்ற நண்பிகள்தான். ரோஷியை அழைத்திருப்பதாக டாக்டர் வில்லியம் சொன்னார். அவள் வருவாளோ இல்லையோ, சனியன் வராமல் விட்டாள் பரவாயில்லை என்று அவள் மனம் புறுபுறுத்துக்கொண்டது.

ஜீனா வந்துவிட்டாள்.

அமுரா ஆவலோடு ஓடிப்போய் அவள் கைகளைப் பிடித்துக்கொண்டாள். இருவரும் பரபரப்புடன் டாக்டரின் அறை நோக்கி விரைந்து செல்வதற்குத் தயாரானபோது -

அம்புலன்ஸ் வண்டியொன்று அலறிக் கொண்டு வரும் சத்தம் கேட்கிறது. கொஞ்சம் தொலைவில் கேட்ட அந்தச் சப்தம் மிக விரைவாகவே நியூமூன் வைத்திய மனையின் அருகில் கேட்டது.

அம்புலன்ஸ் உள்ளே நுழைந்து வாசலில் சரேலென பிரேக்கடித்து நின்றது. அதைத் தொடர்ந்து பொலிஸ் வாகனமொன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் வேகமாக வந்துநின்றன.




டாக்டர் வில்லியம்ஸுக்கு செய்தி பறந்துவிட்டது. அரைத்தூக்கத்தில் கிடந்த மனிதன் விழுந்தடித்துக்கொண்டு ஓடிவந்தார்.

கட்டளைகள் பறந்தன. ஸ்ரெச்சர்கள் பறந்தன. அம்புலன்ஸிலிருந்து இரத்தம் ஒழுக ஒழுக சில பொலிஸ்காரர்கள் இறங்கினார்கள். அவர்கள் ஸ்ரெச்சரில் கிடத்தப்பட்டார்கள். அவைகள் பாட்டரிலின் சிகிச்சை அறைகளை நோக்கிப் பறந்தன. பொலிஸ் வாகனத்திலிருந்து றோபோ இறக்கப்பட்டான். அவன் உடல் முழுவதும் இரத்தத்தில் தோய்ந்து கிடந்த போதும் அவனைச் சங்கிலியால் பிணைத்திருந்தார்கள். நாலு பொலிஸ்காரர்கள் ஆளுக்கொரு பக்கமாக இழுத்துப் பிடித்தவண்ணம் அவனைமுன்னால் நகரச்செய்து கொண்டு நடந்து வந்தார்கள்.




ஓர் இருண்ட நிழலைப்போல நகர்ந்துவந்த ஆஜானுபாகுவான அந்த நீக்ரோவை ஸ்ரெச்சரில் கிடத்திய போது அவன் அமைதியாகவே சாய்ந்துகொண்டான். புயலடித்ததன் பின்னர் எப்படி ஓர் அமைதி நிலவுமோ அதுபோன்ற அமைதியுடன் அவன் காணப்பட்டான்.

ஏதோ அதிபயங்கரமாக இடம்பெற்றிருக்கிறது. நாலைந்து பொலிஸ்காரர்கள் மோசமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். சிரசுகள் திருகப்பட்டு, கைகால்கள் முறிவுகொண்டு அறுந்த வாழையாக அவை தொங்கிக் கொண்டிருக்க, முகங்களிலும், நாசிகளிலும், செவிகளிலிருந்து இரத்தம் ஒழுக அவர்கள் தளர்ந்து காணப்பட்டார்கள்.

றோபோவுக்கும் அவர்களுக்குமிடையில் கடும் சண்டை நடந்திருக்கிறது. அவனுடைய அதிரடியான மின்னல் தாக்குதல்களில் அவர்களில் சிலர் சிதைந்து நிலைகுலைந்து போயிருக்கிறார்கள்.

றோபோவின் ஸ்ரெச்சர் தனியானதொரு சத்திர சிகிச்சை அறைக்கு கொண்டு போகப்பட்டது.

அவன் கண்களை மூடிக்கிடந்தான். தூங்குகிறானா அல்லது மயக்கநிலையில் இருக்கிறானா என்று அறியமுடியவில்லை. கால்களிலிருந்து பெருமளவில் இரத்தம் வெளியேறிக்கொண்டிருக்கின்றது. முகம் முழுவதும் இரத்தத்தால் தெப்பமாகிக் கிடக்கிறது.

துப்பாக்கிச் சன்னங்கள் கால்களில் ஊடுருவிக் கிடக்க, சதைக்கோலமும், இறுக்கமும் வலிமையுமான உடலைப் புண்ணாகும் வரை நையப்புடைத்திருக்கிறார்கள். கட்டைகளாலும் இரும்புக் கம்பியினாலும் தாக்கியிருக்கக் கூடும். உடலெங்கும் இரத்தக்கசிவு.

கிளின்டன் பரபரப்புடன் வந்தான். டாக்டர் வில்லியமுடன் கைகுலுக்கினான். இருவரும் அறைக்குள் சென்றார்கள்.

எவருடைய செவிகளிலும் விழாதவண்ணம் கிளின்டன் மெதுவான குரலில் பேசினான். அவன் பேசி முடிந்ததும் அவன் சொல்வதைக் கேட்டு 'ஆ'வென வாய் பிளந்துகொண்டிருந்த வில்லியம் 'பிரச்சினையாகி விடாதா?' என்று பயத்துடன் கிசுகிசுத்தான்.

"இல்லை ஆளை முடித்துவிட்டால்தான் பிரச்சினை உண்டாகும். அவன் என் புளோராவை கொலைசெய்திருக்கிறான். நீதிமன்றம் அவனுக்கு மரணதண்டனை கொடுத்துவிடும். அதனால் நான் சொல்வதுபடி செய்வதுதான் நல்லது. அவன் பலவீனமானவனாகி விடுவான். அப்படியே செய். ஏனென்றால் அவன் மீது வேறு கேசுக்கள் இருக்கின்றன. அதற்காக அவனை நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும்." டாக்டர் வில்லியம் எழுந்து அங்குமிங்கும் நடைபோட்டார். கண்களை மூடினார்; திறந்தார். தலைக்கேசத்தை வருடிக்கொண்டார். 'என்னவோ ஏதோ கஷ்டத்தில் விழத்தான் போகிறேன்' என்று மனம் படபடக்கிறது.

"நல்லது! நல்ல யோசனை!" என்ற வார்த்தைகள் சிலநாழிகைகளின் கரைசலில் டாக்டரின் நாவிலிருந்து புறப்பட்டன.

"குட். டு இட் நைஸ்லி"

கிளின்டன் பாராட்டினான்.

அமுராவையும் ஜீனாவையும் அறைக்குள் அழைத்த டாக்டர் வில்லியம் இருநீண்ட ஊசிகளை இருவரிடமும் கொடுத்து றோபோவிற்கு 'இன்ஜெக்ட்' பண்ணும்படியாகச் சொன்னார். றோபோவின் அறையை நோக்கி இருவரும் சென்றார்கள்.

அறைக்கதவைத் திறந்த அமுரா உள்ளே எட்டிப்பார்த்தாள்.

றோபோ-தனியாகக் கட்டிலில் கிடந்தான். அவனுடைய உடலில் தெப்பமாகிவிட்டிருந்த இரத்தம் முழுமையாகத் துடைக்கப்பட்டிருந்தது. இடுப்பின்மீது மட்டும் சிறுதுணித் துண்டு கிடந்தது. அவ்வளவுதான்.

இருவரும் உள்ளே போனார்கள். அருகில் வந்து நின்றார்கள்.

அமுரா குனிந்து அவன் முகத்தைப் பார்த்தாள்.

அப்போது -

சட்டென அவனுடைய கண்ணிமைகள் திறந்தன.

'எனக்கு மருந்துகட்ட வந்திருக்கிறாயா நன்றி பெண்ணே நன்றி!' என்பது போன்று அந்தக் கண்களில் கருணை மிதந்தது. பின்னர் மூடிக்கொண்டன. அவை மூடிக்கொண்டதும் அமுரா இன்ஜெக்சனை உடலில் பாய்ச்சினாள். ஜீனா இடுப்புத் துணியை அகற்றினாள். அவள் கண்களில் திகில் குடிகொண்டது.

(தொடரும்)

# புலிவேட்டைக்குப் புறப்பட்டோர் புகைந்து போன வரலாறு!

பழ. நெடுமாறன்
(தலைவர், தமிழ்த் தேசிய இயக்கம்)

''விடுதலைப் புலிகளால் இனிமேல் மரபுவழி இராணுவமாக சண்டையிடமுடியாது. இராணுவத்தினர் நடத்தும் தொடர்ச்சியான தாக்குதல்களால் வலிமை குன்றிவிட்டார்கள். இனி அவர்களால் எதிர்த்துப்போராட இயலாது'' - என்று சிங்கள இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்திருக்கிறார்.



ரஞ்சன் விஜேயரத்தின

கடந்தகால வரலாறுகளை மறந்து சிங்கள இராணுவத் தளபதிகள் பலரும் இதைப்போல வாய்ச்சவடால்கள் அடிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் புளுகு களைத் தமிழர்கள் ஒருபோதும் நம்பப் போவதில்லை. உலக நாடுகளும் உண்மை களை அறிந்தே வைத்துள்ளன. எனவே, உலக நாடுகளையும் இவர்களால் ஏமாற்றமுடியாது. அவ்வப்போது இத்தகைய புனை கதைகளை அவர்கள் யாருக்காகக் கூறுகிறார்கள்? சிங்கள அப்பாவி மக்களை ஏமாற்றுவதற்காகத்தான் இத்தகைய பொய்யான தகவல்களை தொடர்ந்து கூறிவருகிறார்கள்.

ஏற்கனவே இராணுவ ரீதியில் வலிமை குன்றிப்போய்க் கிடக்கிறார்கள். பொருளாதார ரீதியில் நொறுங்கிப்போய் சிங்கள தேசம் கிடக்கிறது. இந்தச் சூழ்நிலையில் சிங்கள



கல்கத்.

மக்களை ஏமாற்றுவதற்காக இத்தகைய பொய்யுரைகளை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த காலத்திலும் இத்தகைய கட்டுக்கதை களை கூசாமல் சொன்னவர்கள் பலருண்டு.

1988 ஆம் ஆண்டில் இந்திய அமைதிப் படையின் தளபதியாக இருந்த கல்கத் வெறும் சவடால் பேர்வழியாக இருந்தார். இந்தியாவில் உள்ள வெத்துவேட்டு அரசியல்வாதிகளைப் போல அடிக்கடி புலிகள் குறித்துப் பொய்யான அறிக்கைகள் விட்டு சுயவிளம்பரப் போர் நடத்திக் கொண்டிருந்தார். தினமும் 20, 30 புலிகளைச் சுட்டுவீழ்த்தியதாகவும் புலிகளின் முகாம்களைத் தாக்கி அழித்து விட்டதாகவும் செய்திகளைப் பரப்பியபடி இருந்தார்.

இடைஇடையே சென்னைக்கு வருகை தந்து ஐந்து நட்சத்திர உணவு விடுதி ஒன்றில் பத்திரிகையாளர்களுக்கு ஆடம்பரமான விருந் தளிப்பார். இந்த விருந்தில் தளபதி கல்கத் தனது வீரதீர பராக்கிரம செயல்களை விவரிப் பார். இச் செய்திகளை முக்கியத்துவம் கொடுத்து வெளியிடும் பத்திரிகையாளர்கள் தனியே சிறப்பாகக் கவனிக்கப்பட்டனர்.

சென்னையில் ஒருமுறை இவர் நடத்திய செய்தியாளர்கள் கூட்டத்தில் அவிழ்த்து விட்ட புளுகுகளைக் கேட்டுக் கேட்டுக் காதுகள் புளித்துப்போன செய்தியாளர் ஒருவர். ''எல்லாம் சரி, நீங்கள் இதுவரை சுட்டுவீழ்த்திய தாகக் கூறப்படும் புலிகளின் எண்ணிக்கை யைக் கூட்டினால் பல ஆயிரம் வருகிறது. புலிகளிடமிருந்து நீங்கள் கைப்பற்றியதாகக் கூறப்படும் ஆயுதங்களின் எண்ணிக்கை சிங்கள இராணுவத்தினரிடம் உள்ள ஆயுதங் களைவிட அதிகமாக இருக்கும் போல் தெரிகிறதே'' என்று கேட்டபோது அனைவரும் சிரித்தனர்.

ஒருமுறை தளபதி கல்கத் ''பிரபாகரன் இருக்கும் இடத்தை இந்தியப் படை சுற்றி வளைத்துவிட்டது. இனி அவர் தப்பமுடியாது. எல்லா வழிகளையும் அடைத்துவிட்டோம். விரைவில் உயிருடன் அல்லது பிணமாக அவர் பிடிபடுவார்.'' என அறிவித்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

இப்படித் தொடர்ந்து பொய் பிரசாரம் செய்யும் தளபதி கல்கத்திற்கு ஒரு பாடம் கற்பிக்க பிரபாகரன் விரும்பினார். அதற்கான திட்டத்தையும் தீட்டினார். முல்லைத்தீவில் உள்ள ஒரு காட்டிற்கு அருகில்தான் தளபதி கல்கத்தின் முகாம் அமைந்திருந்தது. ஒரு நாள் காலைப் பொழுதில் தனது கூடாரத் திலிருந்து தூங்கி எழுந்து தளபதி கல்கத் வெளியே வந்து நாற்காலியில் அமர்ந்தார். அவருக்கு இராணுவ வீரர்கள் தேநீர் கொண்டு வந்து கொடுத்தனர். ருசித்து அருந்திக் கொண்டிருந்தார்.

சற்றுத் தொலைவில் இரண்டு உலங்கு வானூர்திகள் தயாராக நின்று கொண்டிருந்தன. ஆங்காங்கே படை வீரர்கள் காவலுக்கு நின்றிருந்தனர்.

அந்த வேளையில் அவர் கண்ணுக்கு எதிரில் சில நூறடிகளுக்கு அப்பால் புலிகள் சிலர் திடீரென்று தோன்றி தரையில் மண்டியிட்டு ஏவுகணைகளை ஏவினர். கண்மூடித் திறப்ப தற்குள் இந்திய இராணுவ உலங்கு வானூர்தி கள் இரண்டும் தூள் தூளாயின. பயந்து நடுங்கிய தளபதி கல்கத் தாவிக்குதித்து அருகில் இருந்த பதுங்கு குழிக்குள் பாய்ந்தார். அவரது காவலுக்கு நின்ற வீரர்களும் எதிர் பாராத இந்தத் தாக்குதல்களால் நிலைகுலைந்து சிதறி ஓடினர்.

கண்மூடித் திறப்பதற்குள் இந் நிகழ்ச்சி நடந்து முடிந்துவிட்டது. புலிகள் நிதானமாக நடந்து மீண்டும் காட்டுக்குள்ளே புகுந்து மாயமாக மறைந்து போனார்கள். இவ்வளவு நெருங்கி வந்து ஏவுகணையை ஏவியவர்கள் நினைத்திருந்தால் தன்னையே எளிதாக ஒழித்திருக்க முடியும். ஆனால், அவர்கள் அவ் வாறு செய்யாததை எண்ணி எண்ணி தளபதி கல்கத்தின் உடம்பு நடுங்கிற்று. அன்றுடன் அவ ரது ஆணவப் பேச்சு மறைந்தது. புலிகளைப் பற்றி அவதூறு செய்வதை அவர் நிறுத்தினார்.

இலங்கையின் குடியரசுத் தலைவராகப் பிரேமதாஸ இருந்தபோது அவருக்கு அடுத்தபடி யாக செல்வாக்கு மிக்க பாதுகாப்புத்துறை இணையமைச்சராக ரஞ்சன் விஜயரத்தின என்பவர் இருந்தார். சிங்களப் பேரினவாத வெறி பிடித்த அவர் தமிழர்களை அடியோடு கருவறுக்க உறுதிபூண்டிருந்தார்.

''புலிகளை அடியோடு அழிப்பதே எனது இலட்சியமாகும். அவர்கள் உயிர் தப்பவேண்டுமானால் எவ்வித நிபந்தனையுமின்றி ஆயுதங் களைக் கீழே போட்டுவிட்டு சரணடையவேண்டும். இல்லையேல் புலிகள் அழிந்து ஒழிக்கப்படுவது நிச்சயம்'' என ரஞ்சன் விஜயரத்தின 4-12-90 அன்று கொக்கரித்தார்.

ஆனால், 2-3-91 அன்று கொழும்பு நகரின் வீதியில் காலை 8.30 மணிக்கு தனது பாதுகாப்பு பரிவாரங்கள் புடைசூழ அவர் சென்றுகொண்டிருந்தார். அதேவீதியில் ஒருபுறத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் இருந்து சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது. அமைச்சரின் கார் சுக்குநூறாகச் சிதறியது. அமைச்சரும் அவரின் பாதுகாவலர்களும் அடையாளம் தெரியாமல் சிதறிப்போனார்கள்.

தமிழீழப் பகுதியில் புகுந்து தமிழர்களைக் கொன்று குவித்தும் அழிவு வேலைகளைச் செய்தும் வந்த சிங்கள இராணுவத்தின் முக்கிய தளபதிகள் ஒட்டு மொத்தமாக புலிகளால் அழிக்கப்பட்ட நிகழ்ச்சி சிங்கள அரசையும் மக்களையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ஆம் நாள் யாழ்ப்பாணம் அராலிப் பகுதியில் சிங்களப் படையின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் துணிவுடன் ஊடுருவி புலிகள் புதைத்து வைத்த நிலக்கண்ணிவெடியில் சிக்கி சிங்கள இராணுவ உயர் அதிகாரிகள் ஏறிவந்த வாகனங்கள் வெடித்துச் சிதறின.

வடபிராந்திய ஆணைத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, வடபிராந்திய கடற்படைத் தளபதி கொமோடர் மொகான் ஜயமகா, யாழ்.பிராந்திய பிரிகேடியர் விஜய விமலரத்தின, லெப்டினன்ட் கேணல் ஆரியரத்தின, லெப்டினன்ட் கேணல் பலிப்பான, லெப்டினன்ட் கேணல் ஸ்டீபன், மேஜர் அல்விஸ், கடற்படைத் தளபதி லெப்டினன்ட் லங்கதிலக, கடற்படை லெப்டினன்ட் விஜயபுர, படைச் சிப்பாய் விக்கிரமரத்தின ஆகியோர் அந்த இடத்திலேயே உடல் சிதறி மாண்டனர்.

சிங்கள இராணுவம் புலிகளுடன் போர்தொடங்கிய பிறகு உயர் இராணுவ அதிகாரிகள் பலர் ஒரே நேரத்தில் கொல்லப்பட்டது இந்நிகழ்ச்சியிலேயே ஆகும்.

சிங்கள முப்படைத் தளபதிகளில் ஒருவரும் கடற்படையின் தளபதியுமான வைஸ்அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ பிரிட்டனில் பயிற்சி பெற்றவர். இந்தியக் கடற்படைத் தளபதிகளுடன் பேச்சு நடத்தி அவர்கள் உதவியுடன் சிங்களக் கடற்படையின் வலிமையைப் பெருக்கியவர். விடுதலைப் புலிகளுக்கு கடல்வழியாக வரும் ஆயுதங்களைத் தடுக்க இருநாட்டுக் கடற்படையின் கூட்டு நடவடிக்கைகளுக்கு வழிவகுத்தவர். 16-11-1992ஆம் ஆண்டு காலை 8.30 மணிக்கு கிளான்ஸி பெர்னாண்டோ தனது அலுவலகத்திற்கு காரில் சென்று கொண்டிருந்தார். அவரது பாதுகாப்பு வளையத்தையும் தாண்டி மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த இளைஞன் ஒருவன் அவர் காரின் மீது மோதினான். கண்மூடித்திறப்பதற்குள் காரும் காருக்குள் இருந்த தளபதியும் உடல் வெடித்துச் சிதறினார்கள். கொழும்பில் குண்டுத் தாக்குதல்கள் நடைபெறாமல் தடுக்க சகல பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்து 4 நாட்களுக்குள் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு தொடர்ந்து புலிகளை வேட்டையாடப் புறப்பட்ட பல தளபதிகள் புகையோடு புகையாக மறைந்து போனார்கள் என்பதைத்தான் கடந்த கால வரலாறு எடுத்துக்காட்டுகின்றன. புலிகளின் வலிமையை அழித்துவிட்டதாக மார்தட்டும் சரத் பொன்சேகா இரண்டாண்டுகளுக்கு முன் புலிகளின் தாக்குதலிலிருந்து படுகாயங்களுடன் தப்பிப்பிழைத்தவர். பலமாதங்கள் மருத்துவமனையில் படுத்த படுக்கையாகக் கிடந்தவர். ஆனால், இப்போது வாய்ச் சவடால் பேசுகிறார்.

சிங்கள அரசு போர்நிறுத்த உடன் படிக்கையில் இருந்து ஒருதலைப்பட்சமாக முறித்துக்கொண்டு வெளியேறிய போதும் இதுவரை போர் நிறுத்தத்தில் இருந்து விலகுவதாக விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவிக்கவில்லை. எனவே, சிங்கள இராணுவத்தினர் மீது மரபுவழியிலான தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொள்ளவும் இல்லை. உலக நாடுகளுக்கு இந்த உண்மை நன்கு தெரியும்.

2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் இருந்து சிங்கள இராணுவம் புலிகளுக்கு எதிரான போரைத் தொடங்கியபோது அதற்கு



கிளான்ஸி பெர்னாண்டோ

எதிராக வழிமறிப்புத் தாக்குதல்களையும் தற்காப்பு இராணுவ நடவடிக்கைகளையுமே புலிகள் மேற்கொண்டு வருகிறார்கள். விடுதலைப்புலிகளின் தாக்குதல் சிறப்பு அணிகள் எவையும் இன்னும் களம் இறங்கவில்லை. முன்னணி காவல்



டென்சில் கொப்பேகடுவ

அரங்குகளில் உள்ள விடுதலைப் புலிகளே ஊடுருவ முயலும் சிங்கள இராணுவத்தினருக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளை முறியடித்து விரட்டி வருகிறார்கள். இந்த உண்மையை அடியோடு மறைத்துவிட்டு விடுதலைப் புலிகளால் இனிமேல் மரபுவழி இராணுவமாக சண்டையிட முடியாது எனவும் தனது இராணுவத்தினர் நடத்தும் தொடர்ச்சியான தாக்குதல்களால் புலிகள் தங்கள் வலிமையை இழந்துவிட்டார்கள் எனவும் சரத் பொன்சேகா பீற்றிக் கொள்வது நகைப்புக்குரியதாகும்.

தரை, வான், கடல் ஆகிய மும்முனைகளி லும் புலிகளின் படைகள் வலிமையாக இருந்து வருகின்றன. போர் நிறுத்த காலத்தில் பல புதிய அணிகளை புலிகள் உருவாக்கி உள்ளனர். தொடர்ந்தும் பல அணிகள் உருவாக்கப்பட்டும் வருகின்றன. முன்பு இருந்ததை விட தற்போது வலிமைமிக்க மரபு வழி இராணுவமாகப் புலிகள் உருவெடுத்துள்ளனர். அவர்கள் தமது முழு வலிமையுடன் இன்னும் களம் இறங்க வில்லை. தங்கள் மண்ணில் நுழைய முயலும் எதிரிகளை விரட்டியடிக்கும் வேலையை மட்டுமே செய்துவருகிறார்கள்.

இறுதிக்கட்டப் போருக்கு விடுதலைப் புலி கள் தயாராகி வருகிறார்கள் என்ற உண்மையை சிங்கள அரசும் இராணுவமும் நன்கு அறியும். எனவேதான் இந்தியாவின் உதவியை நாடி டில்லி நோக்கி சிங்கள அதிபர் ராஜபக்ஷ அடிக்கடி காவடி எடுக்கிறார். சிங்கள இராணுவம் சந்திக்கவிருக்கிற பெரும் தோல்வியை மறைப் பதற்கான முன்முயற்சியாகவே பொன்சேகா போன்றவர்கள் பொய்யான பரப்புரைகளைக் கூறிவருகிறார்கள். அப்பாவி சிங்கள மக்கள் வேண்டுமானால் ஏமாறக்கூடுமே தவிர, தமிழர் களும் உலக நாடுகளும் இக்கூற்றுகளைக் கண்டு ஏமாறப்போவதில்லை. ✱

# சிறு விளம்பரங்கள்

## திருமண சேவை

சுலபமான வாழ்கைத்துணைத் தெரிவுக்கு சுயதெரிவுமுறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திடத் திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் சுய தெரிவு முறைமுன்னோடி சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழுவேல் அமுதனிடம் தொடர்பு கொள்ளுக! தொலைபேசி: 2360488, 2360694, 4873929.

---

வெற்றிகரமான திருமண நிச்சியங்களாவன, பெற்றோர் தேர்ந்தெடுக்கின்ற திருமணப் பணிகளிலும் தங்கியிருக்கின்றன. யாழ்ப்பாணம் அருள்முருகன் திருமணப் பணியகத்தின் மன நீதிக்கு கட்டுப்படுகின்றதும், கமிஷன்களையே குறியாகக் கொண்டிராததும், தரம்மிகு திருமணங்களுக்கானதும், மணப்பெண்களும் நாடுமளவுக்கு பண்புகளுடையதும், அதிகளவு மணமக்களை ஈர்த்து வருகின்றதுமான சேவைகளைப் பயன்படுத்தி திருமணங்களை நிச்சயிக்கலாம். 0212229334.

---

இலவசமாக பதியவும் தொடர்பு கொள்ளவும் சுபமங்களம்.com.உலகெங்குமுள்ள 4,500 Hindu, Christian, Muslim மணமக்களின் பதிவுகளுள்ளன. 10,000 பேர் மாதந்தோறும் 24 நாடுகளிலிருந்து பார்வையிடுகின்றனர். நம்பிக்கைக்குரியது www.subamangalam.com.

## வீடு விற்பனைக்கு

வத்தளை.ஹெந்தளை.கெரவலப்பிட்டியவில் 5½ பேர்ச்சஸ் கொண்ட வீடு சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு.விலை ரூபா 26 இலட்சம் மட்டுமே. தொடர்பு கொள்ளவும். Tel : 060 2071252, 077 915 9365.

---

கண்டி, கட்டுஸ்தோட்டை சந்தை அருகில் 18 1/2 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்ட உகந்தது. தொடர்பு: 071 4145885.081 4933018.மற்றும் பேராதனை றோட்டில் காணிகளும் கடைகளும் உள்ளன.

---

சகல வசதிகளுடன் கூடிய 10 பேர்ச்சஸில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. செரண்டிப் உத்யானய, வெலிவிட்ட, கடுவெல. தொடர்பு: மாலை 7 மணிக்கு பின் 060 2838878,2414358.

---

ஹட்டன் பிரதேசத்தில் 15 பேர்ச்சஸ் காணி மற்றும் காணியுடன் வீட்டின் ஒரு பகுதியான சிறிது திருத்த வேலையுள்ள 02 அறைகளுடன் வீடும் விற்பனைக்குண்டு. (ரவி) Tel: 0515687797. நேரில் வரவும்.

---

குண்டசாலை பஜார் அண்மையில் 20 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு077 1555594,0777842604.

## தேவை

நம்பகமான திறமையுடைய கடினமாக உழைக்கும் நல்ல பெண் பிள்ளை / பெண்கள் வெளிநாட்டு அனுபவத்தோடு. வயது: 25-40. 105, கண்டி வீதி, தழகமை, களனிய. 0777 399799.

---

அனுபவமுள்ள அல்லது பயின்று கொள்ளக்கூடிய மேற்பார்வையாளர்கள் தேவை சாப்பாடு, தங்குமிடவசதி உண்டு சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். Sandeepani Home, No.103A, St. Mary's Road Uswatakeiyawa தொடர்பு 2941989.

---

கொட்டாஞ்சேனை ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு உதவிக் குருக்கள் தேவை. சம்பளம்பேசித் தீர்மானிக்கப்படும். தங்குமிட வசதிசெய்து தரப்படும். தொடர்புகளுக்கு 0777261777. 2431406 Fax : 2336033.

---

அனுபவமுடைய மேசன், பாரிரும் பிட்டிங்ஸ், டைல்ஸ் பதித்தல், வேபர்ஸ், தச்சு பாஸ் இலக்ரீசன் உடனடியாக வத்தளை வீட்டுவேலைக்கு தேவை. தங்குமிடவசதி உண்டு தொடர்பு: 2958830, 071 4142976.

---

பக்கவடிவமைப்பாளர்கள் தேவை. Page maker, Photoshop ஆகிய Packeges களில் அனுபவமுள்ள சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலமொழிகளில் நன்கு தட்டச்சு செய்யக்கூடிய பெண் ஒருவர் பேலியகொடையில் அமைந்துள்ள Communication ஒன்றிற்கு வேலைக்குத் தேவை சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். மேலதிக கற்கைகளுக்கு உதவிகள் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 0777 132021.

---

கொழும்பில் உள்ள ஜவுளிக் கடைக்கு விற்பனையாளர்கள் (ஆண்கள்) தேவை. சம்பளம் 9,000/-. அனுபவம் தேவையில்லை. பகல் உணவு கொடுக்கப்படும். தொடர்பு : 072 2930578.

---

சிறியகுடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைக்கும், புடவைகடைக்கும், பெண்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் கொடுக்கப்படும். தேவை ஏற்படின் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இல :011 2522004, 077 3170728, 077 6423396.என்ற இலக்கத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

---

புத்தக கடைக்கு Salesman தேவை. அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. அன்சார். 106, Armour Street,Colombo12. தொடர்பு : 077 3761049.

---

வருமான வரி கணக்குகள் தயாரிக்கும் அலுவலகத்திற்கு AAT முடித்த அனுபவமுள்ள பெண் தேவை. ஆங்கிலம், கணினி அறிவுமுக்கியம். உடன் தொடர்பு கொள்ளவும். 494918,4627209, 0777 226603.

---

AD சாரதி அனுமதிப்பத்திரமுள்ள O/L வரை கல்வி கற்றுள்ள தமிழ்,சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சியுள்ள எழுத, வாசிக்க ஆற்றலுடைய ஒருவர் தேவை. வயது 20 - 45. 0114611207, 0114610509, 0773635268. F.T. Point No. 305/2A, Ferguson Road, Colombo 15.

---

வத்தளை, மாபோலையில் அமைந்துள்ள பாமசி சான்றிதழ்பெற்றவர்கள் உடனடியாகத் தேவை. தொடர்பிற்கு : 072 4424015,011 4886911.

---

**வெற்றிடங்கள்** : 1. Data Entry Operator/Accounts Clerk. 2. Sales Assistants மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கொழும்பில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. உடன் விண்ணப்பிக்கவும். முகாமையாளர், **பூபாலசிங்கம் புத்தகசாலை**, 202, செட்டியார்தெரு, கொழும்பு - 11.

---

ஹட்டன் நகரில் உள்ள இன்டர்நெட் கபேக்கு தமிழ் டைப் செட்டிங், Photoshop தெரிந்தவர்கள் தேவை தொடர்புக்கு: 077 1724720.

---

பகுதிநேர தோட்டப் பராமரிப்பாளர்கள் தேவை. வாரத்தில் 2/3 நாட்கள். ஹெவ்லொக் வீதியை அண்மித்த பகுதியில் வேலைசெய்ய ஆள் தேவை. தொடர்புகளுக்கு : 2585715.

---

உடனடி வேலைவாய்ப்பு; திறமையாக அப்பம், கொத்து ரொட்டியோடக்கூடிய ஒருவர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். கிராமசேவகர் சான்றிதழ், தேசிய அடையாள அட்டையுடன் வரவும். க்றீன் பார்க் ஹோட்டல், மீப பாதுக்கை. 011 2859457.

---

திருகோணமலையில் விபத்துறும் வாகனங்களை பார்வையிட்டு மதிப்பீடு செய்ய Motor Mechanism கற்றுத் தேர்ந்த அனுபவம்மிக்கவர் தேவை. தகைமையுள்ளவர் உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு 0777 140130, 077 3284975.

---

வீட்டுவேலைக்கு ஊழியர் ஒருவர். உணவுச்சாலைக்கு பிரச்சினைகளற்ற ஒருவர் வயது 35 - 40 க்குமிடையே தேவை சம்பளம் 8,000/- 241, டையாட்ஸ் ரோட்வே கொழும்பு 14. Tel. 2441069.

## வாடகை

கணவன், மனைவி இருவருக்கும் அல்லது வேலைபார்க்கும் பெண்கள் இருவருக்கு மட்டும் சமையல், குளியல், ஹோல் வசதிகளுடன் அறை வாடகைக்கு உண்டு. தொடர்பிற்கு : 078 5187301.

---

மாத்தளை நகரத்திலிருந்து 9 கி.மீ. தூரத்தில் 28 ஏக்கர் காணி குத்தகைக்கு விடப்படும்.பாக்கு.மிளகு.இறப்பர்.தேங்காய் உட்பட பல பயிர்கள் கூடிய கேள்விக்குத்தகைக்கு வழங்கப்படும். தொடர்பு : 077 3694554, 081 2229306. (After 6 pm)

---

ஏனமுல்ல கேம்ப், மாதம்பிட்டிய, கொழும்பு 15 இல் வாடகைக்கு 1 Hall, 1 Room, Kitchen, Bathroom, Toilet, மாத வாடகை 5,000/- 2வருட முற்பணம் தேவை. பாதையோர வீடு தேவையானவர்கள் தொடர்புகொள்ளவும்.071 5706852 உடன் குடிபுகலாம்.

---

Luxury House with 3 Bedrooms Fitted with A/C and 3 Toilets with hot water facility, Large front Garden with Space for 3 Cars Parking and with remote Control Gate, Kitchen fitted with pantry cupboard for rent in Aurburn Garden No. 42, Station Road in Wattala. Contact: 2331005.

---

அரச நிறுவனம் ஒன்றில் தொழில் புரியும் ஒருவருக்கு முற்பணமற்ற தங்குமிட வசதி தேவை. (கொழும்பு) தொடர்பு : 077 3575001.

---

கொழும்பு 10, மாளிகாவத்தையில் Alba சந்திக்கருகாமையில் இரண்டு Bedroom களுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 011 2683315, 077 3735178,077 296 60 55.

---

வத்தளை, ஹெந்தளை, திம்பிரிகஸ்யாய வீதியில் பேசுர் ஒருவருக்கு சொந்தமான அறையொன்று வாடகைக்குண்டு. வயதான பெண்கள் அல்லது வேலைசெய்யும் தம்பதியினர் தொடர்புகொள்ளவும். தொடர்பு: 5756484.

---

இரண்டு அறைகளைக் கொண்ட மாடிவீடு வாடகைக்கு உண்டு. தொடர்புக்கு : 0777 707691. 011 4202986.

---

மட்டக்களப்பு நகரின் மத்தியில் திருமலை வீதியில் 3 அறைகள் சகல வசதிகளுடன் வீடுவாடகைக்கு/அலுவலக பாவனைக்கு 2 வருடகுத்தகைக்கு உண்டு. 0115010 516.

---

வத்தளையில் Annex வாடகைக்கு உண்டு. மாதாந்த வாடகை ரூ. 6,500/-. ஒரு வருட முற்பணம். 0114994579.

---

வீடு வாடகைக்கு 37/12. புதிய கனனி பாலம் வீதி. தரிந்து மாவத்தை, இங்குறு கடை சந்தி, கொழும்பு - 14. விபரங்களுக்கு :071 3331002. 011 2473249.

---

கொழும்பு 15இல் வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு. ரொட்ரிக்கோ பிளேஸ், மட்டக்குளியில். தொடர்பு : 2699633.

---

Office Space available for Rent at Fort. Attractive & modern office space available in Colombo Fort, opposite WTC 1,000 sq., ft, with Basement car park, tiled floor, two elevators, modren sanitary & 24 hours security. # 33 Level, 1. Canal Row, Colombo - 01. Deva - 071 4245155.

---

அறைகள் இரண்டு, Verandah, Hall அடங்கிய Tiles பதித்த வீடு (Highlevel Roadக்கு அருகில்) வாடகைக்காக. தொடர்புகளுக்கு : No 35, கஜபா வீதி (Robert Gunewardene Road), கிருலப்பனை. 077 347 8215.

---

கிருலப்பனை அவனியு (Walk Rte அருகாமையில்) சோமாதேவி பிளேசில். கொழும்பு 05. அமைதியான இடத்தில் 22 ஆடம் இல வீடு வாடகைக்கு விடப்படும். இருக்கை அறை 3 படுக்கை அறைகள், Hall, Kitchen, 2 Toilet, Car Parking வசதி உண்டு தொடர்பு: 2513990.

## கல்வி

English Classes for local London Syllabus from Gr 6 - A/L வரை ஆங்கில வகுப்புக்கள் நடைபெறும். வீடுகளுக்கும் வந்து கற்றுத்தரப்படும். Tel : 2730116, 077 97 35549.

---

பௌதீகவியல் ( Physics ) கொழும்பு பிரபல கல்லூரி யாழ் ஆசிரியரினால் A/L 2009/2010 மாணவர்களுக்கு பிரத்தியேக/ குழு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 078 6504781,077 2075322, 2150 422.

---

சற்றேனும் ஆங்கிலம் பேசமுடியாதோருக்கும் Spoken English இலகுமுறையில் நன்கு விளக்கத்துடன் வீடுவந்து கற்பிக்கப்படும். தொடர்பு : 071 680 0531.

---

யாழ். அனுபமிக்க ஆசிரியரால் கொழும்பு வத்தளை பிரதேசங்களில் தரம் 5 -11 வரையான தமிழ்மொழி மூலம் கணிதம், விஞ்ஞானம் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்புகட்கு: 077 3971663.

---

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியரினால் தனி வகுப்புக்கள் தரம் 6,7,8,9,10 மற்றும் 11இற்கான விஞ்ஞானம்,கணிதம் ஆகிய பாடங்கள் வீடுவந்து கற்பிக்கப்படும். விபரங்களுக்கு: 63/7. Temple Lane,Kalubowila. 071 5776956, 2764 327,49 541-

---

Grade 10,11,A/L மாணவர்களுக்கு London & Local Maths, Physics அனுபவமிக்க ஆசிரியரால் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். ( Rasonable Rates ) T. Kannan - 077 9988578.

---

ஜேர்மன் மொழி தனித்து கவனம் எடுத்து கற்பிக்கப்படும். பிரபாகரன். 078 6012004,4951652.

---

ஆண்டு 1 -O/L வரையான Tamil & English Medium வகுப்புகள்,வீட்டிற்கு வந்து எல்லாப் பாடங்களும், Sinhala வகுப்புகளும் கற்றுத்தரப்படும். தொடர்பு : Barathee Institute. Tel : 077 3929175, 077 1879112.

---

யாழ்.பிரபல B.Sc, பட்டதாரி ஆசிரியரினால் தரம் 6 - O/L கணிதம் A/L 2009, 2010, இணைந்த கணிதம், கணினிக் கல்வி வகுப்புக்கள் வீடு வந்து தனியாகவோ குழுவாகவோ சிறந்த விளக்கத்துடன் கற்பிக்கப்படும். தொலைபேசி 077 1632556.

---

யாழ். இந்துக்கல்லூரியில் முன்பு கற்பித்தவரும், தற்பொழுது கொழும்பில் கற்பிப்பவருமாகிய பௌதீகவியல் ஆசிரியரினால் G.C.E. A/L, 2009,2010 Batchஇற்கு Physicsஉம் Grade 7 - 10இற்கு Mathematics (Tamil / English) இல் தனி/குழுவாக வீடு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு :077 5342191,011 2362359.

## சேவை

வீட்டு வேலை, சமையல் வேலை, குழந்தைகள் பராமரிப்பாளர்கள், நோயாளர் பாரமரிப்பாளர், ஹவுஸ் ரூம் போய்ஸ், உணவக வெயிட்டர்கள், சாரதி, தையல் வேலை, காவல் வேலை, தோட்ட வேலை, தொழிலாளி ஆகிய வேலைகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய இடம் ஸ்ரீ சுபசெத, 27, இரண்டாவது மாடி, மத்திய பஸ் தரிப்பிடம், பதுளை. தொடர்பு : 055 5734119.

---

கொழும்பில் வெளிநாடுகளுக்கு பொதிகள், ஆவணங்கள் என்பவற்றை உங்கள் வீட்டில் வந்து சேகரிக்கப்பட்டு நான்கு வேலை நாட்களில் பாதுகாப்பாக உரியவரின் வீட்டில் ஒப்படைக்கப்படும். Kokul Lanka : 011 5750557,077 1607628, 0785526236

---

குறைந்த விலையில் Art working, Type setting, Book setting, Album Designing வேலைகள் செய்து தரப்படும். தேவைப்படின் பத்திரிகை வடிவமைப்பும் செய்யலாம் தொடர்பு: 077 3644566.

---

www.bbsnetting.com. இல் Visitor, முடிவுகள் அடுத்த கொத்து Student, Worker Visa, DV Lottery Scholarship, JOB Bank, Free Online Education மும்மொழிகளிலும் Typesetting செய்து CDயில் தரப்படும். தொடர்புக்கு:0777 680 368.

---

Canada அல்லது UKஇல் குடியேற விரும்புகிறீர்களா? எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். நிபுணத்துவமிக்கவர்களின் நம்பிக்கைமிக்க சேவை. RF General & Sports Placement (Pvt) Ltd. No.46 1/1, Castle Street, Colombo 08. Tel : 011 4710686. Email : rfasialimited@ yahoo. com.

---

Home Nursing Service முதியவர்களையோ நோயாளிகளையோ தங்களுடைய வீட்டில் வைத்து பராமரிப்பதற்கு பயிற்சி பெற்ற தாதியர் சேவை டாக்டரினால் நடத்தப்படுகின்றது. சேவைதேவைப்படின் தொடர்பு : 071 5640013.

---

Gloss மற்றும் Matt லெமினெசன் தரமாகவும் துரிதமாகவும் செய்து தரப்படும். Sunshine Lamination, 140, New Moor Street, Colombo 12. Tel : 0777 576342, 011 2386589.

## வைத்தியம்

நடக்க, இருக்க, மடிக்கமுடியாமல் முழங்கால், குதி, தொடை, பாதம், விரல்கள், முள்ளந்தண்டு, தோள், இடுப்பு, கழுத்து போன்ற உறுப்புக்களில் நோ, வலி, குத்து, வேதனை எவ்வளவு நாட்பட்டதாக இருந்தாலும் ஆப்ரேஷன் தேவையில்லை. மூககடைப்பு, தும்மல், நெஞ்சுச்சளி, இருமல், வாசிக்கும்போது கீ கீ என்று சத்தம், ஆஸ்துமா இவை அனைத்துக்கும் சிறப்பான மூலிகை மருந்து சிகிச்சை பக்கவிளைவு எதுவும் இல்லை. குறைந்த பத்தியம். சித்த வைத்தியர் Dr.R. Sivagurunathan. Tel:0777 301669 011 7910679. Email : vaithiyar@hotmail.com

---

அற்புத வைத்தியம் " இஸ்முல் அஃளம்" எனும் இறையருள் கடாட்சம். 21 நாட்களுள் தீராத நோய்களுக்கும் சுகம். சூனியங்கள், ஜினைஷைத்தான், கண்ணூறு, மனநோய், பைத்தியம், தலைவலி, உடல்வலிகள், வாத நோய்கள், கொலஸ்ட்ரோல், ஆஸ்த்மா, குடற்புண், வியாபாரம், தொழில்துறை முன்னேற்றம், பொருளாதார செழிப்பும், கறாமத் நிறைந்த இந்த "இஸ்முல் அஃளம்" இறையருளால் 100% ஆண்மை சக்தி பெற அதிவீசஷ்டி தாது புஷ்டி குங்குமப்பூ இலேகியம், 60 நாட்களுக்குரிய ஒளஷதம் 5,000/- மட்டுமே. இஷ்ஷெய்குல ஹிக்மத் S.M.N. மௌலானா ஹள்றமி ஷாதுலி, அரேபிய ஆன்மீக வைத்திய நிலையம். பதிவு இல. WB 1745, No. 201, முதலாம் மாடி, ஸ்ரீ சந்தரம் மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு - 10. 071 4952309, 011 2689870. (Opex Agro (Pvt) Ltd. இற்கு அருகாமையில் )

## பழுது பார்த்தல்

பழுதுபார்த்தல் உங்கள் வீடுகளிலேயே A/C's, Fridges, Washing Machines, TV, Microwave Ovens, Four Burner Cookers. உத்தரவாதத்தோடு வீடுகளை தரிசிக்கும். கட்டணங்கள் இல்லை. சேர்லி ஏரபட் 2625628, 072 2801664.

---

TV, Hifi set, Fan, Microwave, Electronic Oven, Washing Machine என்பவற்றை உங்கள் வீடுகளிற்கு வந்து உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு : ஜே.அருண் - 077 4455882.

---

TV, Projection TV, Plasma LCD, CD Setup, Grinder, Fan, Washing Machine, Antenna, Satellite (45 Channels), House Wiring என்பன வீட்டிற்கு வந்து உத்தரவாதத்துடன் செய்து தரப்படும். தொடர்பு 077 9498917,077 4050617.

---

computer, Monitor, Printer Repairs Service, Maintance & Upgrading Net 2 Phone, Network, Software Installation ஆகியன நுங்கள் இடத்திற்கு வந்து செய்துதரப்படும். தொடர்புக்கு: 071 444 8855.

---


கேஸ் (Gas) அடுப்பு, மிக்ஸி, கிரைண்டர் (Grinder) பிரஷர் குக்கர் (Pressure Cooker) மண்ணெண்ணெய் அடுப்பு போன்ற உங்கள் சமையலறைப் பொருட்கள் உடன் பழுதுபார்த்து கொடுக்கப்படும் தொடர்புகளுக்கு: 060 2077454, 072 4694279.

# பித்தன் பதில்கள்



எம்.முக்தர்,
அக்குறணை.

**கேள்வி:** கஷ்டப்படாமல் ஊர், உலகை ஏமாற்றி வாழ்பவர்கள் குறித்து உங்கள் கருத்து என்னவோ பித்தரே...?



**பதில்:** அரசியல்வாதிகள் குறித்து உமக்கேன் இவ்வளவு அக்கறை முக்தரே...!

ப.தனபாலன்,
கைதடி.

**கேள்வி:** பசுவை வணங்கும் இந்துக்கள் அந்த இறைச்சி சேர்த்த கொத்து றொட்டியைப் சாப்பிடுகின்றார்களே...! இது அடுக்குமா?



**பதில்:** பசி வந்திடப் பசுவும் போகும் வயிற்றுக்குள்...!

சிவாஜி,
மட்டக்குளி.

**கேள்வி:** பெண்ணுக்கும் பேய்க்கும் என்ன ஒற்றுமை? என்ன வேற்றுமை?

**பதில்:** 'பெண் என்றால் பேயும் இரங்கும்'. பேய் என்றால் பெண்ணும் நடுங்குவாள் - இது வேற்றுமை.



இரண்டிடமும் மாட்டிக் கொண்டால் மீட்சியே இல்லை - இது ஒற்றுமை.

குமார்,
மடுல்சீமை.

**கேள்வி:** பொம்மையையும் 'பாவை' என்கிறார்கள்; பெண்களையும் 'பாவை' என்கிறார்களே ஏன்?

**பதில்:** அப்படிக் குறிப்பிட்டாலாவது பாவை போல அமைதி பேணுவார்கள் என்ற நப்பாசையில் தான்!



டிலான்,
கண்டி.

**கேள்வி:** 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்கிறார்கள். உண்மையா...?

**பதில்:** கிளிப்பிள்ளை போல வீட்டில் மனைவி இருக்க குரங்குப் பிள்ளை தேடி அலையும் ஆண்களிடம் கேட்டுப் பாருங்கள். விளக்குவார்கள்.

வி.சுமன்,
களுத்துறை.

**கேள்வி:** மனைவி காரில் இருந்து இறங்குவதற்காகக் கார்க் கதவைத் திறந்து விடும் கணவன்மார் குறித்து என்ன கூறுகின்றீர்கள் பித்தரே?




**பதில்:** ஒன்றில் கார் புதிது; அல்லது மனைவி புதிது!

ராஜா,
சீதுவை.

**கேள்வி:** பிறப்பின் அர்த்தம் என்னவோ...?

**பதில்:** பாவத்தின் விளைவு!



ராஜா,
சீதுவை.

**கேள்வி:** பிறப்பின் மூலம் என்னவோ...?

**பதில்:** உணர்ச்சியின் கூடல்.

ராஜா,
சீதுவை.

**கேள்வி;** இறப்பின் தோற்றம் என்னவோ...?

**பதில்:** உணர்ச்சியின் அடக்கம்.

சுல்பிஹார்,
பேருவளை.

**கேள்வி:** காதலுக்கும் நட்புக்கும் என்ன வித்தியாசம்...?

**பதில்:** நட்பு குட்டி போடுவதில்லை...!

சிவா,
பதுளை.



**கேள்வி:** வாய்காட்டும் பெண் வாழ்க்கைக்கு உதவுவாளா...?

**பதில்:** குரைக்கிற நாய் வேட்டைக்கு உதவாது!

பி.சுதர்சன்,
வவுனியா.

**கேள்வி:** விவாகரத்து எடுத்த சிலர், மறுமணம் செய்து மகிழ்ச்சியாக இருக்கின்றார்களே...?



**பதில்:** Training எடுத்த ஆசிரியருக்கும் எடுக்காத ஆசிரியருக்கும் வித்தியாசம் இருக்கத்தானே செய்யும்...!

முஹைதீன்,
பொரளை.

**கேள்வி:** யாரை நம்பலாம்? யாரை நம்பக்கூடாது...?

**பதில்:** கொண்டவனை நம்பலாம்; கண்டவனையும் நம்பக்கூடாது.

ரஞ்சன்,
திருமலை.

**கேள்வி:** வீட்டுக்கு மருமகள் எப்படி அமையவேண்டும்?

**பதில்:** 'மறு' இல்லாத மகளாக அமைய வேண்டும்.

ஷோபனா,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:** சந்தியில் நின்று சேஷ்டை விடும் நாய்களை என்ன செய்யலாம் பித்தரே...?

**பதில்:** நான்குகால் நாய்கள் என்றால் கல்லைக் கையில் எடும். இரண்டுகால் நாய்கள் என்றால் காலில் இருக்கும் செருப்பைக் கையில் எடும்.

பி.ஹதீஷா,
நிந்தவூர்.

**கேள்வி:** உளவியல் படித்தவர்களும் உணர்ச்சி வசப்பட்டு விடுகிறார்களே...?

**பதில்:** இதைத்தான் ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்கிறார்கள்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 325

சொற்சிலம்பம் 325 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித்தினம் ஓகஸ்ட் 10 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஓகஸ்ட் 17 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.323 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவ்து பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல்மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 323

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 மா | 3 வா | 4 ஸை | ■ | 5 ஊ | ர் | 6 தி |
| 7 ச | ம | ர் | த் | 8 த | ன் | ■ | ண் |
| 9 தி | ன் | ■ | 10 தா | டி | ■ | 11 அ | ணை |
| ■ | 12 ம | 13 கா | ன் | ■ | 14 க | தி | ■ |
| 15 மு | க | டு | ■ | 16 எ | ண் | ப | 17 து |
| 18 க | ள் | ■ | 19 கு | மு | ■ | 20 தி | ரி |
| ப் | ■ | 21 நீ | தி | ப | 22 தி | ■ | த |
| 23 பு | கா | ர் | ■ | 24 து | ண் | ட | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல.325

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | |
| 6 | | | ■ | 7 | | | ■ |
| 8 | | | 9 | | ■ | 10 | 11 |
| | ■ | 12 | | ■ | 13 | | |
| ■ | 14 | | ■ | 15 | | ■ | |
| 16 | | ■ | 17 | | ■ | 18 | |
| 19 | | 20 | | ■ | 21 | | |
| | ■ | 22 | | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 325

### இடமிருந்து வலம்

1. திருமணம்.
4. சால்.
6. துப்பாக்கிச் சூடு.
7. காடும் காடு சார்ந்த இடமும்.
8. ஒரு காதணி வகை.
10. ரக.
12. இல்லற வாழ்வைத் துறந்தோர் அணியும்வேட்டியின் நிறம்.
13. ஒன்றை ஒத்தது.
14. பிசாசு.
15. ஈரமான இடத்தில் படரும்.
16. பெருக்கற் குறி.
17. குழு / கூட்டிச்சேர்.
18. கூடிய / அதிக.
19. குடும்பகாரன்.
21. இடம் பெயர / அசைய.
22. விநோதம் / அதிசயம்.

### மேலிருந்து கீழ்

1. புத்திசாதுரியம்.
2. வாடப்பண்ணு.
3. பேதிக்குத் தருவது. நெல்லிக்காயுடன் சேர்ந்து திரிபலையில் ஒன்று.
4. வெறுத்தலெல்லாம் இதுவல்ல.
5. சிரசில் எழுதப்பட்டது.
7. பின் அல்ல.
9. பாடல் /பாடியவன்/ குரங்கு.
11. மிடி/ வறுமை.
13. ஒரு தமிழ் மாதம்.
14. விலை அல்லது பெறுமதி குறித்து தர்க்கித்துப் பேசுதல்.
15. திண்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட நிலை.
16. யுத்து.
17. சோறு சமைப்பது இதன் மூலம்.
18. 'இது முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு.
20. திறப்பு.
21. ஆறு.

## சொற்சிலம்பம் போட்டி இல. 323

1. எம்.எம்.எப்.ஸப்னா,
132/2, முதலியார் வீதி,
அக்கரைப்பற்று - 04.
2. பா.பொன்நிலவன்,
167, ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.
3. வ.திருசங்கர்,
13/2, சேவியர் வீதி,
புத்தளம்.

1. க.சிவப்பிரகாசம்,
மொரட்டுவை.
2. எஸ். ஜெயச்சந்திரராசா,
வவுனியா.
3. திருமதி.எஸ்.மகேஸ்வரி,
கண்டி.
4. பி.செல்வநாயகம்,
கொழும்பு- 06.
5. இ.பி.யேசுரட்ணம்,
கொழும்பு - 08.
6. ஜே. றெக்ஸி,
ஹேனமுல்லை.
7. பொ.லதா,
வவுனியா.
8. அ.அங்கயர்க்கண்ணி,
திருகோணமலை.
9. எஸ்.பி.விஸ்வநாதன்,
மடுல்சீமை.
10. ப. ருசான்,
மட்டக்களப்பு.
11. திருமதி. சு.சுபத்திரா,
மாங்குளம்.
12. தாமோதரம் வடிவேல்,
செங்கலடி.
13. எஸ்.மோகனதாஸ்,
பூரிகன்டி.
14. பொ.பாலசுப்பிரமணியம்,
தம்பிலுவில்.
15. திருமதி.எஸ்.திலகம்,
டிக்கோயா.

# மனித உரிமைகளுக்கான ஐ.நா.ஆணையாளராக தமிழ்ப் பெண்மணி



தென்னாபிரிக்க நிறவெறி ஆட்சியில் 28 வருடங்கள் நீதிபதியின் பீடத்திற்கு அருகில் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்ட கறுப்பின தமிழ் வம்சாவளி பெண் வழக்கறிஞர் நவநீதம்பிள்ளை ஐக்கிய நாடுகளின புதிய மனித உரிமை ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

டேர்பனில் வறிய இந்திய வம்சாவளியினர் அதிகமாக வாழும் பகுதியின் பேரூந்து சாரதியொருவரின் மகளான நவநீதம்பிள்ளை பல்கலைக்கழக கல்வியைத் தொடர்வதற்கு அவரது சமூகமே உதவியது.

பட்டப்படிப்பை பூர்த்தி செய்த பின்னர் நட்டாலில் தனது சொந்த நிறுவனத்தை ஆரம்பித்தார். அப்பிராந்தியத்தில் முதலாவது பெண் வழக்கறிஞர் இவரே.

"எனக்கு வேறு வழியிருக்கவில்லை. கறுப்பினத்தவர் ஒருவரிடமிருந்து ஆலோசனையைப் பெற விரும்பாததால் எந்த சட்ட நிறுவனமும் எனக்கு வேலை வழங்கவில்லை" என ஒரு முறை நவநீதம் பிள்ளை பி.பி.சிக்கு தெரிவித்திருந்தார்.

நிறவெறி யுகத்தில் வழக்கறிஞராக பணிபுரிந்த வேளை நீதிபதியின் பீடத்திற்கு அருகில் செல்வதற்கு 28 வருடங்களாக நவநீதம்பிள்ளைக்கு அனுமதி மறுக்கப் பட்டது. அக்காலப் பகுதியில் நிறவெறி பொலிஸாரினால் அரசியல் கைதிகள் மோசமான நிலையில் தடுத்து வைக்கப் பட்டு சித்திரவதை செய்யப்படுவதை வெளிப்படுத்தியதில் பிள்ளைக்கு முக்கிய பங்குள்ளது.

"நெல்சன் மண்டேலா உட்பட றொபென் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை நான் அவ்வேளை பிரதிநிதித்துவப்படுத் தினேன்" என பி.பி.சி. பேட்டியில் அவர் குறிப்பிட்டார். "அவர்களுக்கு வழக்கறிஞர் ஒருவரை தமக்காக வாதாடுவதற்கு வைத்துக் கொள்ள உரிமை வழங்கப்படவில்லை. சிறைச் சாலையின் விதிமுறைகள் கூட என்னவென தெரிவிக்கப்படவில்லை." - என்றார் அவர்.

நவநீதம்பிள்ளை மாகாண நீதிமன் றொன்றில் தாக்கல் செய்த வெற்றிகரமான மனுவே நெல்சன் மண்டேலா உட்பட வேறு சிலருக்கும் குறைந்த அளவு அடிப்படை உரிமைகளாவது கிடைப்பதற்கு காரணமாக அமைந்தது. எனினும், இதன் பின்னர் தென்னாபிரிக்க பொலிஸாரினால் அவர் தொடர் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டார்.

நட்டாலில் அவர் பணிபுரிந்தவேளை நிறவெறியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக துணிச்சலுடன் குரல்கொடுத்தார் எனப் பழையதை நினைவு கூருகின்றார் தென்னாபிரிக்காவின் சர்வதேச நீதிமன்ற நீதிபதியொருவர்.

தென்னாபிரிக்க ஜனாதிபதியாக நெல்சன் மண் டேலா பதவியேற்றதும் நவநீதம் பிள்ளையை நாட்டின் உயர் நீதிமன்றத்தின் முதலாவது கறுப்பின பெண் நீதிபதியாக்கினார்.

எனினும் இதற்குச் சிறிது காலத்தின் பின்னர் ருவண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நவநீதம் பிள்ளை தெரிவு செய்யப்பட்டார்.

ருவண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்காக பணிபுரிந்தவேளையே, பாலியல் வல்லுறவும் இனவழிப்பின் ஒரு பகுதியே என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை பிள்ளை வழங்கினார். பாலியல் வல்லுறவு யுத்தத்தின் வெகுமதியாக முன்பு கருதப்பட்டது. இனிமேல் அது ஒரு யுத்த குற்றம் என வரலாற்று புகழ்மிக்க தீர்ப்பின் பின்னர் அவர் குறிப்பிட்டார்.

"ருவண்டா நீதிமன்றத்தில் பணியாற்றுவதற்காக அந்த மக்களிடம் சென்ற பின்னர் எனது தனிப்பட்ட விருப்புகள், உணர்வுகள், நெருக்க டிகள் எல்லாம் என்னை விட்டு அகன்று விட்டன. பாதிக் கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற சிந்தனை மாத்திரமே என்னிடம் காணப்பட்டது." - என நினைவு கூறுகின்றார் பிள்ளை.

அந்த நீதிமன்றத்தில் அவளை இருந்திராவிட்டால் எந்த மாற்றமும் நிகழ்ந்திராது என சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதிகளில் ஒருவர் பின்னர் குறிப்பிட்டார்.

நவநீதம்பிள்ளைக்கு கடுமையான ஆனால், நேர்மையான நீதிபதி என்ற பெயர் ருவண்டா சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் மூலம் கிடைத்தது.

எனினும், பிள்ளை தற்போது ஏற்றுள்ள சவால் மிகக் கடுமையானது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளராக பதவியேற்பது அரசியல் நிலக் கண்ணி வெடிகளுக்குள் காலடி எடுத்து வைப்பது போன்றது என்கின்றனர் விமர்சகர்கள்.

உலக நாடுகளின் மனித உரிமை நிலைவரம் குறித்து உரத்த குரலில் பேச முற்பட்ட மனித உரிமை ஆணையாளர்கள் தமது பதவிக் காலம் முடிவடையும் முன்னரே ஓய்வு பெற நிர்ப்பந்திக் கப்பட்ட கசப்பான அனுபவம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்திற்கு உள்ளமை சுட்டிக்காட்டப்பட்ட வேண்டியதொன்றாகும்.

அமெரிக்கா, சீனா, இஸ்ரேல் போன்ற நாடுகள் மனிதாபிமான சட்டம் மற்றும் சிவில் உரிமைகளை மீறுவது குறித்து குரலெழுப்பிய மேரி றொபின்சன் பின்னர் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராக பதவிக் காலம் நீடிக்கப்பட்ட 12 மாதங்களுக்குள் ஓய்வுபெற நிர்ப்பந்திக்கப்பட்டார். அவரிற்கு எதிரான தீவிர பிரசாரமே இதற்குக் காரணமாக அமைந்தது.

அயர்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மேரி றொபின்சன் மனித உரிமை துஷ்பிர யோகம் குறித்து வெளிப்படையாக விமர்சித்தவர். முன்னாள் யூகோஸ்லாவியாவின் மீது நேட்டோ மேற்கொண்ட குண்டு வீச்சு எவ்வளவு தூரம் நியாயமானது என்பது குறித்து மேற்கு நாடுகளுடன் வாதாடியவர் அவர்.

அவரிற்கு பின்னர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளராக பதவியேற்ற லூயிஸ் ஆர்பர் கனடாவைச் சேர்ந்தவர். இவரும் மனித உரிமைகளை பாதுகாப்பது குறித்து உரத்த குரலில் பேசியவர். வட கொரியா, மியன்மார் போன்ற அரசாங்கங்கள் தமது நாடுகளுக்குள் அவரை நுழைய அனுமதிக்க வில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகத்தை அமைக்குமாறு இவர் விடுத்த வேண்டுகோளை இலங்கை அரசு நிராகரித்தது. ஆர்பர் ஏன் குவான்டனாமோ தடுப்பு முகாமிற்கு விஜயம் மேற்கொள்ளவில்லை என்றும் இலங்கை கேள்வி எழுப்பியது.

அமெரிக்க காங்கிரஸ் தலைவர்களை அவர் சந்தித்த வேளை இதே கேள்வி வேறு விதமாக அவரிடம் எழுப்பப்பட்டது. ஆர்பர் அமெரிக்காவை மாத்திரம் விமர்சிப்பது ஏன் என்ற கேள்வியும் அப்போது அவரிடம் கேட்கப்பட்டது.

லூயிஸ் ஆர்பரின் சொந்த அரசாங்கமே அவரை கைவிட்டமையும் முக்கியமானது. கனடாவின் கொன்சவேடிவ் அரசாங்கம் அவரை முற்றிலுமாகப் புறக்கணித்தது.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சித்திரவதை செய்யப்படுவது குறித்து லூயிஸ் ஆர்பர் விமர்சித்தமையே அவர் எதிர்ப்பைச் சந்தித்தமைக்குக் காரணம்.

அமெரிக்காவின் முன்னாள் ஐ.நா. தூதுவர் ஜோன் போல்டென் போன்றவர்கள் அவற்றை கடுமையாக எதிர்த்தனர். அதன் தொடர்ச்சியாகவே ஆர்பர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

**ரஜீவன்**

மேற்குலகை விமர்சிக்க வேண்டாம் என மனித உரிமை ஆணையாளருக்கு விடுவிக்கப்பட்ட செய்தியே இது.

இவ்வாறான சூழ்நிலையிலே நவநீதம் பிள்ளை பதவியேற்றுள்ளார்.

புதிய ஆணையாளர் உலகின் ஒதுக்கப்பட்டவர்களுக்கு வலுவான குரல் கொடுப்பவராக விளங்க வேண்டும். வெளிப்படையாகப் பேச வேண்டும் என்பதே மனித உரிமை ஆர்வலர்களின் விருப்பமாகவுள்ளது.

பிள்ளை தனது கடந்த காலங்கள் மூலம் கிடைத்த பொதுமக்கள் ஆதரவு மற்றும் சர்வதேச அபிப்பிராயத்தை பயன்படுத்தி மனித உரிமை மீறல்கள் குறித்த கவனத்தை ஈர்க்கவேண்டுமென்கிறது ஐக்கிய நாடுகளின் செயற்பாடுகளை கண்காணிக்கும் அமைப்பொன்று.

ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியான ஒருவர் மனித உரிமை மீறல்கள் குறித்த விடயங்களைக் கையாளும் உலகின் உயர்மட்ட அமைப்பின் தலைவராகியுள்ளமை சிறுபான்மை மக்கள் மத்தியில் இயல்பாகவே நம்பிக்கை யொன்றை தோற்றுவித்துள்ளமையும் சுட்டிக் காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

இந்த நம்பிக்கையை அதிகமாக்கும் விதத்திலேயே நவநீதம்பிள்ளை பதவியேற்ற பின்னர் அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் அமைந்துள்ளன.

"உங்களுடைய உரிமைகள் மிக நீண்ட காலத்திற்கு மீறப்படுவது எவ்வளவு கொடூரமான விடயம் என்ற அனுபவத்துடனே நான் இப்பதவிக்கு வந்துள்ளேன். தென்னாபிரிக்கா இதனை எனக்குக் கற்று கொடுத்துள்ளது" என பதவியேற்ற பின்னர் அவர் குறிப்பிட்டுள்ளார். ✱

---

## 2000 இல் புலிகள்....

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*புரிந்துகொள்ளத் தவறியதால் எமது அமைதி முயற்சி அர்த்தமற்றதாகியது. இதனால், தன்னிச்சையாக நாம் பிரகடனம் செய்த போர் நிறுத்தத்தை கைவிட நிர்ப் பந்திக்கப்பட்ட பொழுதும், சமாதானத்தி லும் சிக்கலான இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காணும் மார்க்கத்திலும் நாம் உறுதிகொண்டு நிற்கின்றோம். தமிழ்த் தேசிய நெருக்கடிக்கு அமைதிவழியில் தீர்வுகாண நேர்வே அரசாங்கம் விடாமுயற்சியுடன் மேற்கொண்டு வரும் உன்னதமான முயற்சிக்கு எமது விடுதலை இயக்கம் தொடர்ந்தும் தனது முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்கிவரும்".*

புலிகளின் நான்கு மாத காலப்போர் நிறுத்தம் முடிவுக்கு வந்த சிலமணி நேரங்களுக்குள்ளேயே, யாழ் குடாநாட்டின் தென்முனையிலிருந்து புலிகளின் முன்னரங்கப் போர் அரண்களை நோக்கிப் பாரிய அதிரடிப் படையெடுப்பு ஒன்றை சிங்களத் துருப்புகள் தொடுத்தன.

- என்று 'தேசத்தின் குரல்' அமரர் அன்டன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார். பால சிங்கம் குறிப்பிட்டமையை போல,புலி கள் அப்போது மேற்கொண்ட நான்கு மாத காலப் போர்நிறுத்தம் முடிவுக்கு வந்த சிலமணி நேரத்தில் அரசப்படை கள் ஆரம்பித்த 'தீச்சுவாலை' நட வடிக்கை பெரும் தோல்வியில் முடிந்த தும், அந்தச் சமரை வீணே ஆரம்பித் துத் தனது கையை இலங்கை அரசு 'தீச்சுவாலையில்' சுட்டுக்கொண்டதும் பின் னர் கடந்துபோன சரிதங்களாகும். ✱

1960 இல் வெளியான
இரு கவிதைகள் இவை

## செந்தாமரை

குருதியுண் வேலோ தீயின்
கொள்ளியோ பாம்பின் சோரி
சொரி தலைதானோ செம்மை
தோய்சிறு சங்கோ என்று
மெருகுறு கமலப் பூவின்
விரைபொதி மொட்டே உந்தன்
பெருமெழில் போற்றல் காற்றைப்
பிடிப்பதே கையால் ஆகா!

நறு மணமுலவ வண்டு
நண்ணிட விரியும் வேளை
மறு வறு குளவிதன்னின்
மலர் திருமுகமோ மாதின்
உற விணைந்தலரும் கையோ
உள்நறுஞ் சாந்துஞ், செம்மை
நிறமும்மார் சிமிழோ என்றல்
நின்னெழிற் கொவ்வாக் கூற்றே!

வாழ்ந்தது முடித்து மூப்பில்
வளைந்தவர் போலக் கூம்பி
தாழ்ந்து நீ நிற்குங்காலும்
தாழ்ந்திலை அழகில் துன்பம்
சூழ்ந்த பெண் முகமோ ஒன்றித்
தோன்றவர் விரலோ என்று
ஆழ்ந்தெண்ணிப் புகழ்வதும் உன்
அழகினை அடக்காதம்மா!

-ச.வே.பஞ்சாட்சரம்

## கொள்ளை!

மையல் தருகின்ற மாலை - நிலவு
மெள்ள எழுகின்ற வேளை!
ஐயோ அவளங்கு வந்தாள் - நகை
ஆற்றிச் சிறுநடை செய்தாள்!

வளையல் குலுங்கின கையில் - ஆழி
வழங்கும் அலைகளோ குழலில்!
தொளையில் எழுகின்ற ஒலியும் - நாணித்
தோற்கும் வகையிலின் மொழிகள்!

அமுதக் கலசங்கள் இரண்டு - அவள்
அழகுக் கணிசெய்யும் நின்று!
மமதை நிறைந்தவரேனும் - அங்கு
மண்டியிடுவதோ, உண்மை!

தென்றலிலே உருவாகி - மலர்ச்
செண்டினிலே நிறைவெய்தி
கண்டொடு தேனையும் சேர்த்து - ஓர்
கலவை யெனும்படி நின்றாள்!

சிற்றோடை போல்நடை செய்வாள் - வானம்
தேக்கும் நிலவினைக் கொய்வாள்!
கற்பனைக் கவிஞர்கள் கண்ட - பெருங்
காப்பியத் தலைவியே யானாள்!

பூத்துக் குலுங்கிடும் முல்லை - அவள்
புன்னகைச் சோலையின் முன்னே!
பார்த்துக் கிடந்தேனே அந்தோ! - உளம்
பறிகொடுத்தேன், பகற்கொள்ளை!

-மு.பொன்னம்பலம்

## நான் கண்ட பாரதி...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில சமயம் நடந்தும் செல்ல வேண்டியிருக்கும்.

நடந்து செல்லும்போது பெரிய மைதானத்தை அடுத்துள்ள பாதையில் காளி கோவிலைச் சந்திக்க வேண்டி வரும்.

காளி கோவிலில் தீபாராதனை ஆவது தெருவில் போகும்போதே தெரியும்.

தீபாராதனை தெரிந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன, காளி கோவிலின் முன்னே ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் போவது தினமும் நிகழும் ஒரு சம்பவமாகும்.

சின்ன வயதில் அப்படிக் காளியைக் கும்பிட்டமைக்கும் காரணம் இருந்தது. காளி கோவிலைத் தாண்டியதும், கரிக்கோப்பு என்ற ஒரு கிறிஸ்தவ சவக்காலை உண்டு. அந்தச் சவக்காலையைப் பற்றிப் பலப்பல பயங்கரக் கதைகளைக் கல்லூரி உடன் மாணவர்கள் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருப்பார்கள். அந்த நாட்கள் இப்போது போலச் சனப்புழக்கமும், லைட் வெளிச்சமும் இல்லாத நாட்கள்!

எனவே, சுய பாதுகாப்பை நாடி, [illegible] வேண்டி, நெஞ்சில் உருவாகும் [illegible] போக்கிக் கொண்டு மேலே நடப்பது வழக்கம்.

இந்தப் பின்னணியில் பாரதியின் காளிப் பாட்டு முதலில் நெஞ்சைத் தொட்டதில் ஆச்சரியமில்லை அல்லவா? அந்தப் பாடல்களையே நவராத்திரி காலத்தில் துர்க்கைக்கு உரிய முதல் மூன்று நாட்களிலும் இசையோடு பாடி வந்தேன்.

*

எனக்கு பாரதியாரை அறிமுகம் செய்து வைத்த திரு.சிவ.சுப்பிரமணியம் அவர்களுக்கு பாரதியாரைப் பற்றியும், அவர் பெருமைகளைப் பற்றியும், அவர் கவிதைகளின் சிறப்புகளைப் பற்றியும் எடுத்துக் கூறியவர் யார்?

இலங்கையில், பாரதியாரின் பெயர் முதன் முதலில் அறிமுகமானது திருகோணமலையில்தான். இதில் சந்தேகம் இல்லை. இந்த அறிமுகம் 1926 ஆம் ஆண்டுக்கும் 1928 ஆம் ஆண்டுக்கும் இடையே நடைபெற்றது.

அந்த அறிமுகத்தைச் செய்து வைத்த பேரறிஞர் ஒருவரே, இந்தியாலும் பாரதியைப் பெருங் கவிஞர் வரிசையில் சேர்ப்பதற்குக் காரணகர்த்தராக இருந்தார்.

பிரிட்டிஷ் ஆட்சியின் கெடுபிடிக்குப் பயந்து புதுச்சேரியில் ஒளிந்து, மறைந்து வாழ்ந்த பாரதியாரைத் தமிழ் நாட்டு மக்கள் 'கஞ்சாக் கவிஞர்' என்றும், 'குடுகுடுப்பைக் கவிஞர்' என்றும் ஏளனம் செய்தனர்.

அவர் சென்னைக்குத் திரும்பி திருவல்லிக்கேணியில் காலமான போது 23 பேர்களே அவரது சடலத்தை மயானத்துக்கு எடுத்துச் சென்று தீமூட்டினர்.

பாரதியார் தமது தேசீயப் பாடல்களை அச்சிட்டு விநியோகித்த சமயத்தில், இலக்கணப் புலிகளும், தனித் தமிழ்ப் பண்டிதர்களும் அவரைத் 'தெம்மாங்குக் கவிஞர்' என்று ஒதுக்கினர்.

பாரதியார் இறந்த பின்னரும், வெகு காலம் வரை, அவருடைய மதிப்பையும் சிறப்பையும் உரிய அளவிற்கு தமிழ் நாட்டு மக்கள் உணரவில்லை.

இப்படியான ஒரு சூழ்நிலையில் அவரை முதன் முதலில் பெருங் கவிஞராக மதித்து தமிழ் நாட்டில் அவருக்கு அந்தஸ்துத் தேடிக் கொடுத்தவர் ஓர் இலங்கையர்தான்.

அந்த இலங்கையர்தான் திருகோணமலையில் பாரதியாரை முதன் முதலில் அறிமுகம் செய்து வைத்தவருமாவார்.

அந்தப் பெருமைக்குரிய இலங்கையர் யார்?

(தொடரும்)

## போர்நிறுத்தத்தின்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

குரியது என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

றொபேட் இவான்ஸ் தெரிவித்த கருத்தை மறுதலித்து, வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

இலங்கை அடைந்திருக்கின்ற முன்னேற்றங்களைச் சரியாகக் கணக்கில் எடுக்க ஐரோப்பிய ஒன்றியத்தினர் தவறிவிட்டார்கள். துரதிஷ்ட வசமாக அவர்கள் கொழும்பில் மாத்திரம் ஆராய்ந்து விட்டு இலங்கையின் நிலைமை கள் மற்றும் அபிவிருத்திகள் குறித்து அறிக்கை விடுத்திருக் கிறார்கள் என்று, ரோஹித போகொல்லாகம கூறியிருக்கிறார்.

இந்தக் கருத்தை மறுத்து அவருக்கு பதிலடி கொடுத் திருக்கிறார் இவான்ஸ்.

"பரந்துபட்ட அளவில் பலருடனும் கலந்துரையாடியே இந்த முடிவுக்கு வந்திருக் கிறோம்" என்று இவான்ஸ் கூறியுள்ளார்.

பயங்கரவாதம் என்று கோரி விடுதலைப் புலிகளை தடை செய்வித்த இலங்கை அரசுக்கு, அரச பயங்கரவாதம் மூலம் - அது செய்யும் அடாவடித்தனங்களுக்கு இப்போது கிடைக்கும் சாட்டையடியாக இவான்ஸின் கருத்து வந்துள்ளது.

மேலும் ஐரோப்பிய ஒன்றியக் குழுக்கள் இலங்கை வரப்போகின்றன. அந்தப் படலம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரைத் தொடரப் போகின்றது.

அரசு மனித உரிமை பாதுகாப்பு விவகாரத்தில் முன்னேற்றத்தைக் காட்டத் தவறினால், தெற்கில் இயங்கும் ஆடைத்தொழிற்சாலைகளின் லட்சத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வீதிக்குத் தான் வரவேண்டும். அப்போது தான் அரசு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து விழிக்கவேண்டியிருக்கும். *

# ராசி பலன்

04-08-2008 முதல் 10-08-2008 வரை

பொ.சந்திரலிங்கம்

### மேஷம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியசித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் மந்தகதியில் இருக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. நண்பர்களால் பிரச்சினை உருவாகலாம்.

### ரிஷபம்



கார்த்திகை 2.3.4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரிய சித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசகமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.

### மிதுனம்



மிருகசீரிடம் 3,4. திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். பதிலுக்கு உதவியை எதிர்ப்பார்ப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலேங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### கடகம்



புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### சிம்மம்



மகம், பூரம், உத்தரம் 1

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.

### கன்னி



உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலமில்லை, தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### துலாம்



சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசம் இருப்பர்.

### விருச்சிகம்



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை விலகும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

### தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### மகரம்



உத்தராடம் 2,3,4. திருவோணம், அவிட்டம் 1,2

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக் குறை நிலவும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### கும்பம்



அவிட்டம் 3, 4 சதயம், பூரட்டாதி 1,2,3

காரிய சித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

### மீனம்



பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்புப் பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். பெற்றோர் நலம், நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

# இந்திய அணிக்கு விழுந்த மரண அடி!

இலங்கை அணிக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் இந்திய அணிக்கு விழுந்தது மரண அடி என்றுதான் சொல்லவேண்டும். சுழல் மன்னன் முரளிதரனுடன் சேர்ந்து புதுமுகச் சுழல் வீரன் அஜந்த மெண்டிஸும் இந்திய அணியை போட்டுத் தாக்கினார்கள். மொத்தமுள்ள 20 விக்கெட்டுகளில் 19ஐ இந்தச் சுழல் சக்திகளிடம் தாரைவார்த்துவிட்டு இந்திய அணி படுதோல்வியைச் சந்தித்தது.

இத்தனைக்கும் இந்திய அணியில் உள்ள துடுப்பாட்ட வீரர்கள் உலக வல்லவர்கள்.



அதிக சதத்துக்குச் சொந்தக்காரரான சச்சின் டெண்டுல்கர், இந்தியாவின் பெரும் சுவர் ராகுல் டிராவிட் மற்றும் சௌரவ் கங்குலி, வி.வி.எஸ்.லக்ஸ்மன் ஆகியோர் அனுபவ வீரர்களாக அணியில் இணைக்கப்பட்டிருந்தார்கள். ஒருநாள் மற்றும் ருவென்ரி/20 போட்டியில் இந்திய இளம் வீரர்கள் அசத்தினாலும், டெஸ்ட் போட்டிக்கு அனுபவ வீரர்கள்தான் தேவையென்ற ஒரே நோக்கில் மூத்த வீரர்களை அணிக்குள் இணைத்தது இந்தியத் தேர்வுக்குழு. ஆனால், மிஞ்சியது அவமானகரமான தோல்விதான்.

சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங், ரோகித் சர்மா போன்ற இளம் வீரர்கள் டெஸ்ட் அணிக்குள் இணைக்கப்பட வேண்டியவர்கள்தான் என்பதை முதல் டெஸ்ட் முடிவு காட்டி நிற்கின்றது. திறமைக்கு வயது தடையில்லை என்று எத்தனை காலம்தான் கூறிக்கொண்டிருக்க முடியும். மூத்த வீரர்கள் தங்களது நிலைமையை உணர்ந்து ஓய்வுபெறுவதே நல்லது.

இலங்கை அணியின் புதுமுகச் சுழல்பந்துவீச்சாளரான அஜந்த மெண்டிஸின் பந்துவீச்சை சரியாகக் கணித்து ஆட முடியாதவர்கள் அனுபவ வீரர்கள் என்ற பெயருடன் அணிக்குள் எத்தனை காலம் இருக்கப்போகின்றார்கள்? டெஸ்ட் போட்டிகளில் நிதானித்து - ஆராய்ந்து - பொறுமையாக ஆடுவதற்கு போதிய நேர அவகாசம் கிடைக்கும். அதனைக் கூட இந்திய வீரர்கள் எண்ணவில்லை. வருவதும் போவதுமாக இருந்த இந்த அனுபவ வீரர்கள் இனியும் அணிக்குள் இருக்கவேண்டியவர்களா என்பதை தேர்வுக்குழுதான் சிந்திக்க வேண்டும்.

முன்னர் முரளிதரனை எப்படிச் சமாளிக்கலாம் என்று போரிட்டவர்கள் தற்போது முரளிதரன் - மெண்டிஸ் கூட்டணிக்கு எதிராக எப்படிப் போரிடுவது என்று தங்களது மூளையைக் குடைந்து கொண்டிருக்கின்றார்கள்.



ஒரு ஓவரில் உள்ள ஆறு பந்துவீச்சுகளையும் வெவ்வேறு விதமாக - அதாவது ஆறு விதமாக வீசக் கூடியவர் மெண்டிஸ். அண்மையில் நடைபெற்ற ஆசியக் கிண்ணப் போட்டியில் ஆரம்பத்திலிருந்தே அசத்தி வந்த அவர், தொடரின் இறுதிப் போட்டியில் தனியொருவராக இந்திய அணியை வீழ்த்த உதவினார். இறுதிப் போட்டியில் ஆறு விக்கெட்டுகளை வீழ்த்திய அவர், தொடர் நாயகன் மற்றும் ஆட்ட நாயகன் விருதுகளை வென்றெடுத்தார்.

ஒருநாள் போட்டிகளில் காட்டிய அதீத திறமை மெண்டிஸுக்கு டெஸ்ட் போட்டிகளில் வாய்ப்புக் கிடைக்க வசதியாயிற்று. அவரது முதல் டெஸ்ட் களம் இந்திய அணிக்கு எதிராக எஸ்.எஸ்.ஸியில் நடந்த முதலாவது டெஸ்ட் போட்டியாகும். இந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய இலங்கை அணி 600 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலளித்த இந்திய அணியை முரளிதரனுடன் சேர்ந்து மெண்டிஸும் அச்சுறுத்தினார். முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள், அதுபோல இரண்டாம் இன்னிங்ஸிலும் 4 விக்கெட்டுகள் என மொத்தம் எட்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தினார் மெண்டிஸ்.



இதன் மூலம் பங்கேற்ற முதல் டெஸ்ட் போட்டியிலேயே அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இலங்கை வீரர் என்ற சாதனையைப் படைத்தார் அஜந்த மெண்டிஸ். இதற்கு முன் 1985-86ஆம் ஆண்டு இலங்கை வீரர் குருப்புராச்சி பாகிஸ்தானுக்கு எதிராக 7 விக்கெட்டுகளை வீழ்த்தியதே சிறப்பான பந்துவீச்சாக இருந்தது.

முரளிதரன் புகழ்பாடியவர்கள் தற்போது அஜந்த மெண்டிஸின் புகழ்பாட அவரது சாதனைகள் களம் அமைத்துக் கொடுத்துள்ளன. அதற்காக உலக சாதனைகள் பலவற்றுக்குச் சொந்தக்காரரான முரளிதரனை மறக்கமுடியுமா?.

இங்குள்ள சில ஊடகங்கள் முரளிதரனை குறைத்து மதிப்பிடுவது போல் செய்தி வெளியிட்டுள்ளமை சரியானதொன்றல்ல. பல தடவைகள் ஆட்டநாயகன் விருது வென்ற முரளிதரன், முதல் டெஸ்ட் போட்டியில் அஜந்த மெண்டிஸிற்கு விட்டுக்கொடுத்திருக்கலாம்தானே என்று ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

போட்டியின் வெற்றிக்கு வித்திட்டவர்களில் மிக முக்கியமானவரையே போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருது வழங்கிக் கௌரவிக்கின்றனர். முதல் டெஸ்ட்டில் அந்தப் பெருமைக்குரியவர் முரளிதரன் என்பதைப் போட்டி ஏற்பாட்டாளர்கள் குழு தீர்மானித்து முரளிக்கு விருதை வழங்கியது. அதை மாற்றச் சொல்ல இந்த ஊடகங்கள் ஏன் முயல்கின்றன? தங்களுக்கு இன்னுமொரு சிறந்த சுழல் வீரன் கிடைத்துவிட்டான் என்ற 'இறுமாப்பில்' தான் இந்த நிலையோ தெரியவில்லை.

இன்னுமொரு சுழல் வீரன் கிடைத்துவிட்டான் என்ற நிலையில் இலங்கை அணியின் பல வெற்றிகளுக்கு காரணகர்த்தாவான முரளிதரனை குறைத்து மதிப்பிடுவது கிரிக்கெட்டுக்கே ஒரு சாபமான செயல் என்றுதான் கூறவேண்டும்.







இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பொக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லான்ட்மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2008, ஆகஸ்ட் 03 ஆம் திகதி வெளியிடப்பட...